திரட்டு

சிறந்த மாதாந்தர கட்டுரைப் பொக்கிஷம்

1127

ஜயவருஷ

கார்த்திகை — மார்கழி

1127
6-54
OFFICE OF THE REGISTRAR OF BOOKS
18 DEC 1954
MADRAS

நேருவே கதியா?

கை வளர்ந்த கதை

[illegible]ளித்த நாதப்பிரமம்

பழமையும் புதுமையும்
(குச்சாமாமாவின் சிறு தொடர்கதை)

இந்தியப் படங்களின் குறைகள்

கிழக்கு ஆசிய நாடுகள் ஒன்றே

...ம் பல சுவையான ஆராய்ச்சிக்
...ள், கதைகள், உண்மை சம்பவங்கள்

72
N211, N53 54
N54-2-1
198754

Dec. 1954
Vol. 2. No. 1.
128 Pages

8 அணா

SAMSONS DRESSES



ஸாம்ஸன்ஸ்
ரெடிமேட்
ஆடைகள்

★

சிறந்த துணி வகைகளில், நாகரீகமான பாணியில் நீடித்த உழைப்புக்காக தயாரிக்கப்படுகின்றன.

★

ஆடவர், பெண்டிர், சிறுவர் யாவருக்கும் தேவையான ஆடை வகைகள் யாவும் கிடைக்கின்றன.

★

பெங்களூர் டிரஸ்
மானுபாக்சரிங்
கம்பெனி,
12, லால் பாக் ரோட்,
பெங்களூர் - 2.

A Reader Says - - - -

"I wish to express my sincere opinion that I find the various articles in THIRATTU not only short, sweet, crisp and entertaining, but very educative, useful and uplifting. In recent months, I have read THIRATTU from the first page to the last, and as I read I pray "May this monthly grow from strength to strength and continue to provide to mankind—old and young—nourishing food for "Thought"—which, to borrow Emerson's word, "is the ancestor of action."

It, therefore, follows that the right literature provides the right food for the right thought leading to the right action on the part of mankind. Thus it may be said that THIRATTU has from the very beginning started to serve humanity at large in a right royal way. After all, there is nothing in the world which gives greater happiness to mankind than service to humanity in one form, shape or other. With all best wishes.

★ மக்கள் சமுதாயத்திற்கே ஒரு வரப்பிரசாதம்

★ உங்கள் எதிர்காலத்தைப் பற்றி இனி நீங்கள் குதூகலமாயிருக்கலாம்.

பால ஜோதிஷம்

அன்னை பராசக்தியின் அனுக்கிரகத்தால், நவகிரகங்களின் சார கதிகளை குருகுல வாசத்தின் மூலம் அதிபால்யத்திருந்தே ஆராய்ந்தறிந்த

பால ஜோதிஷர்

ஏராளமான பாராட்டுகள் குவியப்பெற்ற சக்திகுமாரர்

ஜாதகம் கணிக்க	ரூ. 5—0—0
தசாபுக்தி வாரியாக ஆயுள் முழுவதும் பலன் எழுத	ரூ. 25—0—0
ஜாதகப் பொதுப் பலன்கள் எழுத	ரூ. 10—0—0

ஜாதகம் அல்லது பிறந்த வருஷம், மாதம், தேதி, நேரம் அல்லது எழுதும் நேரம் தேவை.

விலாசம் :— **பால ஜோதிஷா ஆச்ரமம்**

13, T. P. KOIL STREET, TRIPLICANE, MADRAS-5.

உலகத்திலுள்ள இதர மைகளுக்கு ஓர் அறைகூவல்

சுலேகா

பௌண்டன் பேனு இங்க்
("எஸ்-100" ஸால்வெண்ட் கூடியது)

தரத்தில் உயர்ந்தது

உயர் ரக பொருள்களை வாங்கி எமது
சுதேசியை பெரிதும் ஆதரியுங்கள்

SULEKHA WORKS LTD.

SULEKHA PARK :: CALCUTTA - 32

Branches : **Delhi - Bombay - Madras**

மதராஸ் ஆபீஸ்: 5, ஸ்டிரிங்கர் தெரு, சென்னை - 1.

ஸ்ரீ அம்பிகா எம்போரியம்

தாசர்புரம், திருநீண்டயூர் போஸ்டு
திண்ணனூர் ரயில்வே ஸ்டேஷன்.



உத்தரவாதமான பி. அண்டு சி. மில்
ரெடிமேட் ஆடைகளுக்கும் நூதன பைகளுக்கும்
சிறந்த இடம்:

உரிமையாளர்
எம். கே. ரங்கனுதன்

திரட்டு பொருளடக்கம்

டிசம்பர் 1954

ஜனநாயகி	5
சிவனளித்த நாதப்பிரமம்	6
கை வளர்ந்த கதை	8
சூடிக்கொடுத்த சுடர்க் கொடி	12
திருச்செந்தூர்	17
நிர்வாணம் நிவர்த்தி செய்யும்	19
வருஷோற்சவம்	21
இறப்பிலும் இரை	22
வாய்ப் பேச்சிலும் வீரமா?	23
முன்ஜாக்கிரதை	24
நேருவே கதியா?	25
மணமும் மரணமும்	26
குட்டிப் பிராணிகளுக்கும் பராமரிப்பு உண்டு	27
காந்திக்கு சாந்தி யளிக்குமா?	28
கிழக்கு ஆசிய நாடுகள் ஒன்றே	30
வழிபாடு	33
பெண்களும் வாழ்க்கையும்	38
போர் இன்னும் ஓயவில்லை	40
பரிசுக்கேற்ற பத்திரிகைகள்	43
காளையும் குதிரையும்	46
கீதையைப் படிப்பது எப்படி?	49
பெண் அரசியின் துறவு	53
தவளையின் எச்சரிக்கை	56
ரிச்ய ச்ருங்கர்	57
நஷ்டம் செய்தவனுக்கு நஷ்ட ஈடா?	64

விருக்ஷத்திற்கும் 'ஆபரேஷன்!' 65
இருக்குமிடத்தில் தேடு 67
எழுத்துப் பிரவாகம் 69
கல்நெஞ்சனை மாற்றிய கருணைக்கடல் 71
கால்நடைகள் செல்வமாக 75
போதை அளித்த உதை 77
கார்த்திகை தீபம் 78
மங்கையரின் மகுடம் 81
மீன் வயிற்றில் 'மார்க்கெட்!' 86
விகடகவி 87
குருவை மீறின சீடர்களின் கதி 88
பேசாத ஊமை பெருங்கவியானர் 90
மனிதக் கோழிகள் 94
கறுப்பு இந்தியரும் சிவப்பு இந்தியரும் 97
டாக்டர் நடிப்புக்கு திடீர் சிறப்பு 98
வீட்டுக்குள் பாம்பு 99
பழமையில் மோகம் 100
அமெரிக்கத் திரையும் இந்தியப் படங்கள் குறையும் 110
இரு குடங்கள் 112
தொல்லை தரும் தேனீ 113
மணவாழ்க்கை 115
விசித்திரமான விவாகச் சடங்குகள் 125

198754
சென்னை-600 00

"THIRATTU" Tamil Monthly Digest. Vol. 2. No. 1

திரட்டு

சிறந்த மாதாந்தரக் கட்டுரைப் பொக்கிஷம்

டிசம்பர் ○ 1954

ஜனநாயகி

●

ஜனநாயகி ஜெகந்நாயகி
ஜெய பாரத சக்தி
ஜெகமே யருளமுதாக்கிடும்
ஜெய பாரத சக்தி

அழகே நிலையற மாயிரம்
அணிபூணுவை சக்தி
மொழிகோடியி லொளி வீசிடும்
முடி சூடினை சக்தி! (ஜனநாயகி)

பலகோடிகள் பணிந்தேத்திடும்
பரதாத்மிக சக்தி
உலகோர்களுமுயர்வா மென
உறவாடிடும் சக்தி (ஜனநாயகி)

—சாலிவாஹனன்

''பூதங்களொத்துப் புதுமை தரல் விந்தையெனில்
நாதங்கள்சேரு நயத்தினுக்கு நேராமோ.''

சிவன் அளித்த நாதப்பிரமம்



வேதங்கள் நான்கு. அதில் ஒன்றான ஸாமவேதத்தை 'ஸாமகானம்' என்று அழைப்பதுண்டு. ஏனென்றால் ஸாமவேதத்திலுள்ள வார்த்தைகளனைத்தையும் சங்கீதத்தைச் சேர்ந்த சப்த ஸ்வரங்களில் ஸ்வரப்படுத்தப்பட்டுள்ளன. வேதங்களுக்கு உபவேதமென்று சொல்லப்படும் கிளைகளுண்டு. ஸாமவேதத்தின் உபவேதம் சங்கீதம்தான். இந்தக் கிளை வேதத்தைக் 'கந்தர்வம்' என்றழைப்பர். இது சங்கீதத்தைப் பற்றி மட்டுமல்லாமல் நாட்டியத்தைப் பற்றியும் ஸாமவேதம் விவரிக்கிறது.

வேதங்கள் மனிதனின் சிருஷ்டியல்ல. இவை தெய்வாம்சம் பொருந்தியவை. கந்தர்வ வேதத்தில் அடங்கியுள்ள சங்கீதம் சிவபெருமானாலேயே அப்யஸிக்கப்பட்டுப் பிரமாவிற்கும் உபதேசிக்கப்பட்டது. பிறகு பிர்மா, தனது பத்தினியான சர்ஸ்வதிக்குச் சங்கீதத்தைக் கற்றுக் கொடுத்தார். சரஸ்வதி ஒரு கையில் வீணையும் மற்றொரு கையில் ஏடும் தரித்ததிலிருந்து சங்கீதமும் இலக்கியமும் வாழ்க்கையில் சரிசமமான முக்கியத்துவம் பெற்றவையென்பதற்கு அத்தாட்சியாகும். சரஸ்வதி நாரதமுனிக்குச் சங்கீதத்தையும், ரம்பைக்கு நாட்டியத்தையும் கற்றுக் கொடுத்தார்.

சப்த ஸ்வரங்களுக்கு ஸாம வேதத்தில் காணும் ஆதாரங்களிலிருந்து சங்கீதம் இயற்கையை யொட்டினதென்று

புலனாகிறது. முதல் ஸ்வரமான 'ச' என்பதற்கு மயிலின் குரலும் இரண்டாவது ஸ்வரமான 'ரி' என்பதற்கு சட்கம் என்ற பக்ஷியின் குரலும் மூன்றாவது ஸ்வரமான 'க' என்பதற்கு ஆட்டினுடைய குரலும், நான்காவது ஸ்வரமான 'ம' என்பதற்கு கிரௌஞ்ச பக்ஷியின் குரலும், ஐந்தாவது ஸ்வரமான 'ப' என்பதற்கு கோகில பக்ஷியின் குரலும், ஆறாவது ஸ்வரமான 'த' என்பதற்குத் தவளையின் குரலும், ஏழாவது ஸ்வரமான 'நி' என்பதற்கு யானையின் குரலும் மூலமாகின்றன.

இயற்கையோடு இவ்வளவு நெருங்கிய தொடர்பு கொண்டுள்ள சங்கீதம் தெய்விகத் தன்மைபெற்றது தான் என்பதில் என்ன சந்தேகம்?

Mohan Dress Manufactures

(SPECIALIST IN B & C DRESSES)
No-9, ISSAC STREET
P. T. MADRAS-3
Fashion Ready-made articles available from our sales depot at

Prop: E. K. V.

9/11, Evening Bazaar,
Moore Market.

குறைந்த சார்ஜில் ரூம்கள் வாடகைக்கு விடப்படும்
வெளியூர்வாசிகளுக்கும் கப்பல் பிரயாணிகளுக்கும்
தங்குவதற்கு இடவசதி உண்டு
Prop: D. வேலாயுதம் பிள்ளை

தி சௌத் இண்டியன் லாட்ஜிங்

நெ. 18 வானல்ஸ் ரோடு, எழும்பூர் P. O. மதருஸ்-8.
S. I. R. ஐஸ் பாக்டரிக்கு எதிரில் இருக்கிறது.
எழும்பூர் ரயில்வேஸ்டேஷனுக்கு தென்புறம் ஒரு பர்லாங்.

கை வளர்ந்த கதை

கல்லிலே கலையூட்டும் கலையாக மின்னியது கடல் மல்லையில், ஸ்தலசயனத் திருக்கோயிலில் திகழ்ந்ததொரு சிலை. உலகங் காக்கும் ஆதிமுதல்வனின் அற்புத உருவத்தை அச்சு வார்த்திருந்தான் ஆதிச் சிற்பி ஒருவன். நாடெங்குமுள்ளோர் ஓடோடியும் வந்து, உள்ளம் ஒருமித்து வணங்கும் வனப்பு வாய்ந்திருந்தது அச்சிலை. இது ஒரு காலத்தில்; ஆனால் பிற்காலத்தில், அதே காலமென்னும் கட்டுக்கடங்காத பொறியின் சலனத்தில், கடல் மல்லைத் தலமே உருமாறி வந்தது. கலையின் சிகரங்களாய் மிளிர்ந்த சிற்பக் களஞ்சியங்களெல்லாம், முன்னையோரின் முதிர்ந்த கலைஞானத்திற்கு எடுத்துக் காட்டு என்று எடுத்துச் சொல்லும்படியான அளவுக்குத் தோற்றம் சிதைந்து கொண்டுவந்தன. அந்நிலையில் ஸ்தல சயனக் கோவிலிலுள்ள ஆண்டவன் சிலையும் ஒருவிதப் புதிய மாறுதலையடைந்தது. இறைவனின் வலது கை மணிக்கட்டு உடைந்து போய்ப் பார்ப்பவர் உள்ளங்களில் முள் தைத்தாற் போன்ற ஓர் உணர்ச்சியை ஊட்டியது.

கலைஞானத்துடன் கலா சேவையின் ஆர்வமும் நிறைந்த நரசிம்ம பல்லவன் அச்சிலையைப் பார்த்தான். சிலையிலுள்ள கலை பழுதுபட்டிருப்பதைக் கண்டு அவன் மனம் வருந்திற்று. ஆனால் சிலையில் பிரதிபலித்த இறைவனைக் கண்டதும் 'அவரது திருவுள்ளம் அதுவே போலும்' என்று தீர்மானித்தான்.

'உடைந்த கையை ஒழுங்கு செய்யலாம்' என்றனர் சிலர். அவர்களுடைய சொற்களை எதிர்த்து, "இறைவன் தனக்கு மனமிருந்தால் தானாகவே தன் கையையும் வளர்த்துக்கொள்வார்" என்று கூறிவிட்டான் பல்லவன்.

காலம் பின்னும் நகர்ந்து கொண்டேயிருந்தது. இறைவன் கையோ வளரவில்லை. நரஸிம்ம பல்லவனுக்கு மிகவும் ஏக்கம் உண்டாயிற்று. புதிய பல கலைத் தெய்வங்களைச் சிருஷ்டித்த அவன், அந்தப் பழைய சிலையின் கை தானாக வளராததை நினைத்து, இராப் பகலாக எந்நாளும் உருகத் தொடங்கினான். பெரியவர்கள் சமாதானஞ் செய்ய வந்தார்கள்; கலைஞர்கள் தைரியமூட்டினார்கள். ஆனாலும்

நெஞ்சத்தின் கவலை கொஞ்சமும் குறையவில்லை. சிலையின் கை வளர்ந்தால் தான் அரசனின் ஜீவனுக்கு ஒரு நிம்மதி பிறக்கு மென்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

சிற்பிகளுள் தலைவனுக விளங்கிய லலிதாலயன் அரசனின் நிலையை அறிந்தான். ஏழாம் நூற்றுண்டுச் சிற்பிகளுக்குள் தலைசிறந்த கலைஞனை அவனுக்கு ஒரு யோசனை உண்டாயிற்று. "கல்லைச் செதுக்கிய ஆதிக் கலைஞன், சிலை செதுக்கும் நேரத்தில் ஏதுமொரு குறைப்பாட்டைப் பெற்றிருக்க வேண்டும்; இல்லையேல் சிலையின் வலது கை மணிக்கட்டு உடையக் காரணமில்லை" என்று எண்ணிய லலிதாலயன், உடைந்த கையைத் திரும்பவும் உற்பத்தி செய்துவிடுவது என்று தீர்மானித்தான்.

மறுகணமே சிற்றுளியுங் கல்லுமாய்ச் சிருஷ்டித் தொழிலில் ஈடுபட்டான் லலிதாலயன். உளிகளின் இனிய ஓசை ஒரு கணத்தில் வானத்திற் கலந்து, திசையெங்கும் பரவியது; அரசன் செவிக்கும் எட்டியது.

பெரியதொரு அபசாரம் நடப்பதாகக் கருதிய மன்னன் ஸ்தலசயனத்தை நாடி ஓடி வந்தான். லலிதாலயனின் வேலையை நிறுத்தும்படி ஆணையிட்டு, 'ஆண்டவன் சிலையை மாற்ற மனிதனல் முடியாது. பெரியதொரு தீவினை புரிந்தாய்' என்று கர்ஜித்தான்.

லலிதாலயன், "அரசே! என் கலையின் மீது ஆணையிட்டுக் கூறுகிறேன். உடைந்த கையைச் சரிசெய்து, செவ்விய கையாகச் சமைப்பது பாவமில்லை. கலைஞனை எனது கடமையைத் தான் நான் செய்தேன்" என்றுன்.

பல்லவனுக்கோ கலைஞனின் கூற்று நாராசம்போல் தைத்தது. "கூடாது! வேண்டாம்" என்று தடுத்தான். லலிதாலயன் தன் எண்ணத்திற்கு அரசன் உடன்படாததை யெண்ணி வருந்தியதுடன், "அரசே! உங்களுடைய பக்தியின் பக்குவநிலையைக் கண்டு நான் பாராட்டுகிறேன். ஆனல் கலைஞனை நான் என் கடமையைச் செய்யத் தான் வேண்டும்" என்று கம்பீரமாய்ப் பேசினன்.

"உலகம் போற்றும் உன்னத சிற்பியென்றாலும், உன்னல் ஆகாத காரியம் இது. அடாத செயலுங் கூட, போய்விடு இங்கிருந்து" என்று ஆணையிட்டான் மன்னன்.

"அரசே! கடைசியாக ஒன்று வேண்டுகிறேன். மன்னிக்க வேண்டும். இச்சிலையின் கையைச் சரிப்படுத்தாமல் தவறிழைத்தேனனல், என் கைகளை வெட்டிவிடுங்கள். ஆனல் இத்தொழிலைத் தடுக்காதீர்கள். தடுத்தால் எனக்கும் நிம்மதியில்லை; உங்களுக்கும் நிம்மதி உண்டாகாது" என்று மன்றாடினன் லலிதாலயன்.

அரசன் அதையும் மறுக்கவே, லலிதாலயனுக்குக் கோபமுண்டாயிற்று.

"அரசே! இது தான் இந்த நாட்டில் கலைஞனுக்குக் காவலன் அளிக்கும் சன்மானமா?" என்று சீறினன்.

அரசனுக்கும் சீற்றம் பிறந்தது. அதன் விளைவால் லலிதாலயன் தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டான். கண்ணீர் வெள்ளத்தைப் பெருக்கிக்கொண்டு கலைஞன் லலிதாலயன் கடவுளின் சிலையைக் கடைசி முறையாகப் பார்த்துவிட்டுச் சென்ருன். கண்ணீரைத் துடைத்துக் கொண்டு, 'இந்த மட்டும் தவறு நடக்காமல் கடவுளைக் காப்பாற்ற முடிந்ததே' என்ற நிம்மதியுடன் அரசன் சென்ருன்.

காலம் மீண்டும் சென்று கொண்டேயிருந்தது. லலிதாலயனுடைய வாழ்வுப் பாதை அவனுக்கு இன்பமாகத்தோன்றவில்லை. கடவுள் கையைத் திருப்பணி செய்வதன் மூலம் செம்மைப்படுத்தும் உயர்ந்த பாக்கியம் தனக்குக் கிட்டவில்லையே என்று புழுங்கித் தவித்தான். அச்சமயம் அரசனின் நிலையும் அவனுக்குத் தோன்ருமலில்லை. அறியாமையால் மன்னன் தன்னை அவதிக்காளாக்கித் தானும் ஆளாவதை எண்ணியவன், அதற்கு ஓர் உபாயத்தை நாடினன்.

மன்னன் அறியாமல் அந்தத் திருப்பணியை எப்படியுஞ் செய்துவிட வேண்டுமென்று அவனுக்குத் தோன்றியது. உடனே மாறுவேடம் தாங்கிக் கொண்டு, கடல் மல்லை நகருக்குள் நுழைந்தான். கலையின் ஆர்வத்தால் துணிந்து சென்றவன், ஸ்தல சயனக் கோயிலுக்குள் புகுந்தான். "என் தந்தையே! நான் செய்வது தவருனால் என்னை மடித்துவிடு. இல்லையேல் என்னை வாழ்விப்பதுடன் நீயும் அங்கஹீனமின்றி வாழ்ந்திரு" என்று அலறினன்.

அலறலினூடே உளிகளின் நாதமும் கலந்தது. இரவு நேரத்தில், நிலவொளியின் துணைகொண்டு, இறைவனின் மணிக்கட்டைச் சரிசெய்யும் காரியத்தில் முனைந்தான். திருப்பணி செய்ய ஆரம்பிக்குமுன் இருந்த பயமும் பீதியும் பஞ்சாய்ப் பறந்தன. அப்போது ஒருவிதக் கலைவெறி அவனுடைய சூழ்நிலையின் மாய வாழ்விலிருந்து அவனைத் தனியே பிரித்து வைத்திருந்தது.

விநாடிகள் சென்றன. நாழிகைகளாகவும் நேரம் அகன்றது. பொழுது புலரும் தருணமும் நெருங்கிவிட்டது.

கலைஞன் வேலையை முடித்தான். காலைக் கதிரவன் ஒளியில் கடவுளைக் கூர்ந்து நோக்கினன். "ஆண்டவனே! எல்லாம் உன் அருள்! என் கடமை முடிந்துவிட்டது. இன்றே என் வாழ்நாள் நோக்கம் நிறைவேறியது" என்று கூறி வாழ்த்தி

விட்டு, ஓடினான். எந்த உணர்ச்சியின் வேகம் அவனை அங்கு இழுத்து வந்ததோ, அதே உணர்ச்சியின் வெற்றியால் அகமலர்ந்து ஓடி மறைந்தான். அவனுக்கு இனி வாழ்வும் சாவும் ஒன்று தான். வாழ்வின் நோக்கம் முடிந்தவர்க்குச் சாவு ஒரு வரப்பிரசாதம் தானே! ஆனால் அவன் ஓடி மறைந்ததற்குக் காரணமில்லாமல் இல்லை. தேசப் பிரஷ்டம் என்ற தண்டனையை மீறித் தான் உள் நாட்டில் நுழைந்த உண்மை பஹிரங்கமாக வேண்டாம் என்பதொன்று. மன்னன் கை வளர்ந்த கவின் சிறப்பைக் கண்டு, அது இறைவனின் எண்ணமென்று எண்ணி மகிழட்டும்' என்று அவனது பரந்த உள்ளம் விரும்பியது மற்றொன்று.

அவ்வாறே அரசன் செய்தியறிந்து கோயிலுக்குள் ஓடி வந்தான்.

"ஆகா! என்னே இறைவனின் திருவுள்ளம்! தானாக வளர்ந்த தாமரைக் கரத்தை என்னென்பேன்" என்று உள்ளம் பூரித்துப் போற்றினான். அச்சமயம் அவனுக்கு, லலிதாலயனை வருவித்து அப்பேரதிசயத்தைக் காட்டவேண்டுமென்று தோன்றியது.

தேசப் பிரஷ்டம் செய்யப்பட்டவனைத் தேடிச் சென்றனர் பலர். லலிதாலயனும் அழைத்துக்கொண்டு வரப்பட்டான்.

"சிற்பியே! உன் கை வண்ணம் இப்படியொரு கையை வளரச் செய்ய முடியுமா? இறைவன் கை தானாக வளர்ந்த நேர்த்தியைப்பார். என் சொல்லை எதிர்த்துச் தகாத செயலைச் செய்ய முற்பட்டாயே! இப்பொழுது என்ன சொல்கிறாய்?" என்றான் அரசன்.

பலர் முன்னிலையில் தன்னை அவமானஞ் செய்தாலும், ஆண்டவன் அருளையே உயர்த்திப் பேசும் அரசனை லலிதாலயன் மாறான பார்வையுடன் நோக்கவில்லை. அதற்கு மாறாக, "அரசே! இறைவன் என் பணிகொண்டார்" என்று பதிலாகச் சொன்னான். அதன் இரண்டு பொருள்களுள், தனக்குத்தோன்றிய பொருளையே அரசன் கற்பித்துக்கொண்டான். சரித்திரமோ அதன் இரண்டாவது பொருளைச் சிலாசாஸனமாகப் பொறித்து வைத்துக் கொண்டது.

இல்லையேல் பல்லவ மன்னனைப் போல் பல தலைமுறை மக்களுக்குத் திருமாலின் கை வளர்ந்த கதையின் உண்மை தெரியாமலேயே போய்விடுமல்லவா?

—வே. லட்சுமணன்

திருமாலுக்குப் பூமாலையும் அடியார்
களுக்குப் பாமாலையும் தந்த ஆண்டாள்.

சூடிக்கொடுத்த சுடர்க் கொடி

●

மார்கழி மாதம் விரைந்து வருகிறது. இடையில் "குள்ளக்குளிரக் குடைந்து நீராடி," விடியற்காலையில் அனுஷ்டானங்களை முடித்துவிட்டுத் திருப்பாவை படிக்கும் மாதம் இது. திருப்பாவையின் இலக்கியச்சுவையிலும், அதன் தமிழ்த் தேனிலும் ஊறித் திளைக்க இயலாதவர் கூட, திருப்பாவை படிப்பது என்ற பாரம்பரியமான வழக்கத்தை இன்னும் அனுஷ்டித்து வருகிறார்கள். இது பழமை நமக்கு அளித்த ஒரு உயர்ந்த பழக்கம். நல்ல விஷயங்களைத் திருப்பித் திருப்பிச் சொல்லி, அவை நம்மோடு இயற்கையாகக் கலந்துபோவதற்கு இந்த வழக்கம் உதவுகிறதல்லவா? பகவத்கீதையில் கண்ணன் மார்கழி மாதத்தை மாதங்களில் சிறந்ததாகச் சொல்லியிருக்கிறான். இந்த மாதத்தில் அதிகாலையில் பாடப்படும் முப்பது பாடல்களுக்குத் திருப்பாவை என்று பெயர்.

பன்னிரண்டு ஆழ்வார்களில் ஒருவரான ஆண்டாளால் திருப்பாவை பாடப்பட்டது.

பிறப்பு:

கண்ணனைப் பற்றிப் பிள்ளைத் தமிழ் பாடி, தமிழ் இலக்கியத்திலேயே "பிள்ளைத் தமிழ்" என்று ஒரு இலக்கிய மரபு தோன்றக் காரணமாக இருந்த பெரியாழ்வாரின் பூந்தோட்டத்தில் ஆண்டாள் ஒரு குழந்தையாகக் கண்டெடுக்கப்பட்டு வளர்க்கப்பட்டதாக வைஷ்ணவ ஐதிகம் கூறுகிறது. சரித்திரவாயிலாக ஆண்டாளைப் பற்றி நமக்கு நிலையான சேதி ஏதும் கிடைக்கவில்லை. பெரியாழ்வாரின் "மானஸிக புத்ரி" என்று சிலரால் கூறப்பட்ட போதிலும், வேறு பலர் பெரியாழ்வாரது கவிதைகளை

யும், ஆண்டாளின் பாடல்களையும் துருவிப்பார்த்துப் பெரியாழ்வார் திருப்பாவையைப் பாடியிருக்க முடியாது என்ற முடிவுக்கு வந்தார்கள். பராத்பரனை நாராயண னுக்கே தன்னை அர்ப்பணித்துக் கடைசியில் நாராயண னுக்கே ஆண்டாள் வாழ்க்கைப்பட்டதாகவும் ஐதிகம் கூறுகிறது.

இலக்கியம்:

ஆழ்வார்களும், வைணவமும் தமிழுக்குச் செய் திருக்கும் தொண்டில் பெரும்பகுதியான கௌரவம் ஆண்டாளையே சாரும்.

ஆண்டாளின் பெயர் இன்று நம்மிடையே அழியாத ஜோதியாய் ஒளியிட்டு வருவதன் காரணம் அவளது திருப்பாவையின் மகிமைதான். தமிழுக்கு அந்த முப்பது பாடல்களும் ஒரு வளமான செல்வம். தமிழின் நயங்கள் தெரிந்த அறிஞருக்கும், பாரம்பரியமான பண்புகளில் சிரத்தையும், ஞானமும் கொண்ட மேதைகளுக்கும், பாமர மக்களுக்கும் ஒரே ஸமயத்தில் இன்பமூட்டும் அபூர்வமான ஒரு கோவை திருப்பாவை.

வில்லிபுத்தூரிலேயே ஒரு ஆயர்பாடியை சிருஷ்டித்து அந்த ஆயர்பாடியில் கோபிகைகளை உயிர்பெறச் செய்து எல்லோரும் சேர்ந்து கண்ணன் குடிகொண்டிருக்கும் கோயிலைத் தேடிச்சென்று தங்கள் குறைகளை எடுத்து உரைப்பதாக அமைந்திருக்கிறது திருப்பாவையின் போக்கு.

திருப்பாவையில் புதைந்திருக்கும் நயங்களை நாட் கணக்கில் அயராது சொல்லிக்கொண்டே போகலாம். சில அழகுகளை மாத்திரம் இங்கு சொல்ல முயற்சி செய்கிறேன்.

திருப்பாவையின் ஆரம்பமே மார்கழி மாதத்தில் ஆய்ச்சிறுமியர்கள் நீரா்டப்போவது பற்றிக் கூறுகிறது. "ஆழிமழைக் கண்ணா" என்ற கவிதையில் பராத்பரனை

நாராயணனையும், மேகத்தையும் ஒப்பிட்டுக் கூறும் அழகு கவனிக்கத் தக்கது.

கீசு கீசென்று ஆனைச்சாத்தான் கலந்து பேசும் பேச்சு அரவமும், வாஸ நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால் ஓசை படுத்தும் ஒளியும், கீழ்வானத்தில் சூரியன் உதிக்கும் முன்னம் கிராமத்துச் சிறுவர் எருமை மேய்க்கப் புறப்படும் அழகும் தெவிட்டாத இன்பங்கள். "புழக்கடைத் தோட்டத்து"க் குளத்தில் செங்கழு நீரும், ஆம்பலும் மலர்ந்து, கூம்பும் காட்சிதான் என்ன லயத்துடன் விவரிக்கப்படுகிறது! மாரிகாலத்தில், மலைச்சாரலில், ஒடுங்கிப் படுத்து உறங்கும் அரிமாவின் காம்பீரியத்துக்குக் கடவுளின் பெருமையை ஒப்பிட்டு, அந்தச் சிங்கம் "அறிவுற்றுத் தீ விழித்து வேரி மயிர்பொங்க எப்பாடும் பேர்ந்து உதறி மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு" வருவதுபோல் கண்ணனைத் தன் கோயில் நின்றும் கிளம்பிவருமாறு அழைக்கும் அனுபூதியில் நாம் லயிக்காமல் இருக்கமுடியுமா?

பாற்சோறு மூட நெய்பெய்து முழங்கை வழிவாரும் பண்பு ஒரு தமிழ்ப்பண்பு அல்லவா? கையில் ஊற்றிய நெய், கை நிரம்பி, பின் முழங்கை வழியாக வழிந்துவரும் அழகை ஒரு அருமையான பாடலில் கூறுகிறாள் ஆண்டாள்.

பிற பாடல்கள்:

பன்னிரு ஆழ்வார்களும் பாடிய நாலாயிரம் பாடல்களில் ஆண்டாளின் பங்குக்கு இருப்பவை 173 தான். என்றாலும், கவிதா ஸாந்நித்யத்தில் மற்றவரை விட அவள் சிறந்து விளங்குகிறாள்.

"தையொரு திங்களும்" என்று துவங்கும் பத்துப் பாடல்களில் மன்மதனைக் குறித்துத் தான் நோற்கும் தை நோன்பை விவரித்துக் கூறுகிறாள்.

குயிலைக்குறித்துப் பாடியுள்ள "குயிற்பத்து" என்னும் பாடல்களில் இலக்கிய நயம் மிகுந்த பல இடங்கள் தென்படுகின்றன.

"வாரணமாயிரம்" என்று துவங்கும் பாடல்கள் இன்னும் வைணவத் திருமணங்களில் ஒரு வழக்கமாகப் பாடப்படுகின்றன.

பாஞ்சஜனியம் என்று சொல்லப்படுகிற திருமாலின் சங்கு பற்றிப் பாடியுள்ள பத்துப் பாடல்கள், சங்கைக் குறித்துத் தான் படும் பொருமையை வெகு இனிமையான ஹாஸ்யச் சுவையுடன் சித்திரிக்கின்றன.

மேகத்தைப் பற்றி இருக்கும் பாடல்கள் கவிதைச் சிறப்புடன் விளங்குகின்றன. "உலங்குண்ட விளங்கனி போல்" தான் உள்மெலியும் பான்மையையும், "நீர் காலத்து எருக்கின் அம்பழவிலை போல்" தான் வீழும் துயரத்தையும் அவள் கூறும் பாணிதான் என்னே!

"பாடும் குயில்காள்! ஈதென்ன பாடல்? நல் வேங்கட நாடர் நமக்கொரு வாழ்வு தந்தால் வந்து பாடுமின்" என்று குயில்களிடம் அவள் கோபித்துக் கொள்ளும் நயந்தான் என்னே!

மீராபாயின் பாடல்களுக்கும், காதலுக்கும் பாத்திரமாயிருந்த துவாரகா நகரம் இவளையும் கூவி அழைத்தது. மதுராபதிக்கும், துவாரகைக்கும் உய்த்திடுமாறு இவள் கூவும் அழகுதான் என்னே!

பாவை:

'பாவை' என்னும் தமிழ்ப் பிரபந்தத்துக்குச் சான்றாக நம்மிடையே இருப்பவை திருப்பாவையும், திருவெம்பாவையும் தான். திருப்பாவை ஆண்டாள் இயற்றியது; திருவெம்பாவை மாணிக்கவாசகர் இயற்றியது. திருப்பாவை "காத்யாயனி விரதம்" என்று பாகவத புராணத்தில் விளக்கப்பட்டிருக்கும் நோன்பையும், திருவெம்பாவை "மனோன்மணி ஸர்வபூத தமனி" என்னும் 'சக்தி'யையும் விவரிப்பவை.

திருப்பாவைக்கு ஏராளமான வியாக்கியானங்கள் இருக்கின்றன. ஆனால் இந்த முப்பது பாடல்களின்

அர்த்த, தாத்பரியங்களில் அதிகமாக ஈடுபட்ட மேதைகள் அதன் கவிதை அழகு பற்றி அவ்வளவாக கவனிக்காமல் விட்டுவிட்டார்கள். நம்மைப்போன்ற சாதாரண ரஸிகர்களுக்கு சொல்லோசையும், தமிழ் அழகும், கவிதைச் சிறப்பும் எளிமையாகப் புரியக்கூடிய நயமான ஹாஸ்யச் சுவையும், மிகுந்த கவர்ச்சி யளிக்கின்றன.

ராமானுஜரும், தேசிகரும்:

வசிஷ்டாத்வைதம் என்று பிற்காலத்தில் கூறப்பட்ட மதத்தை ஸ்தாபனம் செய்த ராமானுஜருக்குத் திருப்பாவையில் ஒரு அபூர்வமான மோகம் இருந்தது. பிக்ஷைக்குச் செல்லும் காலங்களில் அவர் திருப்பாவையைத் திரும்பத் திரும்பப் பாடி, அதன் நயங்களில் ஈடுபட்டுச் செல்வது வழக்கமாக இருந்ததாகக் கூறப்படுகிறது. தம்மைத் "திருப்பாவை ஜீயர்" என்று பிறர் அழைத்துக் கேட்பதில் அவருக்கு அபூர்வமான ஆசை இருந்ததாகவும் சொல்லப்படுகிறது.

வேதாந்த தேசிகர் என்ற கவி ஸார்வ பௌமன் (கவிச் சிங்கம்) ஆண்டாளைக் "கோதை" என்றழைத்து "கோதாஸ்துதி" என்று வடமொழியில் இனிமையான துதிப்பாடல்கள் பாடியிருக்கிறார். அவரது துதிகளில் மிகச் சிறந்த கவிதாநயம் உள்ளது இதுதான் என்று அறிஞர் கூறுவர்.

விஜயநகரத்தில் ஆட்சி புரிந்த பிரபல அரசனான கிருஷ்ணதேவராயர் தெலுங்கில் தான் எழுதிய "அமுக்த மால்யதா" என்னும் காவியத்தில் ஆண்டாளைப் பற்றிப் பெருமையாகக் கூறியிருக்கிறார்.

* * *

மார்கழி நினைவுகளில், தமிழ்ப் பண்பின் நினைவும், பக்தி பரவசமும் வயப்படக்கூடிய பக்குவம் உள்ளவர்களுக்கு, ஆண்டாளுக்கும் அவளது திருப்பாவைக்கும், இயல்பாக முக்கியமான ஸ்தானம் உண்டு.

—ஸ்ரீரா.

"இந்திரற்குற்ற இடரினைப் போக்கிய
செந்தில் முருகன்".

திருச்செந்தூர்

"உள்ளத்துயரை ஒழித்தருளாய் ஒருகோடி முத்தம் தெள்ளிக் கொழிக்கும் கடற் செந்தில்மேவிய சேவகனே"

என்று அருணகிரியார் அழகாகச் சிறப்பித்துப் பாடியுள்ள ஆறு படை வீடுகளில் இரண்டாவதுபடை வீடு. ஷண்முகனின் தனிச் சிறப்புடைய முக்கியமான ஸ்தலம். பெரிய கோபுரங்களைக் கொண்ட இந்த ஆலயம் கடற்கரையின் அருகில் அழகாக அமைந்துள்ளது. கடலிலே உயர்ந்தெழுகின்ற அலைகள் எப்போதும் கீழக் கோபுரவாசல் சுவரின்மேல் மோதிக்கொண்டேயிருக்கும். கடைவீதியிலிருந்து ஆலயம் வரை பந்தல் அமைந்திருக்கிறது. பிறகு தூண்டுகை விநாயகர் ஆலயத்திலிருந்து 2 பர்லாங் தூரம் மண்டபங்கள் காட்சியளிக்கின்றன. சந்நிதானத்தின் நாற்புறமுள்ள நடைபாதைகள் சிமிண்ட் போட்டு தளவரிசைகள் செய்யப்பட்டுள்ளன. சூரியனுடைய கிரணங்கள் பக்தர்களின் மேல் விழாமலும், காலில் கடல்மணலின் வெப்பம் சூடேறாமலும் இருப்பதற்காக மேலே மங்களூர் ஓடுகளால் மூடப்பட்டுள்ளது. இவற்றைக் கடந்து சென்றதும் ஷண்முகனின் சந்நிதானமான, 'ஷண்முக விலாசம்' என்னும் மண்டபத்தையடைகிறோம். ஆகா! அங்கு என்ன ஆனந்தம். ஒருபுறம் கருணைக்கடலின் ஆரவாரங்களும் கடற்காற்றும்! மற்றொரு புறம், வடக்கு நோக்கின்



"என்னுடைய சந்நிதியை எப்பொழுது அடைகிறார்களோ அப்பொழுதே மானிடர் பவக்கடலின் கரையை அடைந்தவராவர்" என்று விளக்கிக்கொண்டு, கடற்கரையிலே தெற்கு நோக்கிய வண்ணம் ஸ்ரீ ஷண்முகப் பெருமான் ஆறுமுகங்களோடும், பன்னிரண்டு கரங்களோடும் மயில்மீதமர்ந்து வீற்றிருக்கின்ற காட்சி நம்மை மெய்மறக்கச் செய்யும்.

ஷண்முகவிலாச மண்டபத்தைக் கடந்து இரண்டாம் பிராகாரத்திற்குச் சென்றதும் அங்கே தெற்குநோக்கிய வண்ணம் அமர்ந்த ஷண்முக தரிசனமும், கிழக்குநோக்கிய வண்ணம் வீற்றிருக்கும் ஸ்ரீ சுப்ரமண்ய சந்நிதானத்தின் தரிசனமும், அவருக்கு வடபால் வீற்றிருக்கும் செந்தில் நாயகர் தரிசனமும், எவரையும் பரவசப் படுத்தும். ஸ்ரீ சுப்ரமண்யர் சந்நிதானத்தின் தென்பாரிசத்தில் வள்ளி தேவசேனா சந்நிதிகள் தனித்தனியே இருக்கின்றன. இச் சந்நிதிகள் சலவைக் கற்களாலானவை. முதற்பிராகாரத்தின் வடக்குப் பக்கத்தில் பெருமாள் சந்நிதி இருக்கிறது. கோயிலுக்குப் பின்புறம் மேற்கே உள்ள கோபுரம் பெரியது. கீழக் கோபுரம் சிறியது. இச் சந்நிதானத்தில் விபூதிப் பிரசாதம், பன்னீர் இலைகளில் வைத்து வழங்கப்படுகிறது.

ஷண்முகவிலாச மண்டபத்திற்குத் தெற்கே ஒரு பர்லாங் தொலைவில் 'நாழிக்கிணறு' என்று ஒரு தீர்த்தமிருக்கிறது. தெய்விக சக்திச் வாய்ந்த 14 அடி அகலமுள்ள இக் கிணற்றில் ஒரு புறம் மட்டும் குடிக்கும் தண்ணீராக வற்றாமல் வந்துகொண்டிருக்கிறது. மற்ற இடமெல்லாம் உப்பு நீர். 34 படிக்கட்டுகள் கொண்ட இக்கிணற்றில் எவரும் பயமின்றி கீழிறங்கி ஸ்நானம் செய்யலாம்.



" உலகம் புகழ்ந்த ஓங்குயர் விழுச்சீர் அலைவாய் "

கோயில் வெளிப் பிராகாரத்திற்கு வடபால் ஒரு பர்லாங் தூரத்தில் கடற்கரை யோரம் இயற்கையாய் அமையப் பெற்ற வள்ளிக்குகை யொன்றிருக்கிறது. இங்கு சுமார் 25 அடி பூமி மட்டத்துக்குக் கீழ் அம்மன் உருவமிருக்கிறது. படிக்கட்டுகள் வசதியாக உள்ளன. யாரும் போய் தரிசிக்கலாம். ஆலயத் தருகே தேவஸ்தான சத்திரமிருக்கிறது. தங்குவதற்கு வசதிகள் உண்டு. இந்த ஸ்தலம் திருநெல்வேலியிலிருந்து 3 மைல். திருச்செந்தூர் ரயில் நிலையத்திலிருந்து $11\frac{1}{2}$ மைல்.

மூலம் :- காளத்தி நடேச முதலியார் இயற்றிய "இறைவனின் உறைவிடங்கள்" என்ற நூல்.

நிர்வாணம் நிவர்த்தி செய்யும்!

உலகத்தை வாட்டும் பிரச்னைகளைச் சமாளிப்பதற்கு இந்திய சர்க்கார் கண்ணியமான உதவியைச் செய்ய விரும்புகிறது. சமீபத்தில் நாக சாதுக்கள் இதைப்பற்றி ஒரு ரஸமான யோசனையைத் தெரிவித்துள்ளார்கள். "ஐக்கிய நாட்டுத் தலைவர் ஐசன்ஹோவர், ருஷ்யாவின் மலங்காவ், இங்கிலாந்தின் பிரதமர் சர்ச்சில், சீனத் தலைவர் மாவ், இவர்கள் நால்வரும் நாக சாதுக்களைப்போல் நிர்வாணமாக ஹிமாலயத்திலுள்ள ஒரு சிகரத்தின் மீது சந்திக்கவேண்டியது. இந்த நிர்வாண கோஷ்டியின் கூட்டத்திற்கு இந்தியப் பிரதமர் நேருவும் நிர்வாணமாகவே தலைமை வகிக்க வேண்டும்."

இதை ஏதோ ஒரு வேடிக்கையான யோசனையென்று கருத வேண்டாம்! அரசியல் தலைவர்கள் ஒருவரை யொருவர் ஏமாற்றுவதுதான் வழக்கம். ஆனால் நிர்வாண கோலத்தில் கூடும் மனிதர்களுக்கு விஷயங்களை ஒளித்து வைப்பதற்கு ஜேபிகள் கிடையாதல்லவா? அதனால் உள்ளது உள்ளபடியே கூறி பிரச்னைகளைத் தாமதமில்லாமல் தீர்த்துவிடுவார்கள். இது உலகத்திற்கு மிகவும் பயன்தரத் தக்கதுதானே!

வருஷோற்சவம்

வருஷோற்சவம் அல்லது வருஷாந்திரக் கொண்டாட்டத்தை நினைக்கும் பொழுது நம் வாழ்க்கையில் நடந்த, நடக்கும் வருஷோர்சவங்களை நினைப்புக்குக் கொண்டுவருகிறோம். வருஷோற்சவங்கள் வாழ்க்கைச் சம்பவங்களைக் குறிக்கும் 'மைல் கற்கள்' என்று கூறுகின்றனர் சிலர்.

சில பிறவிகளுக்குத் தங்கள் பிறந்த நாட்களைச் சொன்னாலே வெறுப்படையச் செய்யும். "நான் ஏன் பிறந்தேன்" என்று கேள்வி கேட்டு தன்னுடன் இருக்கும் பெரிய அகண்ட உலகத்தையும் தன்னையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றனர். ஒருவித பதிலும் இல்லை. அவர்கள் பளுவை இறக்க கஷ்டங்களைக் குறைக்க ஒருவித ஆதரவளிக்கும் அன்பான கரமும் தென்படவில்லை. அப்படியே உற்சாகமற்று அம் மனிதர்கள் தங்கள் பாதையில் நடக்கின்றனர். சாதாரண மனிதனுக்கு அவன் பிறந்த தினத்தை ஞாபகப்படுத்தினால், அதை அவன் உள்ளூற வரவேற்பதில்லை. அது அவனது வாழ்க்கையில் காணும் நம்பிக்கையற்ற தன்மையைத் தான் ஞாபகப்படுத்துகிறதென்று கூறுகின்றான்.

பிறந்த தினக் கொண்டாட்டத்தை மூன்றுவித வகுப்பினர் வரவேற்கின்றனர்.

1. பெண்கள் 2. குழந்தைகள் 3. அரசியல் வாதிகள். பெண்களுக்குத் தாயின் தன்மை இயற்கையிலேயே இருக்கின்றது. ஆதலால் அவர்கள் தங்கள் குழந்தைகள், கணவர்கள், தாய் தந்தைகள் முதலியவர்களின் பிறந்த நாட்களை சிறப்புடன் கொண்டாட ஆவல் கொண்டவர்களாய் இருக்கின்றனர். குழந்தைகளுக்கு ஒருதனி உற்சாகமும் குதூகலமும் ஏற்படுவது, இக்காலங்களில் இயற்கை தானே! ஆகவே குழந்தைகளும் பிறந்த தினக் கொண்டாட்டத்தை வரவேற்கின்றனர்.

அரசியல் வாதிகள், சிறிய கட்சியைச் சேர்ந்தவர்களாயினும் சரி, பெரிய கட்சிகளைச் சேர்ந்தவர்களாயினும் சரி, வயது ஐம்பதுக்கு அதிகமானால் அநேகமாக குடும்ப விசாரமற்றவர்களாய் இருப்பார்கள். வெண்மையாக உடை அணிந்துகொண்டு, பிறந்ததினத்தன்று, அவர்கள் தங்களையும் அறியாது போல பல ஜோலிகளில் ஈடுபட்டுக் கொண்டிருப்பார்கள். அன்றையதினம் அவர்களுக்குத் தங்கள் கட்சியின் வாழ்த்து, பிரமுகர்களின்வாழ்த்

துக்கள், ஒரு பண முடிப்பு எல்லாம் கிடைக்கும். தினசரிப் பத்திரிகைகளில் பிரமாதமாக அவர்களது பெயர்கள் அன்றைய தினம் வெளிப்படும். மிகவும் பெரிய அரிய அரசியல் வாதியாக இருந்தால், அவர் பிறந்த தினத்தை ஒட்டி 'அபிநந்தன் கிரந்தங்களு'ம் தினசரியில் தனிப்பட்ட பத்திகளும் வெளியிடப்படும்.

சாதாரண அல்லது நடுத்தர வாழ்வுள்ள மனிதர்களுக்கு இந்த விதமான கொண்டாட்டங்களினால் கஷ்டமே தவிர களிப்பு ஒன்றும் இல்லை. சாதாரண மனிதன் இறந்த பிறகும் இந்த வருஷோற்சவம் இவனை விடுவதில்லை. அவன் இறந்த பிறகு அவன் சந்ததிகளால் ஒவ்வொரு வருஷமும் எவ்வளவோ பணச் செலவுடன் வருஷாப்தீகம் செய்யப்படுகின்றன.

இவ்வளவு செலவுடன், வருஷத்தில், தீபாவளி, பொங்கல், புது வருஷம், கிருஸ்துமஸ் பண்டிகைகள் வந்துகொண்டேயிருக்கின்றன. வருஷத்தில் ஒரு முறை வரும் பண்டிகைகளை கொண்டாடாமலும் இருக்க முடியாது. சாதாரண மனிதனுக்கு இதனால் பணச் செலவு அதிகந்தான் ஏற்படுகிறது. மற்றும் கொடி நாள், மே தினம், புற்று நோய் வாரம், காந்தி ஜயந்தி, க்ஷயரோக நிவாரண வாரம், சாதாரண வருவாய் உள்ள மனிதனின் பொருளாதார சக்தியை சோதிக்கின்றன! "ஏன் நான் எப்பொழுதும் கொடுத்துக்கொண்டேயிருக்கின்றேனே! எனக்கு ஒரு காலணா கூட திரும்பி வருவதில்லையே'' என்று கூறி குறைப்பட்டுக்கொள்கிறான் அச் சாதாரண மனிதன்.

அமெரிக்காவில் 'தந்தை நாள்,' 'அன்னை நாள்' என்ற தினங்கள் கொண்டாடப்பட்டு வருகின்றன. அமெரிக்கர்கள் தங்கள் தந்தையையும் தாயையும் நினைத்துக்கொண்டு அந்த நாட்களில் அவர்களுக்கு நல் விருந்தும், ஆடைகளும், வெகுமதிகளுமளிப்பார்களாம்.

இம்மாதிரி கொண்டாட்டங்களினால் ஒரு பக்கம் நமது பணப்பையின் கனம் குறைந்து கொண்டிருந்தாலும், இதனால் ஏற்படும் குதூகலமும் மகிழ்ச்சியும், பெரியவர்களுக்கேயன்றி, குழந்தைகளுக்கும், நோயாளிகளுக்கும் ஒரு ஆர்வத்தை ஊட்டுகின்றது. வியாபாரிகள் இம்மாதிரிச் சம்பவங்களை சாதுர்யமாய் உபயோகித்துக்கொள்கிறார்கள். தங்கள் சரக்கு விலையில், நூற்றுக்கு 10 வீதம் தள்ளிக்கொடுப்பதாக விளம்பரம் செய்கின்றனர். ஏன் என்று கேட்டால் நாம் சந்தோஷமாகப் பண்டிகைகள் கொண்டாட வேண்டுமாம்! தினசரி பத்திரிகையாளர்களும் மாத, வாரப் பத்திரிகைகளும் தங்கள் கைச் சரக்கை காட்டாமலிருப்பதில்லை. தீபாவளி இதழ், சுதந்திர தின மலர், பாரதி ஞாபக இதழ் என்று பிரசுரித்து லாபமடைகின்றனர்.

இக்காலத்தில்தான் சில பேனாக்கள் வேகமாக ஓடுகின்றன. எங்கேயோ மூலையில் ஒட்டிக்கொண்டிருக்கிற எழுத்தாளனின் கதைக்குக்கூட ஒரு கிராக்கி கிடைத்து விடுகிறது.

மதாசார்யர்கள், தேசத் தலைவர்கள், கவிகள், மகாத்மாக்கள் பிறந்த அல்லது இறந்த தினங்களை அவரவர்களது நாட்டின் மக்களால் கொண்டாடப்படுவது முறையே. ஆனால் அவ்விதக் கொண்டாட்டத்தின் போது ஏதோ சில வயதானவர்கள் கலந்துகொள்கிறார்களே தவிர, இளைஞர்கள் இவற்றில் முக்கிய பங்கு எடுத்துக்கொள்ளாதிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். அச்சம்பவங்களில், ஏதாவது, சங்கீதம், நடனம், நாடகம் இருந்தாலொழிய இளைஞர்கள் எட்டிப்பார்ப்பதுகூட வழக்கத்தில் இல்லை. இதில் இளைஞர்கள் ஊக்கம் காட்டவேண்டியது அவசியமே.

இப்படியே வாழ்க்கைச் சக்கரம் உருண்டுகொண்டே போகிறது. நல்லதும் கெட்டதும் தொடர்ந்து வருகின்றன. “நாம் வாழ்வதில் ஏதாவது சாரம் இருக்கிறதா” என்று கேட்டுக் கொள்கிறோம். நாம் எந்த முறையில் வாழ்க்கை நடத்துகிறோமோ அந்த அளவுக்கு சாரம் இருக்கின்ற தென்பதை அறிந்து கொள்ளவேண்டும்.

—எம். கே. ஸ்ரீனிவாசன்

இறப்பிலும் இரை !

ஹாஸ்ய நடிகர் ஒருவர் தான் இறந்த பிறகு தன் உடலை தன் மனைவியின் உடலை அடக்கஞ் செய்திருந்த சவப் பெட்டியினுள்ளேயே அடக்கஞ் செய்யவேண்டுமென்று உயில் பத்திரத்தில் எழுதி வைத்திருந்தார். தன் மனைவியினுடைய உடலை அடக்கஞ் செய்யப்பட்டிருந்த சவப் பெட்டியில் தன் உடலை வைப்பதுடன் “இங்கு சிங்கத்தின் கூட்டில் அகப்பட்டுக்கொண்ட ஒரு மனிதனை அடக்கஞ்செய்யப்பட்டிருக்கிறது” என்ற குறிப்பை எழுதி வைக்கவேண்டுமென்றும் குறித்திருந்தார்.

வாய்ப்பேச்சிலும் வீரமா?

●

சமீபத்தில் தென்னாட்டைச் சேர்ந்த ஒருவர் சென்னையில் 72 மணி நேரம் விடாமல் சைக்கிள் ஓட்டியதைப் பற்றி அநேகர் கேள்விப்பட்டிருக்கலாம். அடிக்கடி இம்மாதிரி விடாமல் சைக்கிள் ஓட்டும் நிகழ்ச்சிகள் தமிழ் நாட்டில் ஆங்காங்கு நடைபெற்று வருகின்றன.

விடாமல் நாள் கணக்காகச் செய்வது சைக்கிள் ஓட்டுவது மட்டுமல்ல. சமீபத்தில் இங்கிலாந்தைச் சேர்ந்த ஒருவர் 127 மணி நேரம் விடாமல் பேசிக்கொண்டேயிருந்தாராம். 127 மணி நேரமானதும் இவர் மயக்கமுற்று விழுந்தாராம். ஐந்து தினங்கள் வரை முக க்ஷவரம் செய்து கொள்ளாமலிருந்ததால் தாடியும் மீசையும் வளர்ந்திருந்தன. கண்கள்களைப் பினால் சிவந்திருந்தன. விடாமல் பேசிக்கொண்டிருந்த தினங்களில் இவர் சூடான பானவகைகளை குடித்துக்கொண்டும் தினமும் 100 சிகரெட்டுகளை பிடித்துக்கொண்டுமிருந்தாராம்.

இம் மாதிரி விடாமல் செய்யுங் காரியங்களால் பயன் ஏதாவதுண்டோவென்று பலர் வியப்புக்கொள்ளலாம். மனிதன் வலிமைக்கு இது ஒரு பரீக்ஷையாகும். ஐரோப்பிய தேசங்களில் ஓட்டப் பந்தயங்களில் ஒரு சுவையான அம்சமாகும், 26 மைல் கொண்ட 'மராத்தான்' என்ற ஓட்டப் பந்தயம். பழங்காலத்தில் கிரேக்கர்கள் பாரஸீகர்களை தோல்வியடையச்செய்த செய்தியை கிரேக்க நாட்டு ராணுவ வீரர்கள் ஓடோடியும் தங்கள் நாட்டிற்குக் கொண்டுவந்ததிலிருந்து இந்தப் பந்தயம் ஆரம்பமாயிற்று.

மனிதன் வலிமைக்கு ஒரு பரீக்ஷையாகாத விதத்திலும் இம்மாதிரி நிகழ்சிகளை நடத்துவதுண்டு. ஐக்கிய நாட்டு சட்டசபை அங்கத்தினர்கள் அடிக்கடி கையாளும் சூழ்ச்சிகளில் ஒன்ருகும், இம்மாதிரி விடாமல் பேசுவது. சில மசோதாக்களை சட்ட சபையில் எதிர்ப்பவர்கள் அம் மசோதாக்களை விவாதிப்பதற்குள்ள நேரத்தைப் பூராவும் தங்கள் எதிர்ப்புப் பேச்சில் பாழாக்குகிருர்கள். இதனல் இம் மசோதாக்களை ஆதரிப்போர்களுக்கு,இவற்றை ஆதரித்துப் பேசவோ, ஆமோதிக்கவோ நேரங் கிடைக்காமற் போய்விடும். இப்படி அரசியல் துறையில் விடாமல் பேசுங் கிறுக்கை பயன்படுத்துகிருர்கள்.

சாதாரண மனிதர்களுக்கு, மௌனத்தை ஒரு சிறந்த பண்பு என்று நம் நாட்டுப் பெரியோர்கள் கூறியுள்ளார்கள்.

இக்காலத்தில் உலகத்தி லுள்ள பொருள்களுக்கெல் லாம் தரம் குறைந்திருப்பது போல் இந்தப் பண்புக்கும் முன் பிருந்த மதிப்பு குறைந்திருப்பது பரிதாபகரமான தென்றுதான் கூறவேண்டும்.

இது இன்னும் குறைந்து மௌனத்திற்கு ஒரு காலத்தி லிருந்த சிறப்பு, ஓயாமற் பேசிக் டிருப்பதற்குமுண்டு என்ற நிலைமை வராமலிருக்க ஆண்ட வன் தான் துணை புரியவேண் டும்.

முன்ஜாக்கிரதை !

ரயிலில் ஒரு நடுத்தர வயதுள்ள மனிதரும் இளைஞரும் பிரயாணஞ் செய்துகொண்டிருந்தார்கள். இளைஞர் மற்றவரி டம் "மணி என்ன ஆயிற்று" என்று கேட்டார்.

நடுத்தர வயதுள்ள மனிதர் இதற்குப் பதில் ஒன்றுமே கூறவில்லை.

திரும்பவும் இளைஞர் "மணி என்ன" என்று கேட்டார். இதற்கும் அவரிடமிருந்து ஒரு பதிலும் வரவில்லை.

ரயில் இவர்களிருவரும் இறங்கவேண்டிய ஸ்டேஷனை நெருங்கியதும், நடுத்தர வயதுள்ள மனிதர் இளைஞரைநோக்கி "உன் கேள்விக்குப் பதில் அளிக்காத அவமரியாதைக் காக நான் மன்னிப்புக்கோருகிறேன். ஆனால் உன் முதற் கேள் விக்கே நான் பதில் கூறியிருந்தேனானால் நாமிருவரும் சகஜ மாய் சம்பாஷணையிலீடுபட்டிருப்போம். நம்முடைய ஊரை அடைவதற்குள் நண்பர்களுமாயிருப்போம். இந்த ஸ்டேஷ னுக்குச் சமீபத்தில் என் வீடு இருப்பதால் நான் உன்னைக் காப்பி சாப்பிட அழைத்திருப்பேன். நீ என் வீட்டிற்கு வந்து என் குடும்பத்தினரைச் சந்திப்பாய். அதில் ஒன்றும் தப்பில்லை தான். ஆனாலும் என் பெண் மணப்பருவமடைந்த யுவதி; அவளை மணந்துகொள்ள நீ விரும்புவாய். அவளும் உன்னை மணந்துகொள்ள விரும்பினால் என் பெண்ணை உனக்கு நான் மணஞ்செய்து கொடுக்கநேரிடலாம். ஒரு கைக்கடிகாரங் கூட வாங்கிக்கொள்ளச் சக்தியில்லாத தரித்திரனுக்கு எதற் காக என் பெண்ணை மணஞ்செய்து கொடுக்கவேண்டும். அத னால் தான் உன்னுடன் நான் பேசவில்லை" என்று தன் பேச்சை முடித்தார் !

நேருவே கதியா?

"அவனன்றி ஓர் அணுவும் அசையாது" என்ற முதுமொழிக்கு இன்றைய ஓர் சிறந்த உதாரணம் புது டில்லியிலுள்ள மத்திய சர்க்கார் 'செக்கரடேரியேட்' ஆகும். இங்கு எந்த மந்திரியின் இலாகாவிலும் பிரதமர் நேருவின் அனுமதியும் அங்கீகாரமும் இல்லாமல் ஒன்றுமே நடைபெறுவதில்லை. அவரவர் இலாகாவிற்கு அந்தந்த மந்திரி தலைவர் என்பது பெயருக்குத்தான்.

உண்மையில் எல்லா மந்திரி இலாகாவிற்கும் தலைவர் நேருதான். மந்திரி சபையின் தீர்மானமென்பது நேருஜியின் சித்தம்: நேருஜியின் விருப்பம்.

இந்த நிலைமையைப் பற்றி ஒரு மந்திரியும் ஆக்ஷேபிப்பதுங் கிடையாது. ஏனென்றால் நேருஜி பொது மக்களின் ஹிருதயத்தில் வீற்றிருக்கும் மன்னர் போன்றே சர்க்கார் மந்திரிகளின் ஹிருதயங்களிலும் வீற்றிருக்கும் மன்னராவார். மக்கள் நேருஜியைப் போற்றுவதுபோல் மந்திரிகளும் அவரைப் போற்றுகிறார்கள். இதனால் எல்லா மந்திரிகளின் இலாகாகளிலும் நேருஜியின் ஆட்சி செலுத்தப்படுகிறது!

அற்ப விஷயங்களில்கூட மந்திரிகள் நேருஜியின் விருப்பப்படி நடந்துகொள்கிறார்கள். அதனால் முக்கிய விஷயங்களில் நேருவின் விருப்பம் தான் இவர்களுக்குச் சட்டம். நேருஜி ஒரு பிரம்மாண்ட விருக்ஷம் போலாவார். அவர் நிழலில் மற்றெல்லோரும் தங்குகிறார்கள்.

சமீபத்தில் நேருஜி காங்கிரஸ் தலைமைப் பதவியிலிருந்து விலக விரும்புவதாகத் தெரிவித்துள்ளார். நேருஜி விலகினால் அவர் ஸ்தானத்திற்கு யார் தகுதி என்பது தான் எல்லா அரசியல் வாதிகள் மனத்திலுமுள்ள இன்றைய பிரச்னை. நேருஜியின் பதவிக்கு மத்திய சர்க்காரின் மந்திரி சபையின் அங்கத்தினர் எவருக்குந் தகுதியில்லையென்ற ஒரு அபிப்பிராயம் பொதுவாக இருக்கிறது. மத்திய சர்க்கார் மந்திரி சபையின் அங்கத்தினரெவருமே தகுதியற்றவரானால் நேருஜி இன்னும் தன்னுடைய வாரிசைத் தெரிந்தெடுக்கவில்லையென்று அர்த்தமா?

தான் இல்லாவிடில் ராஜ்யத்திற்குத் தலைவராக எவராலுமே இருக்க முடியாதென்று கூறுவது அபத்தமென்று நேருஜியே பல தடவைகள் கூறியுள்ளார். அவருடைய வாரிசை

அவரே தேர்ந்தெடுக்க வேண்டு மென்றுவற்புறுத்துவது அனர்த்தம். அவருடைய இந்தஅபிப்பிரா யம் சரியல்லவென்பது தானே! பொதுவாக அரசியல் துறையி லும் நேருஜி தலைமைப் பதவியி லிருந்து விலகுவதைப் பற்றி அநேகருக்கு மனக் குழப்பம் தானேற்பட்டிருக்கிறது. இது ஒருபுறமிருக்க நேருஜி துவக்கி வைத்த விவாதங்கள் தேசமெங் கும் பரவி நேருஜி இல்லாவிடி லும் ராஜ்ய காரியங்களுக்குத் தடங்கல் கூடாதென்ற ஒரு ஆர்வத்திற்கும் தூண்டுதலா யிருக்கிறது.

இதற்கெல்லாம் காரணம் தலைமை பதவிக்குத்தகுந்த குண விசேஷங்களின் பஞ்சம் தான். ஞானம், வீரம், தீரம் முதலிய சிறந்த பண்புகளுக்குப் பாரினி லேயே மிகப் புகழ்பெற்ற தென்று பாரதியார் புகழ்ந்து பாடிய இந்நாட்டுக்கு இந்நிலை ஏற்றதா?

—Adapted from an article in *The Statesman*, New Delhi

★ மணமும் மரணமும் ★

மணமாகிவிட்ட ஆண்களே மணமாகாத ஆண்களை விட நீண்ட ஆயுள் படைத்தவர்கள். 25 லிருந்து 55 வயது வரையிலுமுள்ள ஆண்களில் மரிக்கும் மணமாகாத வர்களின் எண்ணிக்கை மணமானவர்களைவிட இருமடங்கு அதிகம் என்று புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. நாற்பத் தைந்து வயதுக்கு மேல் ஐம்பது வயது வரையிலும் மண மாகாமல் மரிப்பவர்களின் எண்ணிக்கை நாலு பங்கு அதிகமாம்.

மேல் நாடுகளில் மணமாகாத ஸ்திரீகள் பலர் இருப்பது சகஜம். இவர்களிடையே, மரிப்பவர்களில் மணமாகாத மங்கையர்களின் எண்ணிக்கை மணமான மங்கையர்களின் எண்ணிக்கையைவிட நாலுபங்கு அதிகம்.

மணமானவர்களிடையே, குற்றம் புரிவோர்களின் எண்ணிக்கை குறைவு; தற்கொலை செய்துகொள்வோர் களின் எண்ணிக்கை குறைவு, வறுமையினாலும் மூளைக் கோளாறுலும் பாதிக்கப்படுவோர்களின் எண்ணிக்கையும் குறைவு. இந்தத் துரதிருஷ்டமெல்லாம் மணமாகாதவர்க ளிடையே தான் மிகவும் அதிக மென்று புள்ளி விவரங்கள் திட்டமாகக் கூறுகின்றன.

ஆறே வாரங்களில் எலி பெரும் சக்தியை யானை இருபது ஆண்டுகளில் பெறுகிறது.

குட்டிப் பிராணிகளுக்கும் பராமரிப்பு உண்டு

●

குழந்தைக்கு ஐந்தாறு பிராயம் ஆகும்வரையிலாவது தாயின் பாதுகாப்பு மிகத் தேவையாகும். ஆகாரம் நித்திரை, ஆரோக்கியம், நடத்தை முதலிய விஷயங்களில் பெற்ரேர்களின் மிகக் கவனத்துடன் கூடிய கண்காணிப்பு குழந்தைகளுக்கு அவசியமானது. மனிதருக் கிடையேயுள்ள இந்தப் பழக்கவழக்கங்கள் மற்ற ஜீவராசிகளிடையேயும் உண்டா? இல்லாவிடில் அவற்றிற்குள்ள பழக்கவழக்கங்கள் யாவை என்பதை ஆராய்ந்தறிவது சுவையான விஷயமாகும்.

குட்டி யானைகள் தாயின் சகாயத்தை இருபது வயது வரை நாடுகின்றன. குரங்குக் குட்டிகள் ஆறல்லது ஏழு வருஷங்கள் வரையிலும் தாயால் கவனிக்கப்பட்டு வருகின்றன. சிங்கங்களும் ஓநாய்களும் கூட இம்மாதிரியே பெற்ரேர்களின் உதவியை நீண்டகாலத்திற்கு நாடுகின்றன. எலிக்குஞ்சு பிறந்து நாலைந்து வாரங்களானதும் தாய் எலி, குஞ்சு எலியை தன் பொந்தைவிட்டு வெளியே துரத்திவிடுகிறது. பிறந்த நாலைந்து வாரங்களுக்குள் தனக்கு வேண்டிய இரையைத் தேடிக்கொள்ள எலிக் குஞ்சு சக்தி பெற்றுவிடுகிறது.

மேற்கூறியவற்றிலிருந்து பிராணிகளிடையே தாய்ப் பிராணிகள் அவற்றின் குட்டிகளைக் கவனிப்பதுபற்றி பொதுவாக ஒன்றும் கூறமுடியாதென்பது புலனாகும். அநேக பிராணிகளுக்கு குட்டிகளைப் பெற்ற பின்பு சில தினங்களிலோ அல்லது சில வாரங்களிலோ அவற்றைப் பற்றின அக்கறை மறந்துபோகிறது. ஒரு குரங்குக் குட்டி இறந்தால் அதன் உடல் தாய்க்குரங்கின் கண்முன் இருக்கும்வரையிலுமே அதற்கு அக்கறையுண்டு. இறந்த குட்டியின் உடலை அகற்றிவிட்டால், அதை மறந்துவிடும். சில குரங்குகள் இறந்த குட்டியின் உடலை பல மாதங்

கள் உலர்ந்து சுருங்கி உருவமே சிதைந்துபோகும் வரையிலும் பாதுகாத்துக் கொண்டிருக்கும்.

இதைத் தவிர பெற்ற குட்டி களை தின்றுவிடும் பிராணி இனங்களுமுண்டு. மிருகக்காசி சாலைகளிலுள்ள சிங்கம், கரடி, கழுதைப் புலி முதலிய விலங்கு களும் இவை ஈனும் குட்டிகளைத் தின்றுவிடுவது சகஜம்.

பறவைப் பிரபஞ்சத்தில் சூல் கொண்ட பெண்ணினங்களைப் பாதுகாப்பதிலும், இவை இடும் முட்டைகளைப் பத்திரப்படுத்து வதிலும் முட்டைகளிலிருந்து வெளியே வந்த குஞ்சுகளை அவை பறக்கும் சக்தி பெறும் வரை உணவுதேடி காப்பாற்று வதிலும் திறமை பெற்ற பறவை கள் பல உண்டு. பறவையினம் ஒன்றில், பெண் பறவை முட்டையிடத் தொடங்கியதும் ஆண் பறவை முட்டையை அடைகாக்கும். இடும் முட்டை கள் யாவையும் மிகச் சிரத்தை யுடன் தன் இறக்கைகளினடி யில் வைத்துக்கொள்ளும் ஆண் பறவை. முட்டைகள் இடுவது நின்றபின்பு பெண் பற வையின் பொறுப்பு தீர்ந்துவிடு கிறது. முட்டைகள் வெடித்து பறவைக் குஞ்சுகள் வெளியே வந்து உணவு தேடச் சக்தி பெறும் வரை இவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பு ஆண் பறவையைச் சேர்ந்ததாகும், இந்த ரகப் பறவையினத்தில்.

மற்றொரு பறவையினத்தில் சூல்கொண்ட பறவையை ஆண் பறவை ஒரு மரப்பொந்திற்குள் தள்ளி பொந்தின் வாயைக்

காந்திக்கு சாந்தியளிக்குமா?

சௌராஷ்டிரத்தைச் சேர்ந்த ஒரு நகரத்தில் நடந்த சம்பவம் கீழ்வருமாறு :-

தீண்டாமை ஒழிப்பு வாரம் இங்கு கொண்டா டப்பட்டபோது இங்குள்ள ஹோட்டல்களிலெல்லாம் ஹரிஜனங்கள் புகுந்தார்கள். அதனால் ஹோட்டல்கள் யாவும் அசுத்தமாயின வென்று ஜாதி ஹிந்துக்கள், ஹோட்டல்களைப் பகிஷ்கரித்தார்கள். இந்த அறிவில்லாத கூட்டத்தைத் திருப்தி செய்வதற்காகப் பாலைக் குடங்குடமாக ஊற்றி ஹோட்டல்களைச் சுத்தப்படுத்தினார்கள் ஹோட்டல்காரர்கள். இனி இந்த ஹோட்டல்களில் ஹரிஜனங்களை அனுமதிக்கமாட்டார்களென் பதில் ஐயமுண்டா?

ஜாதி வேற்றுமையை அடிப்படையாகக்கொண்ட மனப்பான்மையை அகற்றுவது எவ்வளவு சிரமமாயிருக்கிறது!

—Times of India.

களி மண்ணால் மூடிவிடும். ஆகாரங்களை உள்ளே தள்ளு வதற்கு மட்டும் ஒரு துவார மிருக்கும். சூல் கொண்ட பெண்பறவை முட்டையிட்டு குஞ்சுகள் வெளியே வந்து அவை பறக்கும் சக்தி பெறும் வரை அவற்றைப் பாதுகாக்கும் பொறுப்பு பெண்பறவையைச் சேர்ந்தது. இந்தக் காலம் பூராவும் தாய்ப் பறவைகளுக் கும் குஞ்சுகளுக்கும் உணவைத் தேடி துவாரம் மூலம் ஆண் பறவை உள்ளே தள்ளிக் கொண்டிருக்கும். இந்தப் பற வைக்கும், குடும்பக் கடமைகளை மிக அக்கறையோடு நிறைவேற் றும் ஒரு மனிதனுக்கும் ஏதே னும் வித்தியாச முண்டா? கிளி யினத்தில் குஞ்சுகளைப் பகலில் பாதுகாக்கும் பொறுப்பு ஆண் கிளியைச் சேர்ந்தது. இரவில் இந்தப் பொறுப்பை பெண்கிளி ஏற்றுக்கொள்கிறது. ஆஸ்திரே லிய தேசப் பிராணியான கங்கா ருவின் உடலில் ஒரு பையுண்டு. பிறந்த குட்டி இந்தப் பைக்குள் புகுந்தால்தான் அது ஜீவித்திருக் கும். சில சமயம் பிறந்த குட்டி எங்காவது சென்றுவிட்டால் காக்கையோ, எலியோ தின்று விடும். அதிருஷ்ட வசத்தால் குட்டி தாயின் வயிற்றில் ஏறி விட்டால் தானகவே பைக்குள் விழுந்துவிடும். கங்காருவின் பால் சுரக்கும் காம்புகள் இந் தப் பையில்தானிருக்கின்றன.

ஊர்ந்துசெல்லும் ஜந்துக்கள் பொதுவாக, மணலிலோ இலை கள் மீதோ முட்டைகளை யிட்டு விட்டால், பின்னர் இவற்றைப் பற்றிக் கவலைப்படுவது கிடை யாது. முதலையும், மலைப்பாம் பும் இவ்வாறல்ல. முதலைகள் 20 முதல் 60 வரை முட்டைகளை ஒரே தடவையில் இவை வசிக் கும் நதிதீரங்களில் இடுகின்றன. இவற்றை அருகிலேயே கண் ணுங் கருத்துமாகக் காத்துக் கொண்டேயிருக்கும். பாம்புகளி லும் சில இனங்கள் அவற்றின் முட்டைகளை அடைகாக்கின் றன.

'சீட்டோ' ஒப்பந்தம் அமலுக்கு வருவதற்கு பல நூற்றுண்டுகளுக்கு முன்பிருந்தே இந்த ராஜ்ய மக்களிடையே நிலவியிருந்த ஐக்கியம்

கிழக்கு ஆசிய நாடுகள் ஒன்றே

●

இலங்கை, பர்மா, சீனு, ஜப்பான், இந்தோனேஷியா முதலிய ராஜ்யங்களில் உள்ள மக்களின் வாழ்க்கையிலும் அவர்கள் சூழ்நிலையிலும் எவ்வளவோ வேற்றுமைகள் உள்ளன. ஆனல் இந்த ஜனத் தொகுதிகளின் வாழ்க்கைக்கு அடிப்படையாக ஒரு ஒற்றுமையுண்டென்பதை யறிய அநேகருக்கு வியப்பாயிருக்கலாம். இந்த ஒற்றுமையை கவி ரவீந்தரரும், நேருஜியும் பல சந்தர்ப்பங்களில் நமது நினைவிற்குக் கொண்டுவந்துள்ளார்கள்.

சில நூற்றுண்டுகளாக மேற்கூறிய ராஜ்யங்களிலுள்ள மக்கள் பெரும்பாலோர் மீது வெள்ளையர்கள் ஆட்சி புரிந்து வந்தார்கள். வெள்ளையர்கள் தங்கள் ஆட்சியைச் செலுத்தும் பொழுது, இந்த ராஜ்ய மக்களுக்கு ஏதாவதொரு அம்சத்தில் ஒற்றுமை இருக்கலாமென்ற உண்மையை மிகுந்த அக்கறையுடன் மறைத்தே வந்தார்கள்.

இப்பொழுது இந்த ராஜ்யங்களெல்லாம் வெள்ளையர் ஆட்சியிலிருந்து விடுதலை பெற்று விட்டது. இனி இந்த ராஜ்யங்களில் புராதன காலங்களிலிருந்தே நிலவிவரும் ஒற்றுமையையாரும் மறைக்க முடியாது. நாமனைவரும் இந்த ஒற்றுமையைத் தெரிந்துகொண்டு அதைப் போற்றவேண்டும்.

ஜப்பானியர் வாழ்க்கையின் ஜீவன் பௌத்த மதமும் அதையொட்டின பண்பாடுகளும் தான் என்று ஒரு ஜப்பானிய அறிஞர் சமீபத்தில் கூறியுள்ளார். இந்த பௌத்த மதத்தையொட்டின பண்பாடுகள், தேவாலயங்களின் அழகு, ஓவியக் கலை, சங்கீதம், நாடகக் கலை முதலியவை யாகும். ஜப்பான் தேசத்திற்கு விஜயஞ் செய்யும் அந்நிய நாட்டினர்களுக்கு மிக மகிழ்ச்சியளிக்கும் ஜப்பானிய தோட்டக் கலையும், தேநீர் விருந்துபசாரங்களும், புஷ்ப அலங்காரங்களும் வாள் வீச்சுக் கலையும், அச்சுக் கலையும் பௌத்த மதத்தையொட்டிய கலாச்சாரமே யாகும். இந்த பௌத்த மதம் இந்தியாவி

விருந்து சீனு மூலம் ஜப்பானுக்குப் பரவியுள்ளது. இதை நாம் ஞாபகப்படுத்திக் கொள்ளும் போது, இம் மூன்று ராஜ்யங்களுக்குமுள்ள ஐக்கியம் நன்கு புலப்படும்.

பௌத்த மதத்தை உலகமெங்கும் பரவச் செய்வதற்காக அசோக சக்கரவர்த்தி தன் தூதர்களை அனுப்பி வைத்தார். அசோகரின் தூதர்களுக்கு கிழக்கத்திய நாடுகளிலுள்ள மக்கள் மனமார்ந்த வரவேற்பளித்தனர். கிழக்கத்திய நாடுகளிலெல்லாம் பௌத்த மதம் பரவியதோடு பாலி பாஷையும் பழக்கத்திற்கு வந்தது.

இந்தியாவிலிருந்து ஆயிரக்கணக்கான மைல் தொலைவிலிருக்கும் ராஜ்யங்களிலுள்ள தேவாலயங்களிலும் பௌத்த மடங்களிலும், பொதுக் கூட்டங்களிலும் திடீரென நம் பாரத நாட்டுப் பாஷையிலுள்ள மந்தரங்களோ, பாடல்களோ கேட்பது நமக்கு எவ்வளவு மகிழ்ச்சியளிக்கிறது! இலங்கையிலும், தாய்லாந்திலும், கம்போடியாவிலும், இந்தோசீனு ராஜ்யத்திலும் பாரதீயப் பெயர்கள் கொண்ட ஸ்தலங்களையும் மனிதர்களையுங் காணலாம்.

நம் நாட்டுக் கலைகள் தனி ரகமாகும். இக்கலைகளின் சிருஷ்டிகளை எங்கு கண்டாலும் அவை நம் நாட்டைச் சேர்ந்தவை என்று அடித்துக் கூறலாம். அஜந்தாவிற்கும் சிஜிரியாவிற்குமிடையே வெகு தூரமுண்டு. ஆனால் இந்த இரு இடங்களிலும் தோன்றும் கலா சிருஷ்டிகள் யாவும் ஒரே கையாலாக்கப்பட்டவை போலிருக்கும். இந்தியாவிலிருந்து ஜப்பான் வரையிலும், மாங்கோலியாவிலிருந்து இந்தோனேஷியா வரையிலும் எங்கு சென்றாலும் நம் கண்ணில் படுவது ஒரே ரகத்தைச் சேர்ந்த கலைக் காட்சி தான்.

கிழக்கத்திய நாடுகளில் எங்கும் புத்தரின் சிலைகளைக் காணலாம். தாமரை மலர் மீது நிஷ்டையிலிருக்கும் புத்தர் உருவம் இந்தியாவில் தோன்றிய பிறகு கிழக்கத்திய நாடுகளெங்கும் பரவலாயிற்று. ஒவ்வொரு ராஜ்யத்திலும் செய்யும் விக்கிரகங்களுக்குத் தனிப்பட்ட சின்னங்களிருந்தாலும் எல்லாவற்றிற்கும் அடிப்படையானது ஒரு பாரதீயக் கருத்து தான்.

இதுபோலவே ஆலயங்களிலுள்ள சிற்ப வேலைப்பாடுகள், தில்லை நடராஜன் சந்நிதியில் காவல் புரியும் துவாரபாலகர்கள், பூதகணங்கள் யானைக் கூட்டங்கள், கோர சர்ப்பங்கள் யாவும் இலங்கையிலுள்ள ஆலயத்திலும் பாலித்தீவிலும் அங்கோர் வாட்டிலுள்ள பாழடைந்த ஆலயங்களிலும் காணலாம். ஸ்தூபங்கள், 'தாக்கோ பாக்கள்' மணி வால்கள்' கோபுரங்கள், யாவற்றிலும் காண்பது ஒரே ரக சிற்பவேலைப்பாடுதான்.

இவ்வாறு கிழக்கு ஆசியாவிலுள்ள நாடுகளில் ஒற்றுமைக்

குக் காரணமாயிருந்தது புத்த பிரானின் அருள்தான். ஆனால் இந்த ஒற்றுமை மத விஷயங் களில் மட்டுந்தானிருந்ததென்று நினைப்பது தவறாகும். மதத் தால் ஒற்றுமை ஏற்பட்ட மக் களுக்கிடையே பல்வேறு தொடர்புகள் உண்டா வது இயற்கைதானே! புரா தன காலத்தில் கிழக்கு ஆசிய நாடுகளுக்கிடையே வியாபார மும் ஏராளமாக நடந்துவந்தது. இந்த ராஜ்யங்களுக்கிடையே நிலவிவந்த வியாபாரத் தொடர்புகளைப் பற்றி விரிவான வரலாறுகளுமுள்ளன.

அநேக நூற்றாண்டுகளுக்குமுன் பாஹியான், ஹியூன்சாங் என்ற சீனத்தூதர்கள் இந்தியாவிற்கு விஜயஞ்செய்து கிழக்கு ஆசிய நாடுகளிடையே நல்லுறவை வளர்த்தார்கள். சில நூற் றாண்டுகளாக மறைந்துபோன இந்த நல்லுறவிற்கு மறுபடியும் உயிரளித்து, வளர்த்துப் போற்றி கிழக்கு ஆசிய நாடு களுக்கு ஒற்றுமையும் அதனா லுண்டாகும் அரசியல் பலத்தை யும் அளிக்க முயல்வது இன் றைய ஒரு முக்கிய கடமை யாகும். இக்கடமையை பண்டித நேருவும், மற்றும் பிர பல இந்தியத் தலைவர்களும், கிழக்கிந்தியத் தலைவர்களும் சிறப்பாக நிறைவேற்றி வருவது நமக்கெல்லாம் மகிழ்ச்சியளிக் கிறது.

நீர்—மோர்! அன்றும் இன்றும்

காரென்று பேர்படைத்தாய்
ககனத்துறும்போது
நீரென்று பேர்படைத்தாய் நெடுந்தரையில்
வந்ததற்பின்
வாரொன்று மென்முலையார் ஆய்ச்சியர்கை
வந்ததற்பின்
மோரென்று பேர்படைத்தாய்
முப்பேரும் பெற்றாயே

—கவி காளமேகம்

ASOKA SCENTED BETELNUT POWDER

வழிபாடு



அண்டசராசரங்களைப் படைப்பவன் கடவுள். சகல ஜீவராசிகளையும் காப்பவன் கடவுள். பிரளய காலத்திலே அனைத்தையும் அழித்துத் தன்னிடத்தே ஐக்கியப் படுத்திக்கொள்பவன் கடவுள். மீண்டும் மீண்டும் உலகனைத்தையும் உண்டாக்கிக் காத்து அழிப்பவன் கடவுளே. இதனாற்றான் கடவுளை, 'சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹார காரணன்' என்கிறோம். இது யாவரும் அறிந்த உண்மை.

கடவுளை வழிபடுவது பகுத்தறிவு படைத்த மனிதனின் கடமை. வழிபடாவிட்டால், 'ஏன் என்னை வழிபடவில்லை?' என்று தெய்வம் எதிரே வந்து கேட்காது. வழிபட்டால் நலம் பெறலாம். இதை உணர்ந்த மனித குலம் தொன்று தொட்டுக் கடவுள் வழிபாட்டைக் கூடியவரையில் கைவிடாமல் தொடர்ந்து வருகிறது.

வழிபாடுகளில் பலவகை. தியானம்: மனத்தளவில் புரியும் செயல். தோத்திரம்: மனம், சொல் இரண்டினாலும் புரியும் செயல். பூசை: மனம், சொல், செயல் மூன்றினாலும் உருப்பெறுவது.



தியானம் என்ற அளவில் கண்மூடிக் கரங்குவித்துச் சமாதி நிலையிலே அமர்ந்திருந்தால் மட்டும் போதாது. உள்ளம் பரம்பொருளிடம் லயிக்கவேண்டும். அவ்வாறின்றி அந்தப் பொல்லாத உள்ளம் சொல்லாமல் கொள்ளாமல் வேறு எங்காவது ஓடிற்றானால் மணிக்

கணக்கில், நாட்கணக்கில் நிஷ்டையில் இருந்தும் பயன் இல்லை. நிஷ்டையில் இருக்கும்போது உள்ளம் அப்படிக்கூட வேறு விஷயத்தை நோக்கி ஓடுமா என்றால் கட்டாயம் ஓடும். மனம் என்பது மாயக் குரங்கு. பாதரசம் எப்படி லேசிலே வசப்படுவதில்லையோ அதேபோலத்தான் மனம், மனிதனின் கட்டுப்பாட்டில் நிற்பதும் கடினம். வீட்டு விசாரம், வெளி விவகாரம், உலகத்துப் பிரச்னைகள், சூழ்நிலையின் நினைவு, இப்படி மனம் யாத்திரை சென்று கொண்டிருக்க, உடல் நிஷ்டையிலே இருந்தால், பார்ப்பவர் மதிக்க இடம் ஏற்படலாம்; பலன் சிறிதும் கிட்டாது. மனப்பூர்வமாகக் கடவுளை நினைப்பதே தியானம் ஆகும்.

தோத்திரமும் இப்படியே தான். கண் கடவுளின் உருவத்தை நோக்கியிருக்க, கரம் அழகாகக் குவிந்திருக்க, வாய் தோத்திரங்களை முணுமுணுத்துக்கொண்டிருப்பதில் குறை ஒன்றும் இராது. இவற்றுடன் மனத்தின் ஈடுபாடும் இருந்தால் தான் தோத்திரம் பலன் உடையதாகும்.

நண்பர் தோத்திரத்தில் ஈடுபட்டார். மனம் எங்கோ சஞ்சரித்துக் கொண்டிருந்தது. குழந்தை தவழ்ந்து வந்தது. வாரி எடுத்து அணைத்தார். கொஞ்சிக் குலாவினர். பிறகு கீழே விட்டுவிட்டு மீண்டும் தோத்திரத்தை தொடர்ந்தார்.

தருமபத்தினி வந்தாள். குடும்ப விஷயம் பேசினள். கோப தாபம், சண்டை சமரசம் யாவும் நிகழ்ந்தன. மீளவும் நண்பர் தோத்திரத்தில் ஈடுபட்டார்.

அந்தஸ்தில் உயர்ந்த நண்பரொருவர் வந்தார். வரவேற்பு, உபசாரம், முகமன், ஊர் உலகத்து விவகாரங்கள், கொடுக்கல், வாங்கல், வழியனுப்புதல், மீளவும் தோத்திரத் தொடர்ச்சி. இப்படிப்பட்ட தோத்திரம் எந்தக் கடவுளுக்குப் பிரீதி?

இன்னொரு நண்பர்: சிறிது சங்கீத ஞானம் உடையவர். தோத்திரத்தை நாட்டை ராகத்தில் தொடங்குவார்.

தோத்திரம் முழுவதையும் ராகமாலிகையாகத் தொடுத்துக் கொண்டே போவார். இந்தச் செயலால் அவர் கவனம் முழுவதும் இசையின் பக்கமே லயித்திருக்கும். ஒரு ராகத்திலிருந்து மற்றொரு ராகத்திற்கு மாறும் லாகவத்திலேயே கருத்து இருக்கும். மாறிய பிறகு மீண்டும் முந்தின ராகமே எட்டிப் பார்த்தால் அதை விரட்டியடித்துப் புதிய ராகத்தை நன்கு உருவாக்குவதிலேயே அக்கறை முழுவதும். தனிமையிலேயே இந்த லட்சணம். தோத்திரம் செய்துகொண்டிருக்கையில் அந்நியர் யாராவது வந்து விட்டாலோ கேட்கவே வேண்டாம். வந்தவர் தமது சங்கீத ஞானத்தை மெச்சவேண்டும் என்ற எண்ணம் அதிகமாகிவிடும்; ராகங்களைப் பொழிவதிலும் கார்வைகள் கொடுப்பதிலும் மூர்ச்சனைகளைச் சிறப்பிப்பதிலும் வெகு பாடுபட ஆரம்பித்து விடுவார். வந்தவர் பாடுபவரின் அவஸ்தையை உணர்ந்து மனத்துள் நகைத்துக் கொள்வார்; நயமற்ற குரலை அலுப்புடன் சகித்துக் கொள்வார். அதே சமயத்தில் கடவுளும் நகைத்துக் கொள்வார் அந்தப் பரம பக்தரின் தோத்திர முறையைக் கண்டு, என்றுதானே நாம் கொள்ளவேண்டும்.

பூசை: முன்னிரு அம்சங்களுமாவது பரவாயில்லை. மனிதன் மனிதனை ஏமாற்றுவது, தன்னைத்தானே நன்கு ஏமாற்றிக்கொள்வது இரண்டும் இந்தச் செயலிலே தான்.

பெரிய பெரிய வண்ணப் படங்கள், பளபளக்கும் விக்கிரகங்கள், கொட்டைப் பாக்கின் அளவிலிருந்து பெரிய தேங்காய்ப் பிரமாணம் வரையில் உள்ள விதவிதமான சாளக்கிராமங்கள், வெள்ளி, தங்கம் முதலியவற்றாலான பீடங்கள், பூசைக்குரிய வெள்ளிப் பாத்திரங்கள், கண்ணைப் பறிக்கும் வண்ணங்களும், கருத்தைக் கவரும் மணமும் உள்ள பலவகைப் புஷ்பங்கள், மற்றும் சந்தனம் வத்தி முதலிய வாசனைத் திரவியங்கள் முதலியவற்றினிடையே வெள்ளிக் குமிழிட்ட கருங்காலிப் பீடத்தின்மேல்

விரித்த மான்தோல், புலித்தோல் ஆசனத்திலே கம்பீர மாக அமர்ந்திருப்பார் பக்தர். பாலும் பழமும் தேனும் தின்பண்டங்களுமாக நைவேத்தியப் பொருள்கள் சூழ பல பக்தர்கள் பூசை அமளிப்படும். கூடியுள்ளவர்கள் கண் ணெதிரே தோன்றும் தெய்வமாக அந்தப் பக்தரைப் பாவித்து மரியாதை செலுத்துவர். இரைந்து பேசமாட் டார்கள். அந்த நிலைக்குப் பங்கம் நேரக்கூடாது; அந்த நிலை மேலும் மேலும் உயர்ந்துகொண்டே போகவேண்டும். கௌரவத்தை வளர்க்கவேண்டும் என்பவற்றைக் கருத் திலே கொண்டு அதற்குரிய ஆடம்பரச் செயல்களிலே பக்தர் ஈடுபட்டு விடுகிறபோது அந்தரங்க பக்திக்கு அவர் உள்ளத்திலே இடம் ஏது? உலகம் அவரை மதிக்கலாம்; கொண்டாடலாம்; தெய்வம் அவரைக் கண்ணெடுத்தும் பாராது. ஆடம்பரத்திலே கிட்டுகிற வறட்டுக் கௌரவந் தான் மிச்சம்.

தியானத்தை மேற்கொள்பவர் "நான் தியானத்திலே ஆழ்ந்துவிட்டேனானால் அருகே கொலை விழுந்தாலும் எனக்குத் தெரியாது!" என்கிறார்.

தோத்திரம் புரிபவர் "எச்சு ஸ்தாயியில் தோத் திரம் செய்வதால் அக்கம் பக்கம் யாராவது பேசினால் அந்தச் சந்தடி என் கவனத்தைக் கலைக்காது. தவிர வறட்டுத் தோத்திரத்தைவிட இசையோடு கலந்த தோத் திரத்தில் கடவுளுக்கு அதிகப் பிரீதி" என்கிறார்.

பூசை செய்பவர் "நாம் நலனைப் பெற்றால் மட்டும் போதுமா? 'லோகாத் ஸ்மஸ்தாத் ஸுகினோ பவந்து.' 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே யல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே!' பார்ப்பவர் மனம் பரவச மாகி, அவர்களும் வழிபாட்டில் ஈடுபடவேண்டும் என்பதே எனது நோக்கம். அதற்காகவே தான் சற்று அதிகமான எடுபிடி ஏற்பாடுகள் கூட!" என்று கூறுகிறார்.

இதெல்லாம் யாருக்கு ஒப்பிக்கும் பாடம்? மனிதரை வேண்டுமானால் இப்படியெல்லாம் சொல்லி, செயல் புரிந்து ஏமாற்றலாம்; தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளவும் செய்யலாம். கடவுளிடம் அது பலிக்காது. இதை உணர்ந்தவர் கூட இந்தக் குற்றத்தைப் புரிவது தான் விந்தையிலும் விந்தை!

வழிபாடு: அதற்கு என்ன வேண்டும்? ஒன்றுமே வேண்டாம். பரம்பொருளிடம் மனம் லயிப்பது ஒன்று தான் தேவை. மாளிகை, குடிசை, காடு, மேடு, இரவு, பகல், தனிமை, கூட்டம் எங்கும் எப்பொழுதும் எந்நிலையிலும் கடவுளை வழிபடலாம். அதற்கு உபகரணம் எதுவுமே தேவை இல்லை. மனம் கடவுளிடம் லயிக்கவேண்டும். அந்த மனம் பரிசுத்தமானதாக இருக்கவேண்டும். மனத்தை அடக்கும் ஆற்றல் அற்றவர் பிற உயிர்களுக்குச் சேவை செய்யலாம். வாழக் கடைப்படாத உயிர்களுக்குச் செய்யும் சேவையை ஆண்டவன் எல்லா வழிபாடுகளினும் மேலானதாகக் கருதுவான். அப்படி அன்பு செய்யும் தொண்டருக்கு ஆண்டவன் அருள் திண்ணம்.

—**ஆஸ்திகன்**

புஸ்தகம் படிக்கையில் தூக்கம் வரும்
அசோகா உற்சாகம் தரும்

பெண்களும்

“பெண்களின் மத்தியில் பழகுவதை நான் விரும்புகிறேன். அவர்களுடைய அழகை நான் விரும்புகிறேன். அவர்களுக்கு இயற்கையாக உள்ள நாணத்தை நான் விரும்புகிறேன. இவை எல்லாவற்றையும் விட அவர்களின் மௌனத்தையே நான் இன்னும் அதிகமாக விரும்புகிறேன்.''

★

ஆண்களைவிட பெண்களே புத்திசாலிகள். ஏன் தெரியுமா? உலக நிகழ்ச்சிகளைப்பற்றி அவர்களுக்கு அதிகமாகத் தெரியாவிட்டாலும் கூட தெரிந்த விஷயங்களைப் பற்றி ஆண்களைவிட அதிகமாக புரிந்து கொள்ளும் சாமர்த்தியம் பெண்களுக்கு இருக்கிறது.''

உலகத்திற்கு மொத்தம் கிடைத்த வார்த்தைக்ள் பத்து; அவற்றில் ஒன்பதுவார்த்தைகளை பெண்கள் சுவீகரித்துக் கொண்டனர். ஆண்களுக்குக் கிடைத்ததோ ஒன்றே ஒன்றுதான்.

★

“உடைந்துபோன உன் உள்ளத்தை நீ ஆண்டவனுக்கு அளித்தால் அவர் அதை சரிப்படுத்திவிடுவார். ஆனால் உன்னுடைய உள்ளம் முழுவதையுமே ஒரு பெண்ணுக்கு அளித்தாயானால், அவள் அதை உடைத்துச் சின்னாபின்னமாக்கிவிடுவாள்.''

★

“ஆரம்பத்தில் உலகைப் படைத்த பின்பு அல்லா வானவர் தன் கையில் ஒரு ரோஜா மலர், ஒரு அல்லி மலர், ஒரு புரு, ஒரு பாம்பு, கொஞ்சம் தேன், ஒரு நச்சுக்கனி, ஒருபிடி மண் இவற்றை எடுத்துக்கொண்டார். எல்லாவற்றையும் ஒன்றாகச் சேர்த்துப் பார்த்தார். அதில் அவர் கண்டது ஒரு பெண்ணின் முழு உருவம்.''

வாழ்க்கையும்

"வாழ்க்கை இரண்டு பகுதிகளைக் கொண்டது. கழிந்தது கனவு. மேற்கொண்டு வரப்போவது மனோராஜ்யம்."

★

"வாழ்க்கை என்பது என்ன? அது ஒரு கதை!"

★

"சிறிது வேலை, சிறிது தூக்கம், சிறிது இன்பம் இவற்றுடன் எல்லாம் முடிவடைகிறது. இதுதான் வாழ்க்கை."

★

"வாழ்க்கை சங்கீதம் போன்றது. செவி, உணர்ச்சி இயற்கையான யூகம் ஆகியவற்றைக்கொண்டு அதை அமைத்துக்கொள்ளவேண்டுமே தவிர விதி செய்வதாலன்று. ஆயினும், ஒருவன் விதிகளைத் தெரிந்துகொள்வதும் நல்லது தான். சில சமயங்களில் சந்தேகம் ஏற்படும் பொழுது அவை வழிகாட்டக் கூடும்."

★

"அடக்கத்தைக் கற்றுக் கொள்ள வாழ்வு ஒரு நீண்ட போதனை."

★

"உயர்ந்த வாழ்வு வாழ்வதற்கு மனிதன் கூடு விட்டு கூடுபாய வேண்டியதில்லை. இந்திர ஜாலங்களைக் கற்க வேண்டியதில்லை. அவன் சாதாரண மனிதனோடு மனிதனாய், மனித சமூகத்தில் ஒருவனாய் வாழ்ந்தால் போதும்."

★

"நாம் வாழ்வதேயில்லை. வாழவேண்டும் என்று எப்பொழுதும் எதிர்பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம்."

—தொகுத்தவர் T. S. J.

போர் இன்னும் ஓயவில்லை

இரண்டு உலக மகாயுத்தங்கள் ஆக்கிரமிப்பு வெறியிலே எழுந்து சுதந்திர வேட்கையிலே முறியடிக்கப்பட்டுவிட்டன. இரண்டு பெரும் யுத்தங்கள் முடிந்துவிட்டன. ஆனால் மனிதனின் சுதந்திர வேட்கைப் போராட்டம் இன்னும் ஓயவில்லை.

உலகப் போரிலே ஆக்ரமிப்பு நாடுகளின் ஆசை சரிந்தது. போர் வெறியர்கள் என்று மற்ற நாடுகளால் வர்ணிக்கப்பட்ட ஹிட்லர், முசோலினி, டோஜோ, யாவரும் மண்ணோடு மண்ணாய் மடிந்து விட்டார்கள். ஆக்கிரமிப்பைப் பொசுக்க அணுகுண்டே வீசப்பட்டது. மனித சமுதாயத்தின் சுதந்திரம் தப்பிப் பிழைத்தது என்று நேசநாடுகள் பெருமூச்சு விட்டன. அது சமாதானத்தைக் கண்ட பெருமூச்சு அல்ல. போர் ஓய்ந்தது, ஓய்வு கண்டோம் என்பதன் சலிப்பு!

சரித்திரத்தின் ஆரம்ப காலத்திலே மனிதனிடம் இருந்த விலங்கு வாழ்விலே அடிமைத்தனம் இல்லை. ஆக்கிரமிப்பு வெறியும் இல்லை. எல்லாம் வயிற்றுக்கான அலைச்சலாக இருந்தது. மானை வேட்டையாடித் தீயில் வாட்டித் தின்றுவிட்டு மனிதன் குகையில் உறங்கினான். அப்படியிருந்த மனிதனிடம் சங்கிலியால் கட்டி வதக்கிப் பிழிந்த அடிமை நரக வாழ்வு எப்படிப் புகுந்தது? நிர்கதியான நிலையிலே கொடும் விலங்குடன் மரணப் போராட்டம் ஒரு மனிதன் செய்ய மக்கள் கூட்டம் அதைப் பார்த்துக்களித்த அந்த மிருகத்தனம் மனித சமுதாயத்திலே எப்படிவந்தது. பெண்களையும், ஆண்களையும் ஆடுமாடுகள் போன்று சந்தையிலே ஏலம் போட்டு விற்ற அநாகரிகத்தைக் கொண்டுவந்தவர் யார்?

எல்லாமே எளியவனை வலியவன் வதைத்த காலம். அங்கே அநீதியும், அக்கிரமும் தலை விரித்தாடியது. அடிமைச் சந்தைகள் எங்கும் பெருகிக்கிடந்தன. அந்தக் கொடுமையான காலத்தை மறந்துவிட்டு ரத்தக் கரை படிந்த காலப்பாதையிலே முன்னேறுவோம். பாதையில் நாம் காண்பதென்ன? அட்டில்லா, செங்கிஸ்கான், தைமூர் இந்த ரத்த வெறியர்களின் கொடுமை; சீசர்,

அலெக்ஸாண்டர் போன்ற வீரர்களின் உலக மகுடாதிபதி ஆக வேண்டும் என்னும் ஆசை; இவைகள் தான் நாகரிகம் கண்ட மனிதனின் வாழ்விலே சரித்திரமாகிக் கிடந்தது. நெப்போலியன், ஹிட்லரின் போராட்டம் கூட இந்த வழியில் வந்து போனவை தான். வலியவனின் போராட்டம் எளியவனின் இரத்தங் குடிப்பதி லேயே இருந்தது.

ஹிட்லர் சொரிந்த குண்டு மாரியில் அழிந்த நகரங்களும், மக்களும் எத்தனை? போர் முடிந்து ஒன்பது ஆண்டுகள் ஆகியும் கூட ஐரோப்பிய நாடுகளில் போரிலே பாழடைந்த வீடுகள் இன்னும் குட்டிச் சுவர்களாக, போர்ச்சின்னங்களாக மனித சுதந்திரத்தைக் காக்க வீசிய அணுகுண்டிலே இன்னும் செத்துக் கொண்டிருக்கும் மனிதனைப் பார்க்கலாம்.

போர் ஓய்ந்துவிட்டது என்கிறார்கள். எந்தப் போர் ஓய்ந்தது? மனிதனின் சுதந்திரப் போர் ஓய்ந்துவிட்டதா?

இல்லை. இன்னும் போர் இருக்கிறது என்று மனிதனின் குரல் பல திசைகளிலிருந்தும் வருகிறது. திரும்பிப்பாருங்கள். நீங்கள் வந்த காலப் பாதையிலே இரத்தம் கூட உலரவில்லை. ஆனால் இன்னும் போர் நடந்துகொண்டிருக்கிறது. ஏகாதிபத்தியவாதி களுக்கும், அடிமை விலங்கை உடைத்தெறியும் மக்களுக்கும்!

கிழக்கு ஆப்பிரிக்காவில் காலனி நாடுகள், தென் அமெரிக்கா வில் குடியேற்ற நாடுகள், கிழக்கிலே இந்தோ சீனப் பிரதேசம் தொட்டு நம்முடைய கோவா வரை; அந்த மண்ணிலே பிறந்து வாழும் மக்கள் அங்கே குடியேறிய அன்னியர்களால் அடிமைப் படுத்தப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் தலைவர்கள் சிறையில் கிடக்கிறார்கள். ஆளுந் தலைவர்கள் சீமையில் இருக்கிறார் கள். அம்மக்களின் கூக்குரல் கேட்கப்படாமலே யிருக்கிறது. இனம், நிறத்தின் காரணமாக அவர்களின் ஜீவாதார உரிமை கூட மறுக்கப்பட்டிருக்கிறது. அங்கே சுதேசிகள் சுதந்திரமின்றி வதை படுகிறார்கள். மனிதன் அங்கே அடிமையாகவே வாழ்கிறான் அங்கே ஏகாதிபத்தியமும் சர்வாதிகாரமும் இருக்கிறது. அடிமை இருக்கிறது, கொடுமை இருக்கிறது, ஹிட்லரின் ஆவி உலாவு கிறது.

மனிதன் காலப்பாதையில் பல நூற்றாண்டுகளைக் கண்டு விட்டான். அறிவின் உச்சிக்கு ஏறிவிட்டான். ஆராய்ச்சி அரசியல் அவன் வாழ்விலே பெறும் மாறுதலை விளைவித்துக்கொண்டிருக் கிறது. தீராத வியாதிகள், துயரங்களையெல்லாம் தீர்க்கும் திறமையை அவன் பெற்றிருக்கிறான். ஆனால் அவனுக்கு என்றோ மாட்டப்பட்ட அடிமை விலங்கு இன்னும் உடைந்தும் உடைபடாமலும் இருக்கிறது.

அறிவைக் காணாத மனிதன் அடிமையைச் சகித்திருந்தான். ஆனால் அறிவு பூத்துக் குலுங்கும் இந்த யுகத்திலே அவன் அடிமை யாக இருக்க எப்படிப் பொறுப்பான். ஒரு மனிதன் சுகத்தில் புரள மற்றொருவன் வறுமையில் வாடப் பார்த்துக் கொதிக்கும் நெஞ்சு 'உழைப்பவனுக்கே உலகம்' என்று சங்கநாதம் செய்கிறது. மனிதனின் வயிற்றுக்கான போராட்டம் பெரும் அரசியல் தத்துவ மாக மாறியிருக்கும் இந்த வேளையில் ஜீவ வேட்கையான சுதந்திரம் இல்லாமல் மனிதன் இனியும் வாழ முடியுமா?

அணுகுண்டு, ஹைட்ரஜன் குண்டுகள், மனிதனை போரைக் கண்டு நடுங்கச் செய்யலாம். ஆனால் அடிமையாகக் கிடக்கும் மனிதனை அவற்றால் நடுங்க வைக்க முடியாது. ஏனெனில் அவன் சுதந்திரமாக வாழப் போராடுகிறான். அந்தப் போராட்டத்திற்கே உயிரைப் பலியாக்க எண்ணிவிட்டால், அணுகுண்டு தான் அவனை என்ன செய்யும்?

நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்

—அப்பர்

—'உதயன்'



பரிசுக்கேற்ற பத்திரிகைகள்

●

புத்தகங்களுக்கும் பத்திரிகைகளுக்கும் வனப்பளிப்பது சித்திரம் என்று தான் பொதுவாக நிலவியுள்ள கருத்து. சித்திரங்கள் ஏராளமாகவுள்ள பத்திரிகைகளும் புத்தகங்களும் நமக்கு மகிழ்ச்சியூட்டுகின்றன வென்பதில் சந்தேகமேயில்லை.

உண்மை இப்படியிருப்பினும் ஏராளமான சித்திரங்களைப் பிரசுரிக்கின்றன என்ற புகழ்பெருத இரண்டு லண்டன் நகர தினசரி பத்திரிகைகள் கவர்ச்சிகரமான அமைப்புக்காகப் பரிசுகள் பெற்றிருக்கின்றன. இப்பத்திரிகைகளில் ஒன்று உலகத்திலேயே மிகப் புகழ் வாய்ந்த 'லண்டன் டைம்ஸ்' ஆகும். இப்பத்திரிகை சென்ற 169 வருஷங்களாக லண்டனில் பிரசுரமாகிவருகிறது. நாலைந்து லக்ஷம் பிரதிகள் விற்கும் அநேக பத்திரிகைகள் உள்ள நகரத்தில் ஒரு லக்ஷம் கூட விற்பனையாகாத ஒரே பிரபல தினசரியாகும் 'லண்டன் டைம்ஸ்.' சென்ற நூற்றுண்டில் எந்த மந்திரி சபையும் 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகையின் ஆதரவின்றி நீடித்து நிலைக்க முடியாத நிலைமையிலிருந்தது. இன்னும் 'லண்டன் டைம்ஸ்' தலையங்கங்கள் உலக முழுவதும் ஆவலோடு எதிர்பார்க்கப்படுகின்றன.

படித்தவர்களிடையே, மனித வாழ்க்கையை யொட்டின விஷயங்களைப் பரப்புவதையே தன் லக்ஷியமாகக் கொண்டுள்ளது இந்தப் பத்திரிகை. இந்த லக்ஷியத்தை யடைவதற்காக தினசரிப் பத்திரிகையைத் தவிர சில பிரபல வார மாத வெளியீடுகளையும் பிரசுரித்துக்கொண்டு வந்திருக்கிறது.

"லண்டன் டைம்ஸ்" பத்திரிகையின் வார இலக்கிய அனுபந்தம் இலக்கிய உலகத்திலேயே மிகப் புகழ்வாய்ந்த தாகும். அநேக பிரசுரங்களைப் பற்றிய விமர்சனங்களும், இலக்கியத் துறையை யொட்டின பல கட்டுரைகளும், இலக்கிய மேதைகளின் உயர்ந்த கருத்துக்களையும் தவரு மல் வாராவாரம் அநேக வருஷங்களாகப் பிரசுரித்துக் கொண்டுவந்திருக்கிறது.

'லண்டன் டைம்ஸ்' பத்திரிகையின் 'கல்வி அனுபந்த மும்' ஒரு பிரபல வார வெளியீடாகும். கல்வித்துறையைப் பற்றின அநேக கட்டுரைகள் கல்வி சம்பந்தமான புத்தக விமர்சனங்கள், ஆசிரியத் துறையைப் பற்றி அநேக பிரபலஸ்தர்களின் அபிப்பிராயங்கள் முதலிய விஷயங் களில் இந்த 'டைம்ஸ்' கல்வி அனுபந்தத்தைத் தவிரச் சிறந்த வெளியீடு கிடையாதென்பது உலகப் பிரசித்தம். 'லண்டன் டைம்ஸி'ன் இவ்விரண்டு அனுபந்தங்களையும் 'காப்பி' யடித்து வேறு எவ்வளவோ பத்திரிகைகள் கல்வி அனுபந்தங்களும், இலக்கிய அனுபந்தங்களும் வெளியிடுவ துண்டு. ஆனல் இவை யெதற்கும் 'டைம்ஸ்' பத்திரிகை யின் அனுபந்தங்கள் பெற்றுள்ள புகழோ ஆதரவோ கிடையாது.

தொழில், இன்ஜினீரிங் முதலிய துறைகளைப் பற்றி யும் மாத வெளியீடுகள் பிரசுரிப்பதுண்டு 'லண்டன் டைம்ஸ்.'

'டைம்ஸ்' பத்திரிகைக்கு இருக்கும் அந்தஸ்துக்கு ஒரு சிறந்த உதாரணத்தை இங்கு கூறுவது பொருந்தும். ஐக்கிய நாட்டின் தலைநகரான வாஷிங்டனில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் தூதரைவிட 'லண்டன் டைம்ஸ்' பத்திரிகை நிருபருக்கு ஒரு உயர்ந்த ஸ்தானம் வெகுகால மாய் இருந்து வந்ததாம். ஐக்கியநாட்டு ஜனதிபதிக்கு இங் கிலாந்து அரசாங்கத்திடம் ஏதாவது கோரிக்கை செய்ய

விரும்பினல் அதைப் பற்றி 'டைம்ஸ்' நிருபர்களிடம் தான் முதன் முதலில் கலந்து ஆலோசிப்பார்களாம்.

இவ்வளவு சிறந்த முறையில் நீண்டகாலமாக நடந்து வரும் பத்திரிகை, பத்திரிகை உலகில் முதல் ஸ்தான மடைந்திருப்பதிலோ கவர்ச்சிகரமான அமைப்புக்காகப் பரிசுபெற்றதிலோ அதிசயமொன்றுமில்லை.

கவர்ச்சிகரமான அமைப்புக்காக பரிசுபெற்றமற்ருெரு பத்திரிகையாகும், கம்யூனிஸ்டு தினசரியான 'டெய்லி வொர்க்கர்' (*Daily Worker*) கம்யூனிஸ்டு பத்திரிகைகளைத் தயாரிப்பதைப் பற்றிய உண்மைகளை நாம் அறிந்து கொள்வது அவசியம். இப்பத்திரிகைகளனைத்தையும் வெளியிடுபவர்கள் சிறந்த அறிவாளிகளும் மிகுந்த கற்பனு சக்தியும் படைத்தவர்களுமாவார்கள். எந்த அற்ப விஷயத்தையும் மிக அழகாகவும் நம்பக்கூடிய விதத்திலும் பிரசுரிப்பார்கள். கட்டுரைகளின் தயாரிப்பு, அவற்றின் அச்சமைப்பு, சாதுர்யமான தலைப்புகள், புகைப்படங்கள், சித்திரங்கள் முதலியவற்றின் சாமர்த்தியமான உபயோகம் இவைதான். கம்யூனிஸ்டு பத்திரிகைகளுக்கு அளவற்ற புகழையளிக்கின்றன. அநேக கம்யூனிஸ்டு பத்திரிகைகளில் அச்சுப்பிழைகள் 'மருந்துக்குக் கூட' கண்டுபிடிக்க முடியாததற்குக் கா்ரணம் அப் பத்திரிகாலயங்களில் அலுவல் பார்ப்பவர்கள் நன்ருகப் படித்தோர்களும் தங்கள் தொழிலில் மிகுந்த சிரத்தைகொண்டவர்களுமா யிருப்பதுதான்.

கம்யூனிஸ்டு கட்சியின் பத்திரிகைகளும் பிரசுரங்களும் வெளியிடும் முறைகள் பத்திரிகை பிரசுரத்தில் ஈடுபட்டவர் களனைவருக்கும் ஒரு படிப்பினையாகும். இப்படிப் படிப்பினை யளிப்போர்கள் வெளியிடும் பத்திரிகைகளிலொன்று ஒரு சிறந்த பரிசு பெற்றதில் என்ன அதிசயம்!

———

ஒரு சிறுவர் கதை

காளையும் குதிரையும்

●

முருகன் என்பவனிடம் ஒரு ஒற்றை மாட்டு வண்டி இருந்தது. அவன் வசித்த ஊர் மக்கள் எல்லோரும் கொல்லர்கள். தினமும் வாள், வேல், அம்பு, கேடயம், கவசம் போன்ற போர்க் கருவிகளை ஏராளமாக ஆயிரக்கணக்கில் செய்து குவிப்பார்கள். அப்படி அவர்கள் செய்து குவிப்பதை முருகனின் ஒற்றைமாட்டு வண்டியில் ஏற்றுவார்கள். அவன் அதை மூன்று மைல் தூரத்திலிருக்கும் தலைநகருக்கு எடுத்துச் செல்வான். தினமும் குறைந்த பக்ஷம் ஐந்து முறைகளாவது அவன் வண்டி தலை நகருக்கும் ஊருக்கும் போகும்.

அவன் வண்டியை இழுத்து வந்த காளை மிகவும் சோம்பேறி. அதற்கு வண்டியை இழுக்க இஷ்டமே இல்லை. தீராதே என்று இழுத்து வந்தது. ஒவ்வொரு சமயத்தில் இடக்கு செய்யும். ஆனால் முருகனின் சாட்டை அதை அப்படிச் செய்ய அனுமதிப்பதில்லை. "கடவுளே, நான் ஏன் மாடாகப் பிறந்தேன், இந்த முருகன் அசையாது வண்டியில் உட்கார்ந்து என்னை விரட்டுகிறானே, நான் தானே உழைக்கிறேன், அவன் மட்டும் உழைக்காது உண்கிறானே" என்று கடவுளைநோக்கிக் கதறிக் கண்ணீர் வடித்து வந்தது காளை. முருகனின் வண்டி தினமும் அவ்வூர் கோட்டை வழியாகத் தான் போகவேண்டும். கோட்டையைக் காவல் காக்கும் வீரன் ஒருவனிடம் ஒரு அராபிபக் குதிரை இருந்தது. அதன் மீது ஏறிக் கொண்டு அவன் அரண்மனையைச் சுற்றிச் சுற்றி வந்து காவல் காத்தான். காலையிலிருந்து மாலைவரை அரண்மனையைச் சுற்றி வருவதால் குதிரைக்குக் கால்கள் வலிக்கும். வீரன் குதிரையைக் கோட்டைக்கு வெளியே கொண்டுபோக மாட்டான். அதனால் அதற்கு கோட்டைக்கு வெளியே என்ன நடக்கிறதென்பதே தெரி

யாது. ஆனால் பிறர் கூறுவதைக்கேட்டு வெளியே சென்று பார்க்க வேண்டும் என்ற ஆவல் உண்டாயிற்று.

அதுவுமல்லாமல் அதற்கு உழைக்கப் பிடிக்கவே இல்லை. எந்நேரமும் என்மீது ஒருவன் உட்கார்ந்துகொண்டே இருக்கிறான். என்னை விரட்டுகிறான் என்று எண்ணிக்கொண்டே இருந்தது.

"சே, இது என்ன பிழைப்பு..." என்று அலுத்துக்கொண்ட குதிரைக்கு ஒரு நாள் முருகனின் வண்டி மாடு தென்பட்டது.

"ஆகா, அந்த மாட்டுக்கு என்ன துன்பமிருக்கிறது! கஷ்டமில்லாமல் இந்த வண்டியை எப்படி இழுத்துக்கொண்டு ஓடுகிறது ஒரு நாளைக்கு ஐந்துமுறை தானே இதற்கு இப்படிச் செய்யவேண்டும். அதோடு அதன் உழைப்பு முடிந்து விடுகிறது. ஆனால் எனக்கு நாள் முழுவதும் உழைக்கவேண்டியிருக்கிறதே. நான் அந்த மாடாகப் பிறக்கும்படி ஏன் அந்தக் கடவுள் அனுக்கிரகிக்கவில்லை?" என்று கடவுளை நொந்து கொண்டது குதிரை.

அதே சமயம் முருகனின் மாடும், "சே, இது என்ன வாழ்வு, நான் இந்தக் குதிரையாகப் பிறந்திருக்கக் கூடாதா. நாள் முழுவதும் நான் வண்டியை இழுக்கிறேனே" என்று கடவுளை நொந்து கொண்டது. அப்பொழுது, வண்டியில் அமர்ந்துகொண்டிருந்த முருகனை நோக்கி, குதிரையில் வீற்றிருந்த வீரன் சுண்ணாம்பு கேட்டான். முருகன் சுண்ணாம்பைக் கொடுத்தான். இருவரும் சிறிது நேரம் தங்கள் வாகனங்களைவிட்டுக் கீழே இறங்கிப் பேசினார்கள்.

அந்த இடைவேளையில், யாருக்கும் தெரியாமல் கடவுள் தோன்றினார். ஆனால் அவர் உருவம் குதிரைக்கும் மாட்டுக்கும் மட்டும் தெரிந்தது. கடவுள் குதிரையை நோக்கி, "உன்னை மாடாக மாற்றிவிடுகிறேன், சம்மதமா...?" என்றார்.

குதிரை மகிழ்ச்சியுடன் தலையை ஆட்டிச் சம்மதத்தைத் தெரிவித்தது.

"கடவுள் மாட்டை நோக்கி, "உன்னைக் குதிரையாக மாற்றி விடுகிறேன் சம்மதமா?" என்றார். மாடு ஆனந்தத்துடன் சம்மதித்தது. கடவுள் கையைக் காட்டிவிட்டு மறைந்தார். உடனே மாடு குதிரையின் உடலிலும், குதிரை மாட்டின் உடலிலும் போய் மாறிக்கொண்டன.

முருகனும் வீரனும் தங்கள் ஆசனங்களில் ஏறிக்கொண்டார்கள். குதிரை மாட்டின் உடலில் வண்டி இழுத்தது. சிறிது நேரம் சிரமம் தோன்றவில்லை. பிறகு தான் "இதென்ன கழுத்து இப்படி வலிக்கிறதே!" என்றது. அதனால் ஒரு முறைக்குமேல் வண்டியை இழுக்கமுடியவில்லை. ஆனால் முருகன் விடவில்லை. சாட்டையால் விளாசிவிட்டான்; போதும் போதாதற்கு அன்று நல்ல மழை. முருகன் மழையிலேயே கடுமையாக வேலை வாங்கிவிட்டான்.

குதிரை, பாவம் கண்ணீர்விட்டு அழுதது. "நம்மை, ஒரு நாள் கூட நம் யஜமான் மழையில் நனைய வைக்கமாட்டாரே" என்று பழைய எஜமானை நினைத்து அழுதது குதிரை. "கடவுளே, உழைக்காமல் உண்ண முடியாது. என்னை மன்னித்துவிடுங்கள்" என்று கடவுளை வேண்டிக்கொண்டது குதிரை.

மாடு, குதிரையாக மாறியதும் அதன் மீது ஏறி அமர்ந்து கொண்டு விரட்டினான் வீரன். அதற்கு முதலில் இன்பமாக இருந்தது. ஆனால் நேரமாக ஆக அதற்கு முதுகெல்லாம் வலித்தது. இவன் நம்மை ஒரு விநாடி கூட உட்காரவிடமாட்டேன் என்கிறானே என்று அழுதது மாடு. போதும் போதாதற்கு அன்று அரண்மனையில் எவனோ ஒரு திருடன் புகுந்து பொருள்களைத் திருடிவிட்டான். வீரன் அவனைக் கண்டு மாட்டை அவன் பின்னாலேயே துரத்தினான். அவனையும் சுமந்துகொண்டு வேகமாக ஓடுவது மாட்டுக்கு மிகவும் சிரமமாக இருந்தது. அது பழைய எஜமான் முருகனை நினைத்து அழுதது; அவன் ஒரு நாள் கூட அதை வேகமாக விரட்டியதில்லை. மெதுவாகப் போனாலே போதும் என்று விட்டுவிடுவான்.

"கடவுளே, என்னை மன்னித்துவிடு, உழைப்பின் உயர்வை அறிந்துகொண்டேன்! உழைத்தால் தான் இன்பம். எல்லாப் பணிகளிலும் துன்பம் இருக்கத்தான் இருக்கிறது" என்று கதறிக் கண்ணீர் விட்டது மாடு. அடுத்த நாள், முருகனும் வீரனும் வெற்றிலைக்காக சந்தித்துக் கொண்டார்கள். அப்பொழுது கடவுள் தோன்றினார். அவரைக் கண்டதும், மாடும் குதிரையும் மன்னிப்பு வேண்டிக் கதறின. கடவுள் மனமிரங்கிக் குதிரையைக் குதிரையாக மாற்றினார். மாட்டையும் மாடாக மாற்றி மறைந்தார். உழைப்பின் உயர்வை உணர்ந்த இரண்டு பிராணிகளும் தத்தம் பணியை ஆனந்தமாகச் செய்யத் துவங்கின. —'ரேவதி'

கீதையைப் படிப்பது எப்படி?

•

வேதங்களைப் படிப்பவர்களில் பல ரகத்தினர் உண்டு. நண்பரிடமிருந்தும் புத்தகசாலைகளிலிருந்தும் இரவல் வாங்கியும், சில சமயம் சொந்தமாக வாங்கியும் ஏராளமாகப் புத்தகங்களைப் படிக்கும் ஒரு நண்பர் எனக்கிருந்தார். இவருடன் பேசுவது ஒரு அகராதியைப் படிப்பதற்குச் சமம், இவருக்குத் தெரியாத விஷயமே கிடையாது. எந்த விஷயத்தைப் பற்றியும் சிறந்த நூல்கள் எவை யென்பதை நொடியில்கூறிவிடுவார்; எந்தெந்தப் புத்தகங்களுக்கு எந்தெந்த விசேஷ அம்சங்களுண்டென்பதையும் எடுத்துரைப்பார்.

இவர் ஒரு சமயம் என்னிடம் கீதையைப் பற்றிச் சம்பாஷித்துக் கொண்டிருந்தார். நான் கேட்டிராத கீதையை யொட்டிய அநேக புத்தகங்களைப் பற்றி இவர் விமர்சித்தார். முடிவில் இவரைப் பற்றி விசாரித்ததில், இவர் அநேக ஆயிரம் புத்தகங்களின் முகவுரைகளை மட்டும் படித்துக்கொண்டு ஒரு 'ஸேல்ஸ்மேனை'ப்போல் பேசுவதற்குக் கற்றுக்கொண்டவரென்று எனக்குத் தெரியவந்தது.

என்னுடன் சிறைவாசஞ் செய்த மற்றொரு நண்பரின் ஞாபகம் எனக்கு வருகிறது. இவருக்கு சம்ஸ்கிருதம் தெரியாது; கீதையைப் படித்ததுமில்லை. வாழ்க்கையில் இவருக்கு அளவற்ற துயரங்கள் நேர்ந்ததனால் 'உலகமே தன் சத்துரு' என்ற எண்ணம் இவர் மனத்தில் குடிகொண்டது. ஒரு நாள் இவர் "கீதை எம்மாதிரியான நூல்" என்று என்னைக் கேட்டார். கீதையின் வேதாந்த ஸாரத்தைப் பற்றிச் சற்று இவருக்குக் கூறினேன். மறுநாள் இவர் என்னிடம் வந்து 'முன்ஷிஜி, நேற்றுதான் எனக்குச் சற்று நித்திரை வந்தது. இனிமேல் எனக்குத் தினமும் சிறிதுநேரம் நீங்கள்

கீதையைக் கற்றுக்கொடுக்க வேண்டும்'' என்றுகூறினர். இதன் பிரகாரம் தினந் தோறும் அவருக்குக் கீதையைக் கற்பித்து அதன் பொருளை விளக்கி வந்தேன்.

இவர் சூட்சுமமான புத்தி படைத்தவராதலால் கீதையைப் பற்றிப் பலவிதச் சந்தேகங்களைக் கேட்கத் தொடங்கினர். மனிதனின் கடமைகளைப் பற்றிப் பகவான் கீதையில் சொல்லியிருப்பதை அபத்தமென்று கூறினர்; "கர்மாக்களை என் பொருட்டாகச் செய்'' என்று பகவான் கூறியிருப்பது பற்றி "ஸ்ரீகிருஷ்ணன் மனிதரை அடிமையாக்கத் தான் பார்க்கிருன்'' என்று அபிப்பிராயப்பட்டார்.

என்னுடன் சிறையிலிருந்த சர்தார் வல்லபாய் பட்டேல் ஒரு தினம், "இம்மாதிரியான ஒரு முட்டாளுக்குக் கீதையின் பொருளை நீ ஏன் விளக்குகிருய்?'' என்று என்னைக் கடிந்து கொண்டார். "பகவான், என்னிடம் பக்தி கொள்ளாதவர்களுக்கு என் உபதேசங்களை யளிக்காதே'' என்று கூறியிருப்பதற்கு எதிராக உள்ளது உன் செயல்'' என்றும் என்னிடம் கோபித்துக் கொண்டார். "அந்த மனிதன், தான் அறிவாளி என்றும் மற்றவர்களெல்லாம் முட்டாள்களென்றும் எண்ணிக் கொண்டிருக்கிருன்; அதனல்தான் அவன் என்னிடங் கீதையைக் கேட்கிருன். கீதையைக் கேட்பதால் அவனுக்கு மன நிம்மதி கிடைக்கிறது. அதனல் அவனுக்கு இரவில் நித்திரையும் வருகிறது. பலனை எதிர்பாராத செய்கைகளில் இதைவிடச் சிறந்ததாக ஏதாவது என்னல் செய்ய முடியுமா?'' என்று சர்தாருக்குப் பதிலளித்தேன்.

அநேகருக்குக் கீதை படிப்பதென்பது ஒருபெரும் தலைவலி; பலருக்கு ஒரு பொழுதுபோக்கு. மற்றுஞ் சிலர் காரிய சித்திக்காகக் கீதையைப் பாராயணஞ் செய்கிருர்கள். கீதையைப் படித்துக் கொண்டே இவர்கள் தங்கள் மனத்தில், "கிருஷ்ண பகவானே! எனக்கு பணத்தைக் கொடு, அந்தஸ்தைக் கொடு, இன்பத்தைக் கொடு; அதற்கீடாகப் பிரதிதினமும் பத்து நிமிஷங்கள் உன் கீதையைப் பாராயணஞ் செய்துவிடுகிறேன்'' என்று நினைத்துக்கொள்ளுகிருர்கள். பகவத் கீதை இவர்களுக்கு

குதிரைப்பந்தயத்தில் வாங்கும் டிக்கட்டுக்குச் சமானம். மற்றுஞ் சிலர் பகவத் கீதையிலுள்ள சில தத்துவங்கள் தமக்கும் தெரியுமென்ற வீண் பெருமையடித்துக் கொள்வதற்காகவே கீதையைப் படிக்கிறார்கள்.

இன்னுஞ் சிலர் கீதையை ஒரு சிறந்த இலக்கிய சிருஷ்டியென்று மட்டும் கருதிப் படிக்கிறார்கள். கீதையின் சொல் நடை, எப்படி எங்கெந்த வார்த்தைகள் எவ்வளவு தடவைகள் கையாளப்பட்டிருக்கின்றன, ஒன்றுக்கொன்று பொருந்தாதது போல் தோன்றும் கருத்துக்கள் எவை, வாசகங்களுக்கும், கருத்துக்களுக்கும் எத்தனை வியாக்கியானங்கள் செய்ய முடியும், இவைபோன்ற வீண் விவகாரங்களில் தங்கள் சிரத்தையைச் செலவிடுகின்றனர். இப்படி உடலைக் கிழித்து உண்மையைத் தெரிந்துகொள்ள விரும்புவோரின் சிரத்தை காம சாஸ்திரத்திலும், சிருங்கார மஞ்சரியிலும், பகவத் கீதையிலும் ஒன்றுபோலத்தானிருக்கும். இவ்வாறு படிப்பது மூலம் அறிவை ஓரளவிற்குப் பெறலாம்; ஆனால் மெய்ஞ்ஞானம் வளராது.

பண்டிதர் கீதையைப் படித்து உபந்நியாசஞ் செய்யும்போது தம்முடைய வித்தையை எத்தனைபேர் புகழ்கிறார்களென்பதில் தான் நோக்கமிருக்கும். ஞானமுதத்தைப்பாமர மக்களுக்கு ஊட்டவேண்டுமென்பதன்று இவரது விருப்பம், தமது பாண்டித்தியமான தடியால் நமது மண்டையிலடிக்கிறார்; அவ்வளவுதான்.

தம் நடத்தையை ஒழுங்குபடுத்திக் கொள்வதற்காகவும் சிலர் கீதையைப் படிப்பதுண்டு. இது ஓரளவிற்குப் போற்றத்தக்கதானாலும் பக்தியின்றிப் புராணங்களைப் படிப்பதில் புண்ணியமில்லை யென்று தான் கூறவேண்டும். கீதையைப் படிப்பதற்கு அத்தியாவசியமானது பக்தி சிரத்தையான மனப்பான்மை. இந்த மனப்பான்மையிருந்தால் மனிதனுக்குத் தன்னுடைய குற்றங் குறைகளும், அவற்றால் ஏற்படும் மனவேதனைகளும் எவ்வளவு பரிதாபகரமானவை யென்று தெரியவரும்.

வாழ்க்கையில் வனப்பானவை யென்று நாம் கருது

வதெல்லாம் மனிதன் முயற்சியிலிருந்தும் அவன் படுந் துன்பத்திலிருந்தும் உற்பத்தியானவையே. வாழ்க்கையில் அளவற்ற கஷ்டங்களை யனுபவித்த மனிதர்களுக்குத்தான் அன்பின் புனிதத் தன்மையையும், மேன்மையையும் பற்றித் தெரியும்.

உத்தமமான மனிதத் தன்மை யென்பது கட்டுப்பாடு, முயற்சி, சுகதுக்கங்கள் முதலியவற்ருல் நிறைந்த வாழ்க்கையின் பலனுகும்.

பக்தி சிரத்தையுடன் கீதையைப் படிக்கும் மனிதனுக்கு இந்த விஷயங்கள் எளிதில் விளங்கும்.

நீதி நிறைந்த வாழ்க்கையை ஒரு நாயால்கூட நடத்தமுடியும்.

நேர்மையான வாழ்க்கைக்கு கடவுள் பக்தியே அடிப்படையாகும்.

கீதையை அடிக்கடி படிப்பவர்களின் உள்ளங்களில் கீதாவாசகங்கள் வேரூன்றி விடுகின்றன. தனக்குப் பிரத்தியேகமாகப் பிடித்த சுலோகங்களை அடிக்கடி ஜெபிப்பதால் இவற்றின் கருத்து உள்ளத்தில் புகுந்துவிடுகிறது. மனக்கவலையால் வாடிக்கொண்டிருக்கும்பொழுது ஊக்கமளிப்பதற்கும், வரட்டு ஜம்பம் தோன்றும் போது அதை ஒடுக்குவதற்கும், கீதையின் சுலோகங்கள் மனத்தில் அடிக்கடி தோன்றிவாழக்கைக்கு ஒரு புதிதான சோபையை யளிக்கின்றன.

கீதையைப் படிக்க வேண்டியது அறிவு பெறுவதற்கு மட்டுமன்று; ஞானம் தேடுவதற்கும், உள்ளம் ஒளி பெறுவதற்குமேயாகும். இந்த மனப்பான்மையோடு கீதையைப் படிப்பவர்கள் மனத்தில் இன்னமும் ஞானம் பெறவேண்டுமென்ற ஆவல் குடிகொண்டு, எல்லாம் அறிந்தோமென்ற அகந்தை அகன்றுவிடுகிறது.

உள்ளத்தில் ஒளி நிறைந்தால் ஆண்டவனை நேரில் காண்பதற்குச் சமமன்றோ?

—K. M. Munshi in *Book University Journal*.

பெண் அரசியின் துறவு

●

இரவு நடுநிசி.

அசோகன் மகா வெற்றியை அடைந்தான். சரித்திரமே கண்டறியாத ஒரு மாபெரும் வெற்றியை சக்ரவர்த்தி அசோகன் கண்ணால் கண்டான்.

போர்க்களத்திலே, பகைவனின் பலஹீனத்திலே, பிணக் குவியலின் அஸ்திவாரத்திலே, ராஜ வெறியிலே, வீரர்களின் முனகல்களிலே, அந்த மகத்தான வெற்றியை சாம்ராட் அசோகன் கண்டான்.

"ஆ, என்ன கோரமான படுகொலை இது" என்று ஆகாயம் கூறி தனது கண்களை இறுக மூடிக்கொண்டது. அந்தகாரமும் இன்புற்று, அமைதியின்மையும் சந்தோஷத்துடன் அவ்விடத்தை கோரமாக ஆட்சி புரிந்துகொண்டிருந்தன. அசோகன் அந்தக் கூடாரத்திற்குள்ளே உலாவிக்கொண்டிருந்தான். அவனது உள்ளம் புறங்காட்டி ஓடிப்போன எதிரியின் கோழைத்தனத்தைப் பற்றி நினைத்து பூரித்திருக்கவில்லை. ஆனால்?

யுத்தக் களத்திலே தலை வேறு முண்டம் வேறு, கை வேறு கால் வேறு துண்டிக்கப்பட்ட படைகளின் துடிதுடிப்பையும், துன்பத்தையும் நினைத்து, நினைத்து, பார்த்திபனின் உள்ளம் பொசுங்கியது. கணவனை இழந்த கைம்பெண்களின் கதறல், தாயைப் பிரிந்தசேய்களின் தவிப்பு, சேயைப் பிரிந்த தாய் தந்தைகளின் சோகம்—தோழனை இழந்த வீரனின் துயரம், துயரத்தின் துடிப்பு ஆகிய இவற்றைக் கண்ட அசோகனின் உள்ளம் கரைந்தது. அசோகனின் மனத்திலும், அந்தகாரமும், அமைதியின்மையும், அவ்விடத்தை ஆண்டுகொண்டு இருந்தது போலவே, ஆக்ரமித்துக் கொண்டிருந்தன.

மன்னனின் மனநிலை மந்திரிக்கு மாத்திரம் கண்டிப்பாய் தெரிந்திருந்தது. மன்னனைக் கண்டு மருந்தூட்டினார் அமைச்சர்—நோயாளிக்கு நம்பிக்கை யூட்டும் வைத்தியர் போல்.

"இறைவனின் விருப்பம் இப்படி யிருக்கும் பொழுது, நம்மால் என் செய்ய முடியும்?" என்ற சமாதான பேச்சொன்றை அமைச்சர் விடுவித்தார்.

அவர்—அரண்மனையில் ஆருடம் பார்க்கும் ஜோதிடர்—அழைப்பு இல்லாமலே அரசனைக் காண வந்தார்.

"அந்த பாபத்தைப் போக்க ஆயிரம் அந்தணர்களுக்கு அன்னதானம் செய்யவேண்டும்; அத்துடன் பதினாயிரம் ஆடுகள் காளிதேவிக்கு பலி கொடுக்க

வேண்டும்.'' மன்னர் சிந்தித்தார்.

''மாண்டவர் தொகையே பெரிதென மதித்து, என் மனம் வருந்தும் பொழுது, இன்னுமா ஆயிரக்கணக்கான ஆடுகளை பலியிடுவது.''

உள்ளத்தில் மாபெரும் போராட்டம்.

ஜோதிடர் சிரித்தார். அந்தச் சிரிப்பு மன்னனின் சிந்தனையை சிதற அடித்தது.

''அரண்மனைக்குச் சென்று அப்படியே செய்வோம்'' என்று தீனக்குரலில் அசோகன் கூறினான்.

★

பாடலீபுரத்தின் அலங்காரம் மிகப் பிரமாதமாக இருந்தது. அசோகன் வெற்றி முரசைக் கொட்டினான். அந்த வெற்றி, சரித்திரமே காணாத ஒரு மகத்தான வெற்றி. அரண்மனை முழுவதும் ஆனந்தத்தால் அல்லோல கல்லோலப்பட்டது. விருந்தும் விளையாட்டும், கேளிக்கையும் கோலாகலமும், இசையும் இன்பமும் எங்கும் நிலவி இருந்தன.

ஆனால்?

அந்த அரண்மனையில் ஒரே ஒரு உள்ளம் மட்டும் இவ்வரிய காட்சிகளைக் கண்டு ஆனந்திக்காமல், தீர்க்க ஆலோசனை செய்துகொண்டிருந்தது.

''இங்கே நான் மஞ்சத்தில் படுத்திருக்கிறேன்.'' ஆனால் வெளியே?

சுற்றிலும் சுவரில்லாமல், மேலே கூரையில்லாமல், மண்ணிலே புழுவோடு புழுவாகப் படுத்திருக்கின்றனர். ''எனக்குப் பசியில்லாமல் இருந்தும் சிறிது நேரத்திற்கு முன்பு தான் தட்டிலே உயர்ந்த பழவகைகளை எச்சிற் படுத்திவிட்டு வந்தேன்.''

ஆனால் வெளியே?

பாலுக்கு அழுதழுது சற்று நேரத்திற்கு முன்புதான் கண்ணயர்ந்தன பச்சிளங் குழவிகள்.

''இங்கே விருந்து.''

ஆனால் வெளியே?

எங்கும் பொங்கும் வேதனை.

''ஏன் இந்த ஏற்றத் தாழ்வு?''

கலிங்கப் போர் ஆரம்பமானதிலிருந்தே சங்கமித்திரை, சாம்ராட் அசோகனின் அன்புக்கும் பட்டத்திற்கும் வாரிசான ஒரே பெண்ணின் உள்ளத்தில் சண்டமாருதம் வீசிக்கொண்டிருந்தது. போரில் நிகழ்ந்த பயங்கரப் படுகொலை அவள் உணர்வை மேலும் கோரமாகச் செய்துவிட்டது.

சில தினங்களுக்கு முன்பு கூட கோவிலுக்குச் சென்று திரும்பி வரும்பொழுது உபகுப்தரைச் சந்தித்தாள் சங்கமித்திரை.

''மகளே! பேராசை என்ற அடிப்படை மீதுதான் இன்றைய வாழ்க்கைக்கான கோர மாளிகை கட்டப்பட்டிருக்கின்றது. சுயநலம், பொறாமை, பேராசை ஆகிய இவை எதனையும் சூழ்ந்திருக்கிறது.

'இளவரசி' என்று உன்னை அழைப்பதும் உன் முன்னால் வேறொரு ஆத்மா அடங்கி ஒடுங்கி நிற்பதும் எதன் பொருட்டு? ஏன் ஒருவன் மற்றொருவனைக் கண்டு அஞ்சவேண்டும்? ஏன் கூழைக் கும்பிடு போடவேண்டும்? ஒருவன் அரசனாகவும் மற்றொருவன் ஆண்டியாகவும் இருப்பதேன்? அரசனாய்ப் பிறந்தவன் அரசனாகத்தான் வாழவேண்டுமா? வாளைக்கொண்டு உலகத்தை வளமாக்க முடியாதென்று உணர்ந்து அரச சுக போகங்களை வெறுத்து, காடு மலை மேடு எல்லாம் கடந்து, அன்பென்னும் அரிய குணம் கொள்ளவேண்டும். ஆசைகளை ஒழிக்கவேண்டும்; ஆசையே ஏனைய துன்பங்களுக்கெல்லாம் அடிப்படை என அறிந்த அக்கருத்தை அனைவரும் ஒப்புக்கொள்ளச் செய்த அந்த ஆசிய ஜோதியை, அக்கருணை வள்ளலை நீ அறிய மாட்டாய்! யோசித்துப் பார், சொல்ல வேண்டாம் சங்கமித்திரை, குழந்தையைக் கெடுத்தான் என்றும், மகளின் மனத்தை மாற்றிவிட்டான் ஆண்டி என்று மன்னரோ, மற்றவரோ தூற்ற வேண்டுமா? சென்று சிந்தனை செய்-சிந்தித்துப்பார், மகளே!" என்று கூறிச் சென்றார் உபகுப்தர்.

★

விழா, சங்கமித்திரை இல்லாததால், வெறிச் சென்றிருந்தது. அதனை அசோகரும் அமைச்சரும் அறியாமல் இல்லை. பணிப் பெண்கள் பறந்தனர். பதில் கொடுக்க யாரும் திரும்பவில்லை. வெற்றி விழாவில் இளவரசி ஏன் பங்கு எடுத்துக் கொள்ளவில்லை?

மன்னன் திகிலடைந்தான். அசோகன் அவசரமாக உபகுப்தரின் குடிலை அடைந்தான்.

உடலில் மட்டும் அல்ல. உள்ளத்திலும், சங்கமித்திரை உடையிலும் மாற்றத்தைக் கண்டான் மன்னன். அரசாளப் பிறந்தவள் ஆண்டியாக நிற்கின்றாளே! என்று ஏங்கி மருண்டான்.

ஏன்? ஏன்?

இந்தக் கேள்வி அசோக சாம்ராஜ்யத்தில் ஒவ்வொரு மூலையிலும் எதிரொளித்தது.

"எனக்கு இந்த இராஜ போகம் பிடிக்கவில்லை. தனிமையில் சாந்திபெறும் துறவற வாழ்க்கையே எனக்குப் பிடித்திருக்கிறது" என்றாள் சங்கமித்திரை.

"ஆளப்பிறந்தவள் ஆண்டியாக அலைவதா? சௌந்தர்ய தேவதை துறவிக் கோலங் கொண்டு திரிவதா" என்று கூறி அரசன் விம்மினான்.

"தந்தையே! அதிகாரத்தாலும், படைபலத்தாலும் உலகை நீண்டகாலம் ஆள முடியாது. அரசும் அதிகாரமும் நிலையற்றவை. மேலும், மேலும் துன்பங்களுக்கு ஏதுவானவை! 'அவன்' அரசனென்றும்

'இவன்' அடிமை என்றும் குறிக்கும் பாகுபாடு ஒழியட்டும்! ஒருவன் அரசனுவதற்கு லக்ஷக் கணக்கான உயிர்களை பலி கொடுக்கவேண்டுமா? இக் கொடுமை இன்றுடன் ஒழியட்டும்! "எல்லாரும் இந்நாட்டு மன்னர்; எல்லாரும் இந்நாட்டு மக்கள்; எல்லாரும் ஒரு இனம்." என்ற சமதர்ம கொள்கை பரவட்டும், விடை கொடுங்கள். ஆசாபாசத்தில் சிக்கித் தவிக்கும் சகோதர சகோதரிகளுக்கு என் சேவையை அர்ப்பணிக்கின்றேன்.

வெற்றி மகிழ்ச்சியில் மூழ்கியிருந்த வேந்தனின் மனம் விழித்துக்கொண்டது. சாம்ராட் அசோகனின் மனம் மகளின் துறவு கண்டு மாற்றம் அடைந்தது.

அசோகன் "இனி வாளேந்தி யுத்தம் புரிவதில்லை" என்று 'விரதம்' பூண்டான்.

அசோகன் வெற்றி யடைந்தான். சரித்திரமே கண்டறியாத ஒரு மாபெரும் வெற்றியை சக்ரவர்த்தி அசோகன் கண்டான்.

எம்.கே நாமகிரி ஸ்ரீனிவாசன்

★ தவளையின் எச்சரிக்கை! ★

கிழக்கு நாடுகளிலுள்ள மக்கள் இயற்கையாக நடக்கும் பல சம்பவங்களை சூசகங்களாகக் கருதுகிறார்கள். சந்திர சூரிய கிரணங்கள் அடிக்கடி ஏற்படுவது நாட்டுக்கு ஏதோ தீங்கு ஏற்படுவதன் அறிகுறியாக நாம் நம்புகிறோம். வால் நக்ஷத்திரம் தோன்றுவதும் நாட்டுக்குத் தீங்கு நேரிடப் போவதன் சூசகமாகக் கருதுகிறோம்.

இந்த ரகத்தைச் சேர்ந்த ஒரு சம்பவம் சமீபத்தில் மலேயாவில் நிகழ்ந்ததாம். அங்கு தவளைகளில் இரண்டு முக்கிய ரகங்களுண்டு. சில தினங்களுக்கு முன்பிருந்து இந்த இரு தவளைகளுக்கிடையே பெரும் போர் தொடங்கியுள்ளதாம். இந்தப் போரில் கரைத் தவளை கடற் தவளையைத் தோற்கச் செய்யும் என்று மலேயாவாசிகள் நம்புகிறார்கள்.

இம்மாதிரித் தவளைப் போர் நிகழ்வது நாட்டுக்கு ஏதாவது பெருந்துயரம் ஏற்படப்போகும் தருணத்தில்தானென்பது மலேயாவாசிகளின் நம்பிக்கை.

இந்தோ சீனுவில் ஜெயக்கொடியை நாட்டியுள்ள கம்யூனிஸ்டு கட்சியால் தாய்லாந்தும் அதற்குத் தெற்குப் பாகத்திலுள்ள ராஜ்யங்களும் பாதிக்கப்படுமென்று பயப்பட வேண்டிய இத் தருணத்தில் மலேயாவாசிகளின் நம்பிக்கை பொருத்தமானது தானே!

ரிச்யச்ருங்கர்

ராமாயணத்தில் எத்தனையோ ரஸமான கட்டங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு கட்டத்தையும் தனியே எடுத்து, ஆழ்ந்த சிந்தனைக்குட்படுத்திப் பார்த்தால், அந்தக் குறிப்பிட்ட கட்டத்தின் ரஸந்தான் மிகவும் உயர்ந்திருப்பதுபோல் தோன்றும். காரணம் அந்த மஹா காவ்யத்தின் உயர்வு தான்.

இப்பொழுது ரிச்ய ச்ருங்கரை ராமாயண பாத்திரங்களுள் முக்கியமான ஒருவராக பாவித்து, அவரைப் பற்றிச் சற்று ஆராய்வோம். உண்மையில் ராமாயணத்தின் நடுக்கதைக்கு ரிச்யச்ருங்கர் ஒரு முக்கியமான பாத்திரமல்ல; ஆனல் ராமாயண காவ்யத்தின் பற்பல விவரணைகளுள் ஒன்றுன ராம, லக்ஷ்மண, பரத, சத்ருக்ன ஜனனத்திற்கு ரிச்யச்ருங்கர் ஒரு பிரதான பாத்திரம்.

வால்மீகி ராமாயணத்தில் கூறப்பட்டுள்ள ரிச்ய ச்ருங்கர் கதையைச் சுருக்கமாகக் கூறுகிறேன்.

தசரதனுக்குப் புத்ரனில்லாத குறை மிகவும் துயரமளித்து' வந்தது. புத்ரன் பிறப்பதற்காக அச்வமேதம் என்கிற குதிரை யாகம் செய்யவேண்டுமென்று தீர்மானித்தான். மந்திரிகளில் ஒருவனுன ஸுமந்த்ரனை அழைப்பித்து குருக்களையும், புரோஹிதர்களையும் வரவழைக்க ஏற்பாடு செய்தான்.

இந்த ஸந்தர்ப்பத்தில் ஸுமந்த்ரன் அரசனுக்குப் பழைய கதை ஒன்றைக் கூறினன்; பிற்காலத்தில் தசரதனுக்கு ராமன் முதலிய பிள்ளைகள் பிறப்பதைக் குறித்து, ரிஷிகளின் கூட்டத்தில் ஸனத்குமார பகவான் கூறிய கதை இது.

காச்யபர் என்ற மஹரிஷிக்கு விபண்டகன் என்று ஒருபிள்ளை; விபண்டகனுக்கு ரிச்யச்ருங்கர் என்று ஒரு பிள்ளை பிறந்தார். அவர் பிறந்ததிலிருந்தே வனவாஸம் செய்து நகரங்கள், பட்டணங்கள், மனிதர்களுடைய பழக்கத்திற்கு அப்பால் தன் காலத்தைக் கழித்து வந்தார். சாஸ்த்ர விதிப்படி தனது கடமைகளைச் செய்துகொண்டு, தந்தையான விபண்டகருக்கு சிச்ருஷை செய்து வந்தார். இந்த ஸந்தர்ப்பத்தில் அங்கதேசத்துக்கு ரோம

பாதன் என்பவன் அரசனுக இருந்தான். அவனுடைய ராஜ்யத்தில் வெகுகாலம் மழை பெய்யாமலிருந்து பஞ்சமும், சூன்யமும் ஏற்பட்டது; பிராம்மணர்களையும், அனுபவம் மிக்கவர்களையும் கூப்பிட்டு அந்த நிலைமையின் காரணத்தை வினவினுன். விபண்டகனது பிள்ளையான ரிச்ய ச்ருங்கரை அங்க தேசத்திற்கு அழைத்து வந்தால் மழை பெய்து, நாடு நலம்பெறும் என்று அவர்கள் கூறினர்.

ரிஷிகள் மேலும் ரோமபாதனுக்கு ரிச்ய ச்ருங்கரது குணங்களைப் பற்றி விரிவுபடக் கூறினுர்கள். ரிச்ய ச்ருங்கர் காட்டிலே வஸிப்பவர். நித்ய கர்மங்களிலும், வேதாத்யயனத்திலும் ஈடுபாடு உள்ளவர். ஸ்திரீகளின் உருவத்தையாவது, அவர்கள் கொடுக்கும் ஸுகத்தையாவது சிறிதும் அறியாதவர். ஆகவே மனிதனுகப் பிறந்தவனுக்குக் கவர்ச்சியளிக்கக் கூடிய அழகான பெண்கள், ருசியுள்ள பதார்த்தங்கள், வாஸனு திரவியங்கள், பாட்டு முதலிய இனிய சப்தங்கள் முதலியவைகளால் அவருக்குக் கவர்ச்சி உண்டாக்கி அவரை அங்க தேசத்திற்கு அழைத்து வரவேண்டும் என்று முடிவு கட்டினுன் ரோமபாதன்.

இந்தத் திட்டத்தின்படி தன் அரண்மனையிலிருந்து மிக அழகான தாஸிகளைக் காட்டிற்கு அனுப்பினுன். அவர்கள் காட்டிற்குச் சென்று விபண்டகருடைய ஆச்ரமத்திற்கு அருகாமையிலிருந்து கொண்டு, ரிச்ய ச்ருங்கர் எப்பொழுது வெளியில் வருவார் என்று பார்த்திருந்தார்கள். ஒருநாள் அவரும் வெளியில் வந்து தாஸிகள் இருக்குமிடம் அடைந்தார். அந்த தாஸிகள் தங்களை நன்ருக அலங்கரித்துக்கொண்டு, இனிமையாகப் பாடிக்கொண்டு அவரருகில் வந்து, நீர் யார் என்றும், ஜன நடமாட்டமில்லாத காட்டில் தனியே வசிப்பதன் காரணமென்ன வென்றும் வினவினுர்கள். அவர்கள் பெண்கள் என்ற விசேஷ புத்தியோ, தன்னிலிருந்து அவர்கள் மாறுபட்டவர்களென்ற எண்ணமோ அவருக்கு உண்டாகவில்லை. அவர் அவர்களைத் தமது ஆச்ரமத்துக்கு வரும்படி அழைத்தவுடன் பின்சென்ருர்கள். அவர்களது அழகைக் கண்டு ரிச்ய ச்ருங்கருக்கு வியப்பும், இன்பமும்தோன்றிய போதிலும், தான்வேறு அவர்கள் வேறு என்ற நினைப்போ தன்னிலிருந்து அவர்கள் மாறுபட்டவர்கள் என்ற பேதமோ சிறிதும் உண்டாகவில்லை. மானுஷீகமான ஸ்வபாவங்களிலிருந்தும் பழக்

கங்களிலிருந்தும் மாறுபட்டு சிறுவயதிலிருந்தே வளர்ந்திருந்தது தான் இந்த வித்யாசமற்ற ஸ்வபாவத்திற்குக் காரணம். தன்னைப் போல் அவர்களையும் ரிஷிகளாகப் பாவித்து பாரம்பரியமாகத் தனக்கு வந்திருந்த வழக்கப்படி அவர்களுக்கு விதிப்படி பூஜை செய்து மரியாதைகள் செய்தார்.

வெளியில் சென்றிருந்த விபண்டகர் திரும்புவதற்குள் தாங்கள் வெளியேறி விடவேண்டுமென்று நினைத்து அந்த தாஸிகள் தாங்கள் கொண்டுவந்திருந்த ருசிகரமான தின்பண்டங்களை அவருக்குக் கொடுத்து அவை இனிய பழங்களென்று கூறி சாப்பிடச் சொன்னார்கள். அவர்கள் கொடுத்த தின்பண்டங்களை அவர், தாம் அதுவரை கண்டிராத அபூர்வமான பழங்கள் என்றே நம்பி ஆச்சரியப்பட்டார் ரிச்ய ச்ருங்கர். பிறகு தங்களது விரத காலம் தவறிப் போவதாகப் பொய் சொல்லி அங்கிருந்து அந்த தாஸிகள் திரும்பினார்கள்.

ரிச்ய ச்ருங்கர் அவர்கள் கொடுத்த பண்டங்களின் ருசியினாலும் மிருதுவான தேஹஸ்பர்சத்தினாலும், இனிமையான கானத்தாலும் மனம் கலங்கினார். அவர்களது பிரிவை அவரால் ஏனோ தாங்க முடியவில்லை; அவர்களது அழகும், அதற்கு முன் அவருக்குப் பரிச்சயமில்லாத இனிய அனுபவங்களும் அவருடைய உள்ளத்தில் ஒரு அபூர்வமான ஏக்கத்தை உண்டாக்கின. அப்போது தமக்கு ஏற்பட்ட உணர்ச்சிகள் என்னவென்று அவருக்கே தெளிவாகத் தெரியவில்லை.

அவர்களை மறுபடி பார்க்கவேண்டுமென்ற எண்ணத்துடன் தாம் முன்னர் சந்தித்த இடத்துக்கு மறுநாள் சென்றார். இதை எதிர்பார்த்து அவர்களும் அங்கு இருந்தார்கள். தாங்கள் முன் தினம் கொடுத்துப்போன பழங்கள் ஏராளமாகத் தங்கள் ஆச்ரமத்திலிருப்பதாகக் கூறி, தங்கள் ஆச்ரமத்துக்கு அவரை வரும்படி அழைத்து, அவர் சம்மதித்தவுடன் அவரை அங்க தேசத்துக்கு அழைத்துச் சென்றார்கள். ரிச்யச்ருங்கர் வந்தவுடன் அங்க தேசத்தில் மழை பெய்து மக்கள் இன்புற்றார்கள். ரோமபாதனும், அவரை ஏமாற்றி அழைத்து வந்ததற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்டு, சாந்தையென்னும் தன் மகளை அவருக்கு மணம் செய்வித்தான். ரிச்ய ச்ருங்கர் ரோமபாதனுடைய அரண்மனையில் ஸுகமாக வஸித்து வந்தார்.

ரோமபாதன் என்பான் தசரதனுக்கு ஸமகாலத்து அரசன். அவனுக்கு மிகவும் நெருங்கிய நண்பனும் கூட. ரிச்ய ச்ருங்கர் ரோமபாதனுடைய பெண்ணை மணந்திருந்தார் என்று தெரிந்தவுடன் தசரதனுக்கு அளவற்ற இன்பம் உண்டாயிற்று. தமது குறைக்கு உண்டான நிவர்த்தியை அவரை அணுகித் தேடவேண்டுமென்ற முடிவுக்கு வந்தான். உடனே கிளம்பி அங்கதேசம்சென்று ரிச்ய ச்ருங்கரைத் தன் நாட்டுக்கு அழைத்து வந்தான். ரிச்யச்ருங்கரது வரவு நாட்டில் ஒரு பெரிய திருவிழாப்போல் கொண்டாடப்பட்டது. பிறகு அச்வமேதம், புத்ர காமேஷ்டி முதலிய யாகங்களை அவரை முன்கொண்டு செவ்வனே செய்து முடித்தான். அதன் பலனை அவன் இஷ்ட ஸித்தி அடைந்தான்.

★

ரிச்ய ச்ருங்கருக்கு அந்தப் பெயர் வந்த காரணமும், அவரது தனிமையின் குண விசேஷங்களும், அங்க தேசத்து தாஸிகள் அவரை அணுகிய பின்னர் அவரது மனத்தில் ஏற்பட்ட அற்புதமான மாற்றங்களும், மிக இனிமையான ஸம்பாஷணைகள் வாயிலாக, மஹா பாரதத்தில், வனபர்வத்தில், தீர்த்த யாத்திரைப் பகுதியில் விவரமாகக் கூறப்பட்டிருக்கின்றன.

ரிச்ய ச்ருங்கரின் தந்தையான விபண்டகர் மஹாஹ்ரதம் என்னுமிடத்தில் தவம் செய்துகொண்டு இருக்கும்போது ஒருபெண் மான் வாயிலாகக் கொம்புடன் கூடிய ஒரு மனிதக் குழந்தை பிறந்தது. ரிச்யம் என்றால் மான்; ச்ருங்கம் என்றால் கொம்பு; மான் கொம்பு போன்ற ஒரு கொம்பைத் தலையில் உடையவராக அவர் இருந்ததனால் அவருக்கு ரிச்ய ச்ருங்கர் என்று பெயர் வந்தது.

தன் தந்தையைத் தவிர ரிச்ய ச்ருங்கர் வேறு மனிதர்களைக் கண்டதில்லை யென்றும், அதன் காரணமாக அவரது மனம் பிரம்மசரியத்தில் லயித்திருந்தது என்றும் பாரதக்கதை வெகு விவரமாகக் கூறுகிறது. உலகத்தின் இயல்பான குணக் குறைகளுக்கு அப்பால் சுத்த ஸாத்விகமாகத் தோன்றிய ஒரு மனுஷ்யராக ரிச்ய ச்ருங்கர் இருந்ததால் தான், அவரை வரவழைத்தால் நாட்டில் ஸுபிட்சமுண்டாகும் என்று ரோமபாதன் நிச்சயித்தான்.

ரிச்யச்ருங்கருக்கும், அவரை அழைத்து வர அனுப்பப்பட்ட பிரதான தாஸிக்கும் நடந்த ஸம்வாதம் மஹா பாரதத்தில் வெகு அழகாக வர்ணிக்கப்பட்டிருக்கிறது. அவளைக் கண்டவுடன் அவளது அழகினால் விவரிக்க இயலாத ஆச்சரியமடைந்த ரிச்ய ச்ருங்கர் "தேவரீர் ஜ்யோதிப் பிழம்பாகப் பிரகாசிக்கிறீரே! உமக்கு நான் வணக்கம் செய்யவேண்டுமென்ற உணர்ச்சி எனக்கு உண்டாகிறது. தங்கள் பெயர் என்னவோ? தங்கள் ஆச்ரமம் எங்கு உளதோ? தாங்கள் தேவனைப்போல் பிரம்ம சரியத்தை சீலமாக அனுஷ்டிக்கிறீர்கள் என்று நினைக்கிறேன்" என்றெல்லாம் ஆச்சரியத்துடன் பேசுகிறார். அவள் அதற்கு அளித்த விடை ரம்மியமாகவும், ஹாஸ்யமாகவுங்கூட இருக்கிறது. "இந்த மலையிலிருந்து மூன்று யோஜனை தூரத்தில் இருக்கிறது என்னுடைய ஆச்ரமம். எங்களுடைய ஆசாரப்படி அர்க்யம், பாத்யம் முதலிய மரியாதைகளை நாங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. தங்களால் நான் வணங்கத் தகுந்தவள் அல்ல. தங்களை நான் வணங்க வேண்டும்" என்கிறாள் அந்த தாஸி. அவள் அவருக்கு விநோத மான தின்பண்டங்களைக் கொடுத்து, அவர் அவற்றைப் பழம் என்று நம்புவதும் வெகு விரிவாகக் கூறப்பட்டிருக்கிறது பாரதத்திலே.

வெளியில் சென்றிருந்த விபண்டகர் திரும்பியபோது ரிச்ய ச்ருங்கர் இருந்த நிலையையும், ஆச்ரமத்தில் வழக்கமாக செய்யப்பட வேண்டிய கடமைகள் பூர்த்தியாகாதிருப்பதையும் கண்டு அவர் ஸந்தேஹித்தார். யாராவது இங்கு வந்திருந்தார்களா என்று வினவினார்.

ரிச்ய ச்ருங்கர் வெள்ளை உள்ளத்துடன் அங்கு வந்து சென்ற தாஸியைப் பற்றி விபண்டகருக்குக்கூறிய விவரம் அவரது அழுக் கற்ற தன்மையை விளக்குகிறது.

"தேவர்களது புத்ரனைப்போன்ற சோபையை உடையவனும், தங்க நிறமானவனும், தாமரைக் கண்களையுடையவனும், தேஜஸ் உடையவனும், இனிய வாஸனைகள்கொண்ட நீண்ட ஜடாபாரங்களையுடையவனும், காலில் அற்புதமான ஒலிசெய்யும் தண்டைகளையுடையவனும், குயிலைப்போன்ற குரலையுடையவனுமாக அவன் இருந்தான். அவன், இதோ, எனக்குக் கொடுத்த இந்தப் பழங்களின் ருசி மிக அற்புதமாயிருக்கிறது. அவனை மறு

படி காணவேண்டுமென்ற ஆவலும், அவனுடன் சேர்ந்து பிரம்ம சரியம் அனுஷ்டிக்கவேண்டுமென்ற ஆசையும் எனக்கு நிரம்ப உண்டாகிறது'' என்று குழந்தைபோல் கூறுகிறார் ரிச்ய ச்ருங்கர். உண்மையைத் தமது கூர்மையான அறிவால் அறிந்த விபண்டகர், வந்து போனது பிரம்மசரியத்துக்கு விரோதமான ஒரு ராக்ஷஸ உருவம் என்றுகூறி அவரது மனசை மாற்ற முயற்சி செய்கிறார். மேலே நடந்தது என்னவென்று நான் முன்பே கூறியிருக்கிறேன்.

★

கம்பராமாயணத்தில் ரிச்ய ச்ருங்கருடைய கதையை வஸிஷ்டரே தசரதனுக்குக் கூறுவதாகச் சொல்லப்படுகிறது. கவிதைக் கடவுளான கம்பன் ரிச்ய ச்ருங்கரைப்பற்றி விவரணை கூறும் ஒரே ஒரு பாடலை இங்கு சொல்லுகிறேன்:—

"வருகலை பிறவுநீதி மனுநெறி வரம்பில் வாய்மை
தருகலை மறையுமெண்ணிற் சதுமுகற்குவமை சான்றோன்
திருகலையுடைய விந்தச்செகத்துளோர் தன்மை தேரா
ஒருகலை முகச்சிருங்க வுயர்தவன் வருதல் வேண்டும்"

"வேதங்களில் அபாரமான வித்பத்திகொண்டு, அந்த வித்பத்தியில் பிரம்மாவுக்கு சமதையானவராக இருந்தார் ரிச்ய ச்ருங்கர். இந்த உலக மக்களுடைய தன்மைக்கும், வழக்கங்களுக்கும் அப்பால் சுத்த ஸ்வரூபனாக வளர்ந்தவர். தலையில் ஒரு கொம்பை உடைய உயர்ந்த மனிதன்'' என்று கூறுகிறான் கம்பன் இந்தப் பாடலிலே.

★

இத்தகைய குணங்களையுடைய ரிச்ய ச்ருங்க முனிவரைத் தன் நாட்டுக்கு வரவழைத்து, தன் இஷ்ட ஸித்தியடைய தசரதன் முடிவு செய்ததில் அதிசயம் ஒன்றும் இல்லை. இந்த அபூர்வமான பாத்திரத்தை ஒரு முக்கியமான கட்டத்தில் ராமாயணம் நமக்கு சிருஷ்டித்துக் கொடுக்கிறது.

ரிச்யச்ருங்கருடைய இந்தவேடிக்கையான கதையிலிருந்து நீதி ஏதாவது தென்படுகிறதா என்று பார்ப்பது அவரவர்களுடைய

கற்பனையைப் பொறுத்தது. முதலில் இது ஒரு வேடிக்கையான கதை. அந்தக் காலத்து அரசர்கள் தனி மனிதர்களது குண விசேஷங்களுக்கு எவ்வளவு கௌரவம் அளித்தார்கள் என்பது இரண்டாவது. "நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யுமழை'' என்ற தமிழ்ப் பழமொழிக்கு இது ஒரு எடுத்துக்காட்டு. உங்களது இளம் உள்ளங்களுக்கு இந்தக் கதையிலிருந்து நீதி ஒன்றும் புலப்படாவிட்டாலும் பரவாயில்லை. மானுக்குப் பிறந்து, மான்கொம்பு முளைத்திருந்த வேடிக்கையான மனித உருவத்தின் கதையில்லையா இது? அந்தக் கற்பனை எவ்வளவு பசுமையானது? அதுவே போதும். நமது பழைய இலக்கியங்கள் இது மாதிரி எத்தனையோ அற்புதமான கதைகளைச் சொல்லியிருக்கின்றன.

[சென்னை ரேடியோ நிலையத்திலிருந்து ''ராமாயணத்தில் ரஸமான கட்டங்கள்'' என்ற தொடரில் ரிச்ய ச்ருங்கர் பற்றி, ஸ்ரீ எஸ். ஆர். ஸ்ரீனிவாசராகவன் செய்த பிரசங்கம். அகில இந்திய ரேடியோ அனுமதி பெற்றது.]

நஷ்டம் செய்தவனுக்கு நஷ்டஈடா?

●

ஒரு நாள் லண்டனில் ஓடிக்கொண்டிருக்கும் ஒரு பஸ் டிரைவர் பிரசித்தி பெற்ற ஆங்கில எழுத்தாளரான ருட்யார்ட் கிப்லிங் என்பவர் வளர்த்து வந்த ஒரு மரத்தின் மீது பஸ்ஸை மோதிவிட்டார். கிப்லிங்குக்குக் கோபம் தாங்கமுடியவில்லை. அவர் பஸ் முதலாளிக்கு டிரைவரைப் பற்றிக் குறைகூறி கடுமையான கடிதம் ஒன்று எழுதினார். பஸ் முதலாளி ஒரு ஹோட்டலின் சொந்தக்காரரும்கூட. அந்த ஹோட்டலில் எல்லோர் கண்களிலும் படும்படியாக அந்தக் கடிதத்தை வைத்தார் முதலாளி. உடனே ஒருவர் பத்து ஷில்லிங் கொடுத்து அந்தக் கடிதத்தை வாங்கிக்கொண்டார்.

பஸ் முதலாளியிடமிருந்து பதில் வராததால் மறுமுறை முன்னிலும் கடுமையான பாஷையில் கடிதம் ஒன்று எழுதினார் கிப்லிங். ஆனால் அதற்கும் பதில் வரவில்லை. மறு நாள் கிப்லிங் தாமே மிகுந்த கோபத்துடன் ஹோட்டலை யடைந்து மன்னிப்புக் கடிதம் எழுதாதற்காக முதலாளியைக் கடிந்து கொண்டார். ஹோட்டல் முதலாளி மன்னிப்புக் கேட்டபடியே "நான் உங்களுக்கு வேண்டுமென்றே தான் கடிதமெழுதவில்லை. ஏனென்றால் நான் உங்கள் கடிதத்திற்குப் பதில் எழுதாவிடில் நீங்கள் எனக்குக் கடிதங்களை எழுதிக்கொண்டேயிருப்பீர்கள். அந்தக் கடிதங்களையெல்லாம் நான் பிரபலஸ்தர்களின் கையெழுத்து வேட்டைக்காரர்களுக்கு விற்றால் எனக்கு பஸ்கள் மூலம் கிடைக்கும் வருமானத்தைவிட அதிக வருவாய் கிடைக்குமே" என்றார்.

அசோகா சுகந்த பாக்குத்தூள்

விருக்ஷத்திற்கும் 'ஆபரேஷன்'!

மேல் நாடுகளில் தோட்டக் கலை மனிதர் உழைப்பினால் எவ்வளவு முன்னேற்ற மடைந்துள்ள தென்பது நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விஷயம். மேல் நாட்டில் காய் கறிவகைகள் மிகவும் மலிவு; பழ தினுசுகள் எங்கும் எப்போதுங் கிடைக்கும். பழங்களைத் தோட்டங்களிலிருந்து விற்பனை ஸ்தலங்களுக்கெடுத்துச் செல்வதற்குள்ள வசதிகள், விற்பனை ஸ்தலங்களுக்குச் சென்றுகொண்டிருக்கும்பொழுதும், அங்கு சென்ற பின்பும் விற்பனைக்காக கடைகளில் வைத்திருக்கும் போதும் கெடாமல் வைத்திருப்பதற்குள்ள ஏற்பாடுகள் விஞ்ஞானிகளின் உதவியினால் மிகச் சிறப்பாக அமைந்துள்ளது.

பழத் தோட்டங்களில் மரங்களுக்குள்ள பாதுகாப்பு ஒரு அரிய விஷயமாக மேல் நாடுகளில் கருதப்படுகிறது. இந்தப் பாதுகாப்புச் சம்பந்தமாக தகுந்த போதனையளிக்கவும் பழ மரங்களை வளர்ப்போர்களுக்கு உதவியளிப்பதற்காகவும் ஆயிரம் நிபுணர்கள் கொண்ட ஒரு பிரத்தியேக ஸ்தாபனமே அமெரிக்காவிலிருக்கிறது. தென்னை, மா, பலா முதலிய மரங்களில் வேறு இனத்தைச் சேர்ந்த சில செடிகள் வளருவதை அநேகர் அறிந்ததே. இச் செடிகள், இவை ஒண்டிய மரங்களின் சாரத்தை உறிஞ்சி செழிக்கின்றன. இவ்வாறு பாதிக்கப்பட்ட மரங்கள் நாளடைவில் பட்டுப் போகின்றன. இவ்வாறு மரங்கள் பட்டுப் போகாமலிருக்க மேற்கூறிய ஸ்தாபனங்கள் உதவி செய்கின் கின்றன.

காற்றடிக்கும்போது மரங்களின் கிளைகள் ஒடிந்து போகின்றன. ஒடிந்த கிளைகளை வெட்டியெறிவதே நம் நாட்டில் பொதுவாக வழக்கம். ஒடிந்த கிளைகளை மரத்தோடு ஒட்டி வைத்து மறுபடியும் அந்தக் கிளைகளில் பூவுங் காயும் உண்டாவதற்கு மேல்நாடுகளில்

ஏற்பாடு செய்கிருர்கள். மனித தேகத்தில் அங்க ஹீனம் ஏற்பட்டால் எப்படி, 'பிளாஸ்டர்'கட்டுப் போட்டு அதை நிதானமாய் உபயோகத்திற் கேற்றவாறு ஒழுங்குபடுத்து கிருேமோ, அதே போன்று மேல்நாடுகளில், மரங்களுக்குச் சிகிச்சை செய்கிருர்கள். புஷ்டியுள்ள உணவையருந்தியும் சில மனிதர்கள் உடல் வலிமைபெறுவதில்லை. இது போலவே மரங்களும் 'ஆரோக்கியக் குறைவால் பாதிக்கப்படுவதுண்டு. இவ்வாறு பாதிக்கப்பட்ட மரங்களின் வேரில் துவாரங்கள் செய்து அவை மூலம் புஷ்டியுள்ள ரஸாயனப் பொருள்களை மரங்களுக்குள் செலுத்துவதுண்டு. சில சமயம் நேரடியாக அடிமரத்திலேயே ரஸாயனப் பொருள்களைச் செலுத்துவதுமுண்டு.

இம்மாதிரி பலவிதமான முயற்சிகள் எடுத்து மர இனத்தை மிகச் சிறப்பாகப் பாதுகாத்து இயற்கை அன்னையின் வரப்பிரசாதமான இப்பழ வகைகளைப் பூரணமாக மேல்நாட்டார்கள் அனுபவிப்பது பழப் பஞ்சத்தால் வாடிக்கொண்டிருக்கும் நமக்கு ஒரு நல்ல பாடமாயிருக்க வேண்டுமல்லவா?

மாலா

கலை, இலக்கிய மாதப் பத்திரிகை.

விலை 6 அணு

பிரதிமாதம் முதல் வாரம் வெளிவருகிறது

சிறந்த கதைகளும், கட்டுரைகளும்,
சினிமா செய்திகளும், படங்களும் வெளிவருகின்றன

விவரங்களுக்கு :—

மாலா

சதர்ன் அவின்யூ

ஆள்வார்பேட்டை, மதருஸ்-18

இருக்குமிடத்தில் தேடு

சமீபத்தில் ஒரு கள்ளமார்க்கெட் வியாபாரி டில்லியிலிருந்து சென்னைக்குச் செல்வதற்காக ரயில் ஏறினார். இவர் ஏராளமான பணத்தைக் கையில் வைத்துக் கொண்டு இந்தப் பிரயாணத்திற்குப் புறப்பட்டதையறிந்த ஒரு திருடன் தானும் ஒரு வியாபாரிபோல் நடித்துக் கொண்டு ஆடம்பரமாக உடை தரித்து அவர் ஏறியிருந்த ரயில் வண்டியிலே ஏறிவிட்டான். பிரமாதமான வியாபாரத்தில் ஈடுபட்டவன்போல் கள்ள மார்க்கெட் வியாபாரியிடம் சம்பாஷித்துக் கொண்டிருந்தான். தன் வியாபாரத்தில் லக்ஷக்கணக்கான ரூபாய்களை முடக்கியிருப்பதாகவும் தனக்கு ஏராளமாக வருமானம் கிடைத்துக் கொண்டிருந்தாலும் வியாபாரக்கவலைகளும் அளவில்லாமலிருக்கின்றன வென்றும் கூறிக் கொண்டிருந்தான். அன்றிரவு கள்ள மார்க்கெட் வியாபாரி நித்திரையிலாழ்ந்ததும் திருடன் இவர் கையில் வைத்திருந்த பணத்தை திருட முயன்றான். அவர் கொண்டுவந்திருந்த பெட்டிகள் யாவற்றையும் சோதனை செய்தான். அவற்றிலிருந்த ஒவ்வொரு பொருளையும் உதறி உதறிப் பார்த்தான். பிறகு அவர் படுக்கையையும் சோதனையிட்டான். இதுவும் போதாதென்று அவர் அணிந்திருந்த ஆடையையும் அவர் நித்திரையை கலைக்காமல் மிக சாமர்த்தியமாகச் சோதித்துப் பார்த்தான்.

எல்லாம் வீணாயின! கள்ள மார்க்கெட் வியாபாரி வைத்திருந்த பணம் திருடன் கண்ணுக்குப் புலப்படவேயில்லை. ஆனால் அடுத்த தினம் காலையில் கள்ளமார்க்கெட் வியாபாரி தான் கொண்டுவந்திருந்த நோட்டுக் கட்டுகளைப் பிரித்து எண்ணிக் கொண்டிருப்பதைக் கவனித்து திகைத்தான்.

அன்றிரவும் சோதனை செய்தான் திருடன். அப்போதும் ஒன்றுங் கிடைக்கவில்லை. காலையில் கள்ள மார்க்கெட் வியாபாரி திரும்பவும் நோட்டுகளை எண்ணிக் கொண்டிருப்பதைக் கண்டான். மூன்ருவது நாளிரவிலும் திருடன் தன் முயற்சியிலீடுபட்டான். அப்பொழுதும் ஒரு பயனுமில்லை! இவ்வளவு திறமை வாய்ந்த திருடனுக்கு இவ்வளவு வெட்கக்கேடான தோல்வி இதுவரை ஏற்பட்டதேயில்லை!

வண்டி சென்னையை யடைந்தவுடன் இருவரும் கீழே யிறங்கினுர்கள். திருடனே அடக்கமுடியாத ஆத்திர மடைந்திருந்தான். அதனுல் கள்ளமார்க்கெட் வியாபாரியிடம், பணத்தை அவர் எங்கு வைத்துக் கொண்டிருந்தாரென்று பகிரங்கமாகவே கேட்டு விட்டான். இதற்குக் கள்ள மார்க்கெட் வியாபாரி "உன் படுக்கையினடியில் தான் என் பணத்தை வைத்து மூன்றிரவுகளாகப் பாதுகாத்தேன்" என்ருர்.

வாழ்க்கையில் உண்மையான ஆனந்தத்தையும் இவ்வாறு தான் தேடிப் பெறவேண்டும். அது நம் கைக்குள்ளேயே அடங்கியிருக்கிறது. தேடவேண்டிய இடத்தில் தேடினுல் நொடியில் கிடைத்துவிடும். சம்சார சாகரத்திலாழ்ந்த நமது அறிவீனத்தாலேயே இந்த ஆனந்தம் எவ்வளவு தேடினுலும் கிட்டாமலிருக்கிறது.

—ஸ்வாமி சின்மயானந்தா

ASOKA SCENTED BETELNUT POWDER

எழுத்துப் பிரவாகம்

●

'மாண்டி கிரிஸ்டோ' என்ற புகழ்பெற்ற நவீனத்தை இயற்றிய 'டூமாஸ்' என்ற பிரெஞ்சு எழுத்தாளர் ஆயிரத்து இருநூறு புஸ்தகங்கள் எழுதியுள்ளாராம். பத்தொன்பதாம் நூற்றுண்டில் மற்றொரு எழுத்தாளரும் ஆயிரத்து எண்ணூறு புத்தகங்கள் எழுதியுள்ளாராம். இருபதாம் நூற்றுண்டில் ஆயிரக்கணக்கான புத்தகங்கள் எழுதுபவரில்லாவிடினும் நூற்றுக்கணக்கான புத்தகங்கள் எழுதுபவர்கள் எத்தனையோ பேர்களிருக்கிறுர்கள். இரண்டல்லது மூன்று ஸ்திரீ எழுத்தாளர்கள் நூற்றைம்பது புத்தகங்கள் வரை எழுதியுள்ளார்கள்.

சமீபத்தில் காலஞ் சென்ற 'ஒப்பன்ஹீம்' என்ற ஆங்கில எழுத்தாளர் இருநூறு நாவல்கள் எழுதியுள்ளாராம். குதிரைப் பந்தயங்களைப் பற்றியும் இவற்றில் ஈடுபடுபவர்களைப் பற்றியும் கதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளவரான 'நாட்கோல்ட்' என்பவர் நூறு புத்தகங்களுக்கு மேல் எழுதியுள்ளாராம். பெரும்பாலும் சிறுவர் கதைகளே எழுதியுள்ள 'மான்கிரீப்' என்பவர் இருநூறு புத்தகங்கள் வரை எழுதியுள்ளார். துப்பறியும் கதை எழுதுவதில் வல்லவரான பிரபல 'எட்கர்வாலஸ்' என்பவர் 150 புத்தகங்கள் வரை எழுதியுள்ளார். இவர் ஒரே வருஷத்தில் இருப்பத்தேழு நவீனங்களும் ஆறு நாடகங்களும் எழுதி முடித்துள்ளார்.

காலஞ் சென்ற பர்னுர்ட்ஷாவைப் பற்றி தெரியாதவர்கள் இந்தியாவில் இல்லை. இவர் எழுதியுள்ள நாடகங்கள், நவீனங்கள், கட்டுரைகள், கதைகள், இரு நூறு பக்கங்கள் வரை கொண்ட புத்தக முன்னுரைகள், அரசியல், சமூக விஷயங்களைப் பற்றி அபிப்பிராயங்கள் முதலியவற்றைப் பற்றிய மொத்த எண்ணிக்கை இன்னும் சரியாகக் கணக்கிடப்படவில்லை. இவற்றைத் தவிர இவருக்குக்

கடிதங்கள் எழுதியுள்ள அநேக ஆயிரம் பேர்களுக்கு, இவர் பதிலாக எழுதின நகைச்சுவை ததும்பும் பதில் களைச் சேகரித்தால் அவை மட்டிலுமே அநேக புத்தகங் களாகிவிடும்.

1898-லிருந்து 1930-ஆம் ஆண்டு வரை எழுத்து வேலையிலீடுபட்ட ஒருவர் எண்ணூறு சிறுவர்களுக்கான நவீனங்களை எழுதி எராளமாகச் சம்பாதித்தார். ஆனால் இவருக்குப் புகழே கிடையாது.

இம்மாதிரி நூற்றுக்கணக்கான புத்தகங்கள் எழுதுப வர் ஒரு ரகம் இருக்க மற்றொரு ரகத்தைச் சேர்ந்தவர்க ளாகும், மூன்று அல்லது நான்கு உயர்தர நூல்களைச் சிருஷ்டித்ததனால் அழியாப் புகழைத் தேடிக் கொண்ட வர்கள்.

FASHION HOME

Pro: **M. U. VARGHESE & BROS**

Govt. Diplomaed Dress Makers

4-A, Whannels Road, Egmore Madras.

MAKE

Smash-hit personal appearances!
Never before such enduring beauty!
Never before such princely comfort!
At a charge so unbelievably low!

Dealers in:

B & C Mills Products & artists in making dresses to measurement & taste

ஜீவகாருண்யத் தூதரான புத்தரின்
வரலாற்றிலிருந்து ஒரு உண்மை சம்பவம்

கல்நெஞ்சனை மாற்றிய கருணைக்கடல்

புத்தபிரான் ஒரு சமயம் தன் சிஷ்யர்களுடன் ஒரு கிராமத்திலிருந்து வேறொரு கிராமத்திற்குப் புறப்படும் பொழுது அவர் தங்கியிருந்த கிராமத்து மக்கள் "காட்டு வழிப்பக்கம் போகவேண்டாம். அங்குலமாலன் என்ற பொல்லாத கள்வன் உங்களுக்குத் தீங்கு விளைவிப்பான். வழியில் போவோர், வருவோரை யெல்லாம் சிறிதும் இரக்கமன்றி சூறையாடிக் கொன்றுபோட்டு விடுகிறான். அவனிடம் அகப்பட்டுக்கொண்டவர்கள் உயிர் மீண்டதேயில்லை" எனக் கூறி மன்றாடிக் கேட்டுக் கொண்டார்கள்.

புத்தரோ சாவதானமாய் இவர்கள் கூறியதைக் கேட்டுவிட்டு, "நீங்கள் எல்லோரும் உலக வாழ்க்கையில் ஈடுபட்டவர்கள்; உங்களுக்குப் பற்று இருப்பது சகஜமே, நானோ முற்றுந் துறந்த துறவி, என் கையில் பணமோ, மற்ற ஆபரணங்களோ ஒன்றுங் கிடையாது. என்னை அவன் என்ன செய்யமுடியும்?" என்றார்.

"அதற்கில்லை, கையில் காசு பணமில்லாவிட்டாலும் அவனுக்கு அக்கறையில்லை. எவர் உயிரையும் வாங்கி விடும் கல்நெஞ்சன் அவன்" என்றனர் ஊரார்.

புத்தர், "என்றைக்கிருந்தாலும் முடிவு நிச்சயமல்லவா? அவன் கையால் சாகவேண்டுமென்றிருப்பின் அது ஆண்டவன் செயலன்றோ!" என்று கூறிவிட்டு காட்டை நோக்கி சிஷ்யர்களுடன் வேகமாய்ப் புறப்பட்டு விட்டார்.

நடுக்காட்டில் இவர் சென்றுகொண்டிருக்கும்போது, "ஏய், நில் அங்கே" என்று இடிபோன்ற ஒரு குரல் கேட்டது. தான் கொன்ற மனிதர்களின் விரல்களை யெல்லாங் கோத்து மாலையாக அணிந்து பருத்து உயர்ந்த மனிதன் ஒருவன் எதிரே நின்ருன். புத்த பகவான் அமைதியாக "யாரப்பா நீ" என்று கேட்டார்.

"நீ யார்? துறவியா? உன்னைப் பார்த்தால் யாரோ இளவரசன் போலிருக்கிறது. நான் நம்பமுடியாது, வை, கீழே, உன்னிடமுள்ள பொருள்கள் எல்லாவற்றையும்" என்று அதட்டி மிரட்டினுன அங்குலமாலன் என்ற அந்தக் கொள்ளைக்காரன்.

புத்தர் "கொஞ்சம் பொறுத்திரு அப்பா, வாஸ்தவமாக என்னிடம் விலையுயர்ந்த பொருள் ஒன்று இருக்கிறது, அதை உனக்குத் தருகிறேன், அவசரப்படாதே" என்ருர்.

"வழிக்கு வந்தாயா, உம்" என்ருன் அங்குலமாலன்.

"கேள், துன்பத்திற்குக் காரணம் பொருளாசை, அதை விட்டொழி. எதுவும் நிலையல்லாததை அறிந்து கொள்" என்று புத்தர் முடிப்பதற்குள் "போதும், போதும், உன் உபந்நியாசம். உன்னை யமபுரிக்கு அனுப்பி உன் வாயை அடக்குகிறேன் பார்" என்று கர்ஜித்தான் கள்வன்.

புத்தர் அவனை நெருங்கி "தோளைத்தொட்டு, தம்பி, இன்று நீ வாலிபனுக இருக்கிருய். அதனுல் நீ இப்படி பேச முடிகிறது. வயோதிகம் வந்ததும் உன் நிலை எவ்வாறிருக்கும் என்பதை யோசித்துப் பார். உன்னைவிட பலவான் உன்னைத் தீர்த்துவிடுவானே. இது தெரியவில்லையே உனக்கு" என்ருர்.

புத்தரின் ஸ்பரிசத்தாலோ அல்லது அவருடைய முகஜோதியின் சக்தியாலோ அந்தக் கள்வன் மனத்தில் திடீரென்று மாற்றம் உண்டாயிற்று. அவன் புத்தர் கூறியதை யெல்லாம் கேட்கலானுன்.

"தம்பி, இன்னும் சொல்கிறேன் கேள். உலகத்துப் பொருள்களின் மீதுள்ள பற்றைவிட்டு நல்வழியைக் கடைப்பிடி. அஹிம்சை, சத்தியம், நியாயம் என்பவை தான் உன்னைக் கடைத்தேற்றும் உண்மைப் பொருள்கள்" என்று கூறி முடித்தார், புத்தபிரான்.

நீர் ஆறுகப் பெருகத் தொடங்கியது அங்குலமாலன் கண்களிலிருந்து. விக்கி விக்கி அழுதுகொண்டே புத்தரின் காலடியில் சரணடைந்து "எனக்கும் கதிமோக்ஷமுண்டா?" என்று கலங்கிக் கெஞ்சினுன்.

அன்போடு அவனை அணைத்துக்கொண்டு அடுத்த ஊர் வந்தடைந்தார் 'கருணைக்கடல்.'

அவ்வூரிலிருந்த மக்கள் அவனை அடையாளங் கண்டு கொண்டு "ஐயோ அங்குலமாலன் வந்து விட்டானே" என்று அலறிப் புடைத்துக்கொண்டு ஓடத் தலைப்பட்டனர்.

புத்தரோ அவர்களை நிறுத்தி "ஓடாதீர்கள், பழைய அங்குலமாலன் அல்ல இவன்" என்று கூறி நடந்ததை விவரித்தார்.

ஆனல் ஊராரோ "இந்தப் பயல் இன்று சாதுபோல் வேஷம் போடுகிறுன். இவனைப் பழிவாங்கியே தீரவேண்டும்" என்று தீர்மானஞ் செய்து கொண்டனர். அங்குல மாலன் பிக்ஷைக்குச் சென்ற ஒரு தினம் எல்லோரும் சேர்ந்துகொண்டு அவனைக் கல்லாலும் தடியாலும் தாக்கி நையப் புடைத்து விட்டனர்.

படுகாயமடைந்த அங்குலமாலன் புத்தபிரானிடம் ஓடோடியும் வந்து முறையிட்டுக்கொண்டான்.

அதற்குப் புத்தர் "அப்பா, இப்போது தெரிகிறதா உனக்கு. பிறர் உன் கையில்பட்ட அடி, குத்து, உதை எப்படி இருந்திருக்குமென்று, பொறுத்துக்கொள்" என்று கூறி தன் குடிலிலிருந்து வெளிவந்தார்.

இன்னும் ஆத்திரமடங்காத ஊர் மக்கள் புத்தரிடம் "ஏன் அந்தக் கல்நெஞ்சக் கள்ளனுக்கு இடங்கொடுக்

கிறீர்கள்; வெளியே துரத்துங்கள் அவனை; கொன்று தீர்த்துவிடுகிறோம்'' என்று ஆர்ப்பாட்டஞ் செய்தனர்.

புத்தர் ''அதிருக்கட்டும் முதலில் என்னைக் கொன்று போட்டுவிட்டுப் பிறகு அவனைக் கொல்லுங்கள்'' என்றார்.

மக்கள் ''ஐயோ, ஜீவகாருண்யத்தைப் போதித்த தர்மாத்மாவான உங்களையா நாங்கள் தொடுவது'' என்று சற்று விலகி நின்றனர்.

புத்தர் ''ஜீவகாருண்யம் என்று பிரமாதப்படுத்துகிறீர்களே, அதை உணர்ந்தா என் கண்ணெதிரே சிறிதும் ஈவிரக்கமின்றி இவனை அடித்துக் கொல்ல வருகிறீர்கள். இவன் இப்போது திருந்திவிட்டான். நீங்களே இவனுடைய பழைய வழிகளைக் கையாளுகிறீர்கள். நன்று! நன்று! உங்களது ஜீவகாருண்யம்'' என்று நொந்துகொண்டார்.

ஊரார் வெட்கி, ''நாங்கள் தவறிழைத்துவிட்டோம். ஆத்திரத்தில் நாங்கள் செய்த காரியத்தை பொறுத்தருளி எங்களை மன்னியுங்கள்'' என்று கேட்டுக்கொண்டனர்.

அன்புடன் அங்குலமாலனுக்குத் தானே மருந்து தடவி அவன் புண்களை ஆற்றினார் புத்தர்.

கருணைக் கடலுக்குத் தன் நன்றியை எவ்வாறு செலுத்துவதெனத் தெரியாமல் கண்ணீர் உகுத்தான் கள்வனாயிருந்த அங்குலமாலன்.

''வினைப்பயனை அனுபவித்து விட்டாய். இனி நீ வேதனைப்பட வேண்டாம்; நற்கதி அடைவாய்'' என்று அவனைத் தேற்றினார் புத்தர்.

'ஸ்வாதி'

கால்நடைகள் செல்வமாக

கோமாதாவை வணங்கும் பண்டிகைகள் இந்தியாவி லெங்கும் கொண்டாடப்படுவதுண்டு.

பசு சுபிட்சமாயிருப்பது மனிதனின் சுபிட்சத்திற்குச் சின்னம். இதனாலேயேதான் ஹிந்துக்கள் கோமாதாவை வணங்குவதை மதத்தை யொட்டிய ஒரு கடமையாகக்கூட விதித்திருக்கிறார்கள். முன்காலத்தில் பிரஜைகள் பசுவைப் போற்றுவதைப் பற்றி அரசர்கள்கூட அதிக அக்கறை செலுத்தி வந்தார்கள்.

மாட்டுப் பொங்கல் போன்ற பசுவை வணங்கும் தினங்கள் புராண காலந்தொட்டே கொண்டாடப்பட்டு வருகின்றது. தீபாவளிப்பண்டிகை தினத்தன்று இந்தியாவில் சில வகுப்பார்கள் வியாபாரக் கணக்கைப் புதுப்பிக்கிறார்கள். அதாவது மத சம்பந்தமான ஒரு கொண்டாட்டத்தை வியாபார விஷயத்திற்கும் பயன்படுத்துகிறார்கள். இது போன்ற ஒரு தன்மை கோமாதா கொண்டாட்டத்திற்குமிருக்கிறது. விவசாயிகள் தங்கள் கால் நடைச் செல்வத்தை எவ்வாறு சென்ற வருஷத்தில் போற்றியிருக்கிறார்கள், அவற்றிலிருந்து எந்த அளவுக்குப் பயன் பெற்றிருக்கிறார்கள், அவை விவசாயத்திற்கு எவ்வளவு உபயோகமா யிருந்திருக்கின்றன என்பதை யெல்லாம் பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டிய ஒரு சந்தர்ப்பமாகும் கோமாதாவை வணங்கும் கொண்டாட்டம்.

மதப் பண்பாடுகளை யொட்டிய அநேக பழக்கங்கள் காலப்போக்கில் எவ்வாறு அர்த்தமற்றவையாய் மாறி விட்டனவோ அவ்வாறே மாட்டுப் பொங்கல் தினக் கொண்டாட்டங்களிலும் நமக்கு மேற்கூறிய உயரிய கருத்து தோன்றாமற் போய்விட்டது.



இப்போது 'மாட்டுப் பொங்கல்' என்றால் எலும்பும் தோலுமாயுள்ள ஒரு மாட்டுக்குப் பொட்டிட்டு மாலையிட்டு மற்ற தினங்களில் வாடிக்கையாய் அது காணாத உணவை அன்று மட்டும் அதற்குக் காட்டுவதோடு நின்று விடுகிறது. இதன் பலன் என்னவென்றால் 'கோமாதா, கோமாதா' என்று புலம்பிக் கொண்டிருக்கும் பாபிகளின் கையில் அகப்பட்டுக்கொண்ட இந்தக் காமதேனு படிப்படியாய் யமனை அணுகும் காட்சி தான் இந்தியாவில் எங்கும் காணப்படுகின்றன. பாரத தேசம் சுதந்திரமடைந்த பின்னர் தான் இந்த நிலைமை மாறுவதற்கு முயற்சிகள் நடந்து வருகின்றன.

உலகத்திலுள்ள கால்நடைகளில் கால் பங்கு இந்தியாவிலுள்ளது. பத்து மாடுகளில் ஒன்று பயனில்லாதது. 'கால்நடைச் செல்வம்' என்ற பெயர் பெற்ற பிராணிகளில் பல மேற்கூறியவாறு பட்டினியால் வாடிக் கொண்டும், பால் தருவதற்கோ, உழுவதற்கோ, பாரத்தைச் சுமப்பதற்கோ தகுதியற்றிருந்தால் அவற்றைச் செல்வமென்று எவ்வாறு அழைக்கலாம்? இந்த நிலையில் இப்பிராணிகளின் சொந்தக்காரர்களுக்கு இவை ஒரு தாங்க முடியாத சுமையாய்த்தானிருக்கின்றன. இந்த மாடுகளெல்லாம் பாதை ஓரங்களில் திரிந்து கொண்டிருப்பதற்கும் பயிர் பச்சைகளையழித்து அக்கிரமம் புரிந்து சமூகத்திற்கே ஒரு சாபக்கேடாயிருப்பதற்கும் காரணம் மேற்கூறிய நிலைமைதானே.

கால் நடைகளின் தரத்தை உயர்த்துவதே இப்போது அதிகாரிகளின் முக்கிய நோக்கம். கோமாதாவை வணங்கும் தினத்தில் மாடுகளுக்குப் போதியமட்டில் உணவையளிப்பது, கன்றுக் குட்டிகளைக் ஹிம்சிக்காமல் அவற்றின் தாய் பாலில் போதிய பங்கை அவற்றிற்களிப்பது கால்

நடைகளை அக்கறையோடு பாதுகாக்க வேண்டுமென்ற லக்ஷியம் நிறைவேற முயற்சிப்பதை பாரத மக்கள் சங்கல்பம் செய்துகொள்வார்களாக. இப்படிச் செய்தால் தான் இப்பொழுது அர்த்தமற்றிருக்கும் கால் நடைச் செல்வம் என்ற சொல்லுக்கு உண்மையான பொருள் ஏற்படும்.

[பாரத ஜனாதிபதியின் கோபாஷ்டமி தினத்தை யொட்டி ஒரு பிரசுரத்தை தழுவியது]

★ போதையளித்த உதை ! ★

ஆஸ்திரேலியாவில் ஒரு நகரத்திலுள்ள ஒரு கழுதை சதா போதையிலேயே ஆழ்ந்திருக்கிறதாம். இந்தக் கழுதை மனிதரைப் போலவே சாராயக் கடைக்குத் தானாகவே சென்று சாராயங் குடிக்கிறதாம். சாராயம் அருந்துபவர்கள் கழுதையை ஒரு விருந்தினராக அழைத்துப் போவதாகக் கருதவேண்டாம்! ஆடு மாடுகள் வேலிகளை அழித்துக் கொண்டு பயிர்பச்சைகளை மேய்வதுபோல் இந்த ஆஸ்தி ரேலியக் கழுதையும் சாராயக் கடைகள் திறக்கும் நேரத் தில் கடைகளுக்குள் புகுந்து விடுகிறதாம்.

ஒரு தினம் மாலை இம்மாதிரி ஒரு சாராயக் கடைக்குள் புகுந்து வாடிக்கையாய் குடிக்க வந்திருந்த ஒரு ஸ்திரீக்கு முன்பு வைக்கப்பட்டிருந்த சாராயத்தைக் குடித்து விட்டது. இம்மாதிரி சாராயமருந்தும் ஒரு மிருகத்தை அது வரையிலும் கண்டிராத இந்த ஸ்திரீ ஏதோ ஒரு பிசாசைக் கண்டதைப் போல் பீதியடைந்து அலறினாள். குடித்து விட்டு கழுதை சாராயக் கடையின் அடுப்பங்கரைக் குள் புகுந்து அங்கிருந்த பீங்கான் தட்டுமுட்டு சாமான் கள் யாவையும் உடைத்து அட்டஹாசம் புரிந்தது. இதைக் கண்டதும் தான் சாராயக் கடைக்காரருக்கு வாடிக்கைகாரி யான ஸ்திரீயின் அலறலின் காரணம் தெரிந்தது.

அன்றைய தினம் 'போதைப் பிரியனை' இக்கழுதை தனக்குக் கிடைத்த உதை தாங்கமுடியாமல் அந்த நகரத்தை விட்டே ஓடிவிட்டதாம்.

இருபதாம் நூற்றாண்டில் நிகழும் அதிசயங்களுக்கு எல்லையே இல்லையா !

சொக்கலோ சொக்கல்!! மாவலியோ மாவலி!!

கார்த்திகை தீபம்

பூமாதேவி தேர். காலசக்கிரங்களான சூரிய சந்திரர்கள் தேரின் சக்கரங்கள். உண்மையறிவை உணர்த்தும் வேதங்கள் குதிரைகள். அந்த உண்மையறிவைக் காப்பாற்றிவைத்து முனி புங்கவர்களுக்கெல்லாம் பொருளும் ஓதி வைக்கும் பிரமனே ஸாரதி. பொன் மலையே கையில் ஏந்தும் வில், உலகளந்து உலகை காக்கும் நாராயணமே அம்பு. இவ்வளவு பலத்தையும் வைத்துக் கொண்டும் ஒரு பலத்தையும் உபயோகப்படுத்தாமல் புன்னகையாலேயே ஆகாயக் கோட்டைகளாக உலவிக்கொண்டு உலகத்தை அழித்துக்கொண்டிருந்த அரக்கர்களை எரித்தார் பரமசிவன். அதனால் அவருக்கு திரிபுர ஸம்ஹார மூர்த்தி என்ற பெயரும் ஏற்பட்டது. பலமுள்ளவருடைய ஆனந்த நிலையே எவ்விதக் கொடுந் தீமையையும் போக்கும். பூர்ணமான பலத்தை சம்பாதித்த பிறகே அஹிம்ஸா தர்மத்தைக் கையாளவேண்டும். அதுவே உலகத்திற்கு நன்மை பயக்கும். அந்த சாந்த ஆனந்தமே தீயவர்கள் தாமே எரிந்து போகும்படிச் செய்யும்.

திரிபுர தகனம் நடந்த நாள் கார்த்திகை பௌர்ணமி. இவ்வெண்ணத்துடன் கார்த்திகை என்ற தீபோற்சவத்தை செய்கின்றவர்கள் எண்சாண் உடம்பாகிய ஸ்தூல தேகத்திலுள்ள பற்றையும் இந்திரியங்களாம் சூக்ஷ்ம தேகத்திலுள்ள பற்றையும் மயக்கமாம் அஞ்ஞானத்தையும் உண்மை ஆனந்தத்தால் எரித்து எஞ்ஞான்றும் சிவானந்த ஜோதியாய் விளங்க அடிகோலியவர்களாவார்கள். இச்சிவானந்த ஜோதியை நினைப்பூட்டுவதே அண்ணாமலை. அடிமுடி காணாத ஆண்டவனே அண்ணாமலை. திரிபுரதகன காலத்தில் ஸாரதியாகவும் அம்பாகவுமிருந்த இருவர் இவனது அடியையும்

முடியையும் தேடிச் சலித்து ஆதியந்தமில்லாத ஜோதி என்பதை விளக்கினர்கள்.

முனிவர்களும் சித்தர்களும், தபஸ்விகளும் நிறைந்திருந்த காலத்தில் அவர்களை மேலும் கைதூக்கி விடுவதற்கு "உலகெலா முணர்ந்து ஓதற்கரியவனும்" பரமசிவன் வெளிக் கண்ணுலேயே பார்த்துய்யும்படி பிரத்யக்ஷமாகி தத்துவங்களை விளக்கும் அநேக திருவிளையாடல்களைப் புரிந்தார். அக்காலத்திலிருந்த மஹான்கள் பிற்காலத்தவரிடம் கருணைகொண்டு சிவபெருமானிடம் வேண்டி பல வரங்களைப் பெற்றார்கள்.

அற்ப சக்தியுள்ள பிற்காலத்தவர் சிவபெருமான் திருவிளையாடல் புரிந்த இந்த புண்ய தினத்தில் அறிந்தோ அறியாமலோ இந்த உற்சவத்தைக் கொண்டாடினல் அவர்களது பாபத்தைப் போக்கி அவர்களை உண்மை மார்க்கத்தில் செலுத்தியருள வேண்டும் என சித்த புருஷர்கள் சிவனருளைக்கொண்டு புராண மாகிய பெரும் விளக்கை ஏற்றி வைத்திருக்கிறார்கள்.

மகாபலிச் சக்கரவர்த்தி முன் ஜன்மத்தில் எலியாக இருந்தார். சிவாலயத்தில் கார்த்திகை பௌர்ணமி யன்று கொஞ்சமாக எரிந்துகொண்டிருந்த தீபத்திரியை சற்று இழுத்ததினுல் தீபம் அதிக ஜோதியாக ஜ்வலித்தது எலியோ பயந்தோடியது. திரிபுரதகன உற்சவத்தினன்று தற்செயலாய் ஜோதியை பிரகாசப் படுத்தியவர்களுக்கு ஈசுவர வரத்தினுல் ஏற்பட்ட புண்யத்தினுல் அந்த எலி மறு ஜன்மத்தில் மகாபலிச் சக்கரவர்த்தியாகப் பிறந்தது. அப்பூர்வ ஜன்ம நினைவையுமடைந்தது. மகாபலி தன் ஆட்சி முடிய கார்த்திகை தீபோற்சவத்தை சிரத்தையுடன் நடத்தி வந்தார். தான் பரமபதத்தை அடையும்போது பகவானைக் குறித்துப் பிரார்த்தித்தார். "உலகத்திலுள்ள மக்கள் எல்லோரும் இக்கார்த்திகை தீபோற்சவத்தைக் கொண்டாடி நன்மை யடையவேண்டும்."

அவருடைய பிரார்த்தனையும் கூடச் சேர்ந்து கார்த்திகைத் திருநாளைக் கொண்டாடும் மக்களுக்கு இருமடங்கு நன்மை பயக்குவதாயிற்று. மகாபலியிடம் காட்டும் நன்றியே சிறுவர்கள் கூவும் "மாவலியோ மாவலி."

கார்த்திகை மாதம் முப்பது நாளும் மாலையில் விளக்கு வரிசைகளை ஏற்ற வேண்டும். முடியாவிட்டால் துவாதசி, சதுர்தசி, பௌர்ணமி மூன்று நாட்களிலாவது தீப வரிசைகளை ஏற்ற வேண்டும். பௌர்ணமி யன்று ஸ்தம்ப தீபத்தையும் தூண் நட்டு ஏற்றவேண்டும். மரத்தை நட்டு வைக்கோலைச் சுற்றி நெய்விட்டு மகாபலிச் சக்கரவர்த்தியை நினைத்து தீபத்தை ஏற்றி அந்த ஸ்தம்ப தீபம் ஜ்வலிக்கும்படி குங்குலியத்தை வாரி இறைக்கவேண்டும்; ஸ்தம்ப தீபம் தான் சொக்கப்பனை என்று சொல்லப்படுகிறது.

தூய்மையுடைய நெற்பொரியும் தன்னலமற்ற வள்ளல் தன்மையையுடைய தெங்கும் அன்பிற்கு அறிகுறியாம் தித்திப்புத் தன்மையையுடைய வெல்லமும் கலந்து அன்று நிவேதனம் செய்யவேண்டும் என்று புராணம் கூறுகின்றது.

வெண்மையும் தூய்மையும் ஒருங்கே பொருந்திய சிவபெருமானையும் தன்னலமற்ற வள்ளலாம் மகாபலி சக்கரவர்த்தியையும் குழந்தைகளாம் ஜீவாத்மாக்கள் அனுபவிக்கும் சிவானந்தத்தையும் குறிக்கின்றதோ பொரி உருண்டை !

தர்ம நூல்களில் கார்த்திகை தீபங்களை ஏற்றும்போது சொல்லும்படி விதிக்கப்பட்ட மந்திரம்.

"கீடா: பதங்கா: மசகா: ச வ்ருக்ஷா;
ஜலே ஸ்தலே யே விசரந்தி ஜீவா:
த்ருஷ்ட்வா ப்ரதீபம் நச ஜன்ம பாகின:
பவந்தி நித்யம் ச்வபசா: ஹி விப்ரா:"

புழுக்களாயினும், பறவைகளாயினும், கொசுக்களாயினும், மரங்களாயினும், நாயாடிகளாயினும், அந்தணர்களாயினும், தரையிலும், நீரிலும் சஞ்சரிக்கும் எந்த ஜந்துக்களாயினும் இந்த தீபத்தைப் பார்த்த மாத்திரத்தினுல் மறு ஜன்மமில்லாமல் நித்யத் தன்மை அடைந்தவர்களாக ஆகிறுர்கள்.

ஆலயங்களில் சொக்கப்பனையிலும் வீடுகளில் பந்தத்திலும் குங்கிலியம் முதலியன போடும்போது சொல்லவேண்டிய மந்திரம்:

"உஜ்ஜவல ஜ்யோதி: ஆகாசே தீப்யமானே விபாவஸௌ.
குக்குலும் ப்ரக்ஷிபாமி: அத்ரப்ரீதோ பவ மகாபலே.
மகாபலாயை நம:"

தொகுத்தவர்: "பைங்காநாடு"

மங்கையரின் மகுடம்

●

கற்பு என்பது ஒழுக்கம்; மனைமாட்சி; அது மூவகையின தாகப் பிரிக்கப்பட்டுள்ளது. கணவன் உயிர் நீத்தான் என்ற சொற்கேட்டு இயல்பாக உயிர் நீங்குதல் தலையாய கற்பாகும். கொழுநன் இறந்த பிறகு தான் உயிருடனிருக்க விரும்பாது தீயை வளர்த்து அதில் வீழ்ந்து உயிரை விடுவது அடுத்த வகையாகும். தலைவன் இறந்த பிறகு நெய், மலர், படுக்கை இவற்றை நீக்கி கைம்மை நோன்பியற்றி வாழ்வது மூன்றும் வகையினது. நெடுஞ்செழியன் உயிர் நீத்தான் என்ற சொல்கேட்டு அவன் மனைவி கோப்பெருந் தேவி இயல்பாக உயிர் விட்டதை (சிலம்பு) மூதானந்தம் அல்லது தலையாய கற்பென்பர். தீ வளர்த்து அதில் வீழ்ந்து மடிந்த பூதப்பாண்டியன் இல்லாளின் கற்பு இரண்டாது கூறிய கற்பு நிலைக்கு உதாரணம். இறுதியான கற்புநிலைக்கு கோவலனின் காதலியான மாதவியை உதாரணமாகக் கூறலாம்.

ஆண்கள் உத்தம கதி யடையவேண்டுமென்ருல் கண்களுக்குப் புலப்படாத இறைவனை மனசால் தியானித்து வழிபடல் வேண்டும். ஆனல் பெண்களுக்கோவெனில் கண்களுக்குப் பிரத்யக்ஷமாகத் தெரிகின்ற தம் கணவனை வழிபட்டாலே உத்தம கதி கிட்டிவிடும்.

" காயக்லேசன-ம்ஹதா-புருஷ: -ப்ராப்னுயாத்-பலம்
தத்ஸர்வம்–லபதே-நாரீ-ஸுகனே-பதிபூஜயா."

—மஹாபாரதம்.

"வேத மோதிய வேதியர்க் கோர்மழை
நீதி தவரு நெறியினற் கோர்மழை
காதல் கற்புடை மங்கையற் கோர்மழை
மாதமும் மும்மழை பெய்யெனப் பெய்யுமே."

—விவேகசிந்தாமணி.

என்பதற்கிணங்க பெண்மணிகளின் கற்பு மகிமையால் பெய்யென்ற மாத்திரத்தில் மழைபொழியும்.

"தெய்வம்-தொழா-அள்-கொழுநன்-தொழுதெழுவாள்
பெய்யென - பெய்யும் மழை."

என்றவள்ளுவர் வாக்கும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமாகும்.

இதன் பொருள், காலையில் எழுந்தவுடன் கணவனை நமஸ்கரித்து வந்தால், பெய்யென்று கூற, மழை பெய்யுமென்பதல்ல. வாழ்க்கைத் துணைவனைத் தெய்வமாகக் கருதி, அவர் விருப்பங்களுக்கு இணங்க நடந்து, அவர் துணைகொண்டொழுகும் பெண்மணிகட்கு தெய்வமும் (இயற்கையும்) கட்டுப்படும் என்பதுதான் பொருள். இதற்கு ஆதாரங்களாக எவ்வளவோ எடுத்துக்காட்டலாம்.

எந்த ஒரு பெண்ணும் ஒப்பமாட்டாத ஒரு காரியத்தை, தன் கணவனுக்காக நிறைவேற்றிய பெருமை, பரிதியையே உதயமாகாமல் செய்திட்ட பதிவ்ருதாமணியான நளாயினியைச் சேரும்.

தன் கணவன் பெருங்குஷ்டரோகியாயும், எப்பொழுதும் உடலிலிருந்து சீழ் வடிந்து, கிருமிகள் உற்பத்தியாகி, துர்நாற்றமுடையவராக இருந்தும் கொஞ்சமேனும் விருப்பு வெருப்பின்றி அவருக்குப் பணிவிடைகள் பலவும் செய்து வந்தாள் நளாயினி. கணவன் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயின் வீட்டிற்கும் நடக்கமுடியாத நிலையிலிருக்கும் தன் கணவனை கூடை ஒன்றில் எடுத்துச் செல்வாள். ஒரு நாளல்ல; பல நாட்களாக, இவ்வாறு கணவனின் விருப்பத்தைப் பூர்த்தி செய்து வந்தாள். [மனங்கோணாமல் இன்றைய நாரிமணிகள் எவரேனும் கனவில்கூட இதுமாதிரி செய்வதற்கு ஒப்புவார்களா?] இவ்வாறு செல்லுங்கால் ஒரு நாள் அணிமாண்ட ரிஷியின் காலில் புருஷன் தலை மோதவும், வலி தாங்கமாட்டாத முனி, "பொழுது விடிந்தவுடன் விதவையாய்ப் போகக்கடவாய்" என்று

சபித்து விட்டார். நளாயினி, விதவையா யிருக்கும் துக்கத்தை பொருதவளாய், "சூரியன் உதயமாகாம லிருக்கட்டும்" எனக் கூறிவிட்டாள். கதிரவனும் கற்பரசியின் கட்டளையை காப்பாற்றி விட்டான். சூரியன் உதயமாகவில்லை.

இங்ஙனமே நாட்கள் பல சென்றன. ஞாயிறின்றி பயிர் பச்சைகள் வாடி வதங்கின. ஜீவராசிகள் தவித்தன. தேவர்களால் யாகம் முதலியன செய்ய இயலவில்லை. யாவும் சோர்ந்தன, கற்பின் மகிமையால். சகல தேவர்களும் பிரமாவிடம் சென்று முறையிட்டனர். தேவர்களுடன் பிரமா நளாயினியை அணுகி, சூரியனை உதயமாகும்படி சொல்லவேண்டு மென்று கேட்டுக் கொண்டார். அதற்கு நளாயினி, "விதவையாகும் கதி வராமலிருக்குமானல் சொல்கிறேன்" என்றுகூற, இறைவனும் நளாயினியின் கணவனுக்குத் தீர்க்காயுளைக் கொடுத்தார். நளாயினியும் சூரியன் உதயமாகும்படி சொன்னாள். பரிதி தோன்றி பலரும் சுகமடைந்தனர்.

அச்வபதியென்ற சூர்யவம்சத்தரசனின் மகள் சாவித்ரியின் பெருமை அளவிடற்கரியது த்யுமத்சேன அரசனின் புதல்வனான சத்யவானின் புகழ்களைக் கேள்வியுற்ற சாவித்ரி, அவரையே கணவராக மனசில் வரித்து விட்டாள். ஓர் நாள் அங்கு வந்த நாரதர், "சத்யவான் அற்ப ஆயுள் உள்ளவனாயிற்றே, அவனை நீ ஏன் கணவனாக..........." என்றெல்லாம் சாவித்ரியிடம் கேட்டார். "எது எங்ஙனமாயினும் அவரே என் கணவர்" என மொழிந்தாள் சாவித்ரி. காலக்கிரமத்தில் விவாகமும் நடந்தேறியது. காலந்தான் கனவேகச் சுழலிலே மாறுதல் தென்படலாயிற்று.

ஒருநாள்; சத்யவான் காட்டிற்குச் சென்றான். 'அன்று சத்யவானின் ஆயுள் முடியுங்காலம்' என்பதை தன் கற்பின் திறத்தால் அறிந்துகொண்ட சாவித்ரி, தானும்

கூடவே காடு சென்ருள். சிறிது நேரத்திற்கெல்லாம் சத்யவான் மயக்கத்தால் கீழே சாய்ந்தான். அப்போது சாவித்ரிக்கு ஒரு உருவம் தென்பட்டது.

"நீ யார்" என்ருள் சாவித்ரி.

"யமதர்மராஜன். இன்று சத்யவானின் ஆயுள் முடிகிறது. உயிரை மீட்க என் தூதர்களை அனுப்பினேன். உனது கற்பின் மகிமையால் தூதர்கள் இவ்விடம் அணுக முடியவில்லை. முடிவில் நானே வந்துவிட்டேன்" என்று கூறி, பாசக்கயிற்றை சத்யவான் மீது போட்டு அவனை இழுத்துச் செல்ல ஆரம்பித்தான். கணவனைப்பிரிய மனமிலாக் காரிகையும் பின் தொடர்ந்தாள்.

"நீ வரலாகாது திரும்பிப்போ" என்ருன் யமன்.

"என் கணவனைப் பிரிந்து செல்வது சாத்தியமாகாது"

"உன் பதிவ்ருதா மகிமையை மெச்சினேன், கணவன் உயிரைத்தவிர வேறு எது வேண்டுமாஞலும் கேள்."

"என் மாமஞருக்கு கண்தெரிந்து அவர் இழந்தராஜ்யத்தைத் திரும்பப் பெறவேண்டும்"—சாவித்ரி கேட்டாள்.

"அப்படியே ஆகுக"—இது யமனின் பதில். இப்படியே பல வரங்களையும் பெற்ருள். மேலும் மேலும் அவனையே பின் தொடர்ந்தாள். யமனும் முன்போலவே "கணவன் உயிரைத் தவிர..." என்ருன் இந்த சமயத்தில் சாவித்திரி வெகு சாமர்த்தியமாக "எனக்கும் என் கணவருக்கும் நூறு குழந்தைகள் பிறக்கவேண்டும்" என்று கேட்டுக்கொண்டாள்.

"அப்படியே ஆகுக" என்று கருத்தினை கவனியாது வழக்கம் போலக் கூறிஞன். பின்னும் சாவித்ரி தன்னைத் தொடர்வதைக் கண்டு, "இன்னும் ஏன் தொடர்கிருய்" என்ருன் யமன்.

"தாங்கள் இப்பொழுது (கடைசியாக) அளித்த வரம் பொய்க்காமலிருக்கவேண்டுமாஞல் என் கணவர் என்னு

டன் வந்தாகவேண்டுமல்லவா? தங்கள் வரம் மெய்யாவ தற்கே தொடர்ந்தேன்'' என்று விளக்கமாக கூறினுள் சாவித்ரி.

சாவித்ரியின் சாமர்த்தியத்தையும் அவளுக்கு தன் கணவனிடமுள்ள பக்தியையும் புகழ்ந்து, "நீ கணவ னுடன் சுகமாக வர்ழ்வாயாக'' என்று சொல்லி சத்ய வானுக்கு உயிரை அளித்துவிட்டுச் சென்ருன்.

யமதர்மனை நேரில் கண்டு அவனுடன் வாதாடி கண வர் உயிரை மீட்டுவந்த சர்வித்ரியின் கற்பின் மகிமை குன்றி லிட்ட விளக்கேபோல் என்றும் நின்று நிலவுமல்லவா!

ராவண வதத்திற்குப் பின்பு ராமனின் கட்டளைப்படி விபீஷணன் சீதாதேவியை அழைத்து வந்தான். அச் சம யத்தில் ராமர் தேவியை நோக்கி, "பத்து மாதமாக பிறர் வீட்டிலிருந்த உன்னுடைய பரிசுத்தத்தை எவ்வாறு நம்பி அங்கீகரிப்பேன்'' என்று கூறவும், அவ் வேதனைச் சொற்கள் தாங்காதவளாய் அக்னியை வளர்த்து, அதில் இறங்கி சாம்பலாகாமல் தேஜோவதியாக வெளிவந்தது சீதாபிராட்டியின் கற்பு மகிமையைத்தானே விளக்குகிறது.

கடவுள்களையே பாலர்களாக்கி வையத்தையே நடுங்க வைத்த அனசூயையின் கற்பு மகிமையை நாம் அறியா தவர்களா? குரங்குருவமானதும் கல்லுருவமானதும் கற்பின் மகிமையால்தானே! கலியுகத்திலேகூட இத் தகைய ஒரு நர்ரிமணி வர்ழ்ந்திருக்கிருள். அவள்தான் வள்ளுவரின் வாழ்க்கைத் துணைவியான வாசுகி அம்மையார்.

இமயமும் திபேத்தும் பூமியை உதைத்தெழுந்து வானையே முட்டி மோதிக்கொண்டிருக்கவில்லையா? ஒரே நிலப்பரப்பாகவிருந்த ஆப்பிரிக்கா, இந்தியா, ஆஸ்தி ரேலியா, முதலிய நில பாகங்கள் பிரிந்து மத்தியில் நீர் பாகம் ஏற்படவில்லையா? பெரிய பெரிய சாம்ராஜ்யங்கள் சரிந்து தவிடுபொடியாகவில்லையா? இவை யெல்லாம்

காலமாறுபாட்டால் ஏற்பட்டவைதானே! அதுபோல கற்பு நிலையும் காலமாறுபாட்டால் மாறிப்போய்விட்டது!

"பாதிவ்ரத்யம் து நாரிணும் ஏததேவஸநாதனம்" என்பது மகாபாரத வாக்கு. — ராமமூர்த்தி

மீன் வயிற்றில் 'மார்க்கெட்!'

ஒருசமயம் சுறுமீன் ஒன்று ஒரு கப்பலைத் துரத்தியது. கப்பல் மாலுமிகள் அதை விரட்டுவதற்காக ஒரு நாற்காலியைத் தூக்கி அதன்மீது எறிந்தார்கள். அந்த மீன் அதை விழுங்கிவிட்டு கப்பலை நோக்கி விரைந்தது. மாலுமிகள் மறுமுறை ஒரு ஆரஞ்சுப்பழக் கூடையைத் தூக்கி அதன் பக்கம் வீசினார்கள். மீன் அதையும் விழுங்கிவிட்டுக் கப்பலைக் குறித்துப் பாய்ந்தது.

ஒரு மனிதனையாவது தின்னவிட்டால் மீன் கப்பலை விடாது. ஆதலால் கப்பல் கவிழ்ந்து எல்லோரும் இறப்பதைக் காட்டிலும் எல்லோருக்காகவும் ஒருவன் தியாகம் செய்வது நலம் என்று மாலுமிகள் முடிவு கட்டினார்கள். யார் தியாகம் செய்ய முன் வருவார்கள்! சீட்டுப் போட்டுப் பொறுக்குவது என்று தீர்மானமாயிற்று. சீட்டு ஒரு யஹூதியனுக்கு விழுந்தது. அவனை அந்த மீனுக்கு பலி கொடுத்தார்கள். அவனையும் விழுங்கிவிட்டு மீன் கப்பலை முன்னிலும் வேகமாக விரட்டியது. கடைசியில் எல்லோரும் சேர்ந்து அதை துப்பாக்கியால் சுட்டுக் கொன்றார்கள். மீன் கப்பலுக்குக் கொண்டு வரப்பட்டது.

ஒரு மாலுமி அந்த மீனுடைய வயிற்றுக்குள் நுழைந்தான். அவனால் தன் கண்களையே நம்பமுடியவில்லை. அங்கு முன்பே விழுங்கப்பட்ட மனிதர்களின் கூட்டம் நிறைந்திருந்தது. கூட்டத்தின் நடுவில் யஹூதியன் நாற்காலியிலமர்ந்து கூடையிலிருந்து ஆரஞ்சுப் பழங்களை எடுத்து "அணுவுக்கு ஒன்று" என்று விற்றுக் கொண்டிருந்தான்!

விகடகவி

பாவலர் ஒருவர் கம்பராமாயணத்தைப் பாடி அதற்கு விளக்கங் கொடுத்துக் கொண்டிருந்தார். அந்த சபையில் திடீரென தோன்றினன் தெனலிராமன். தோன்றியவன் சும்மா இருக்காது, கவிஞரே! நிறுத்தும் உமது காவியத்தை; நான் கூறப்போகும் கவிக்கு நல்ல விளக்கங் கொடுத்துவிட்டு பிறகு பாடும் உமது ராமாயணத்தை என்ருன். கவிஞரும் அதற்குச் சம்மதிக்கவே, கவியைப் பாட ஆரம்பித்தான் தெனலிராமன்.

"எண்ணஞ்சு கால் சிரசோனே
இருபத்தொரு மாவரசன்
கொன்றிடுவேன் எனக்கூறினன்—ஏனென்ருல்
'ச' எழுத்து நாலதையும்
'த' எழுத்து ஒன்பதையும்
தானெடுத்துச் சென்றதனல்தான்."

என்று பாடி முடித்துவிட்டுப் பாவலரை நோக்கினன் தெனலிராமன். கவிஞர் விழித்தார். கேட்டுக்கொண்டிருந்த ஜனங்களும் விழித்தார்கள். கவிக்கும் விளக்கம் தெரியவில்லை. இரண்டு தினங்களாகியும் அதன் விளக்கம் கூடியிருந்த மக்களுக்கும் தெரியவில்லை. புலவர்களுக்கும் தெரியவில்லை. தெனலிராமனே தன் கவிக்கு விளக்கங் கூறினன்.

எண்ணஞ்சுகால் சிரசோனே எண்ணஞ்சு $(8 \times 5 = 40)$ கால் $(40 \times \frac{1}{4} = 10)$ சிரசோனே = தலையை உடையவனே. அதாவது 10 தலையை உடைய ராவணனை. இருபத்தொரு மாவரசன். 'மா' என்பது தமிழ் கணக்கு. 'இருபத்தொருமா' என்பது 'ஒன்று' என்று அர்த்தம். ஒரு அரசன் (ராமன்) கொன்றிடுவேன் எனக்கூறினன். 10 தலையை உடைய ராவணனை ராமன் கொன்றிடுவேன் எனக் கூறினன். ஏன்? 'ச' எழுத்து நாலதையும். 'ச' எழுத்தில் நாலாவது எழுத்து 'சீ' 'த' எழுத்தில் ஒன்பதாவது எழுத்து 'தை'யும் இணைத்தால் 'சீதை' என்று வரும். சீதையை ராவணன் தூக்கிச் சென்றதனல்தான் ராமன் அவனைக் கொன்றுவிடுவேன் எனக்கூறினன்.

கவிஞர் களிப்புற்ருர். கேட்டிருந்த மக்களும் பரமானந்த மடைந்தனர்.

—V. S. D.

குருவை மீறின சீடர்களின் கதி

ஒரு நாள் ஆதிசேஷன் தன்னுல் பாரம் தாங்க முடியாம லிருப்பதற்கு என்ன காரணமென்று ஸ்ரீ மஹா விஷ்ணுவைக் கேட்டார். அவர் கூறியதாவது:—

"நான் மூச்சையடக்கி யோகத்தை அடைந்து மனத்தை நிலைநிறுத்தி மகாமாயையாகிய திரையை விலக்கி அதற்கப்பால் நோக்கினதும் ஆஹா! சிவகாமிநாதனது நித்தியானந்தத் திருநடனத்தின் மஹிமையை என்னவென்று சொல்லுவேன். வலது கைகளின் ஒன்றில் "சப்த நிஷ்டம் ஜகத்" என்ற வேதவாக்கியத்திற்கிணங்க இந்த ஜகத்திற்கெல்லாம் காரணபூதமான சப்தத்தைக் கையிலடக்கியிருக்கிருர் என்பதைக் குறிக்க உடுக்கு, மற்ருென்றினுல் ஞானத்தின் மிகச் சிறந்த அதிகாரமான சாந்தியை காண்பித்துக்கொண்டும், இடது கைகளில் ஒன்றில் குருவாகிய தனது உபதேசத்தின் பிராமாண்யத்தை ஸ்தாபிக்க ஆத்மாவின் ஜ்யோதியை எடுத்துக் கொண்டும் மற்ருென்றினுல் அதிசஞ்சலமாயுள்ள மனசாகிற மானை தூரத்தில் தள்ளிக்கொண்டும் அகம்பாவமாகிற புலியை கொன்று அதன் தோலை இடுப்பில் அணிந்துகொண்டும் பிறப்பு இறப்புக்குக் காரணமாயுள்ள முடிவில்லா மகா மாயையாகிற முயலகனை ஒரு காலால் மிதித்து நசுக்கிக் கொண்டும் மற்ருெரு பாதத்தை ஜாக்ர, ஸ்வப்ன ஸுஷுப்தியாகிற மூன்று அவஸ்தைகளுக்கு மேம்பட்ட துரியாவஸ்தையைக் காட்டுவதற்காக உயரத் தூக்கிக் கொண்டும், மிகவும் குளிர்ந்ததும், ஆச்வாஸகரமாயுள்ளதுமான ஞானத்தைக் காட்டும் கங்கையையும், ஜ்யோதிர்மயத்வத்தையும், ஆனந்தமயத்வத்தையும் காட்டும் சந்திரனையும் சிரஸில் தரித்துக்கொண்டும், பார்ப்பதற்கு மிக அரிதும் பரமமான தத்வத்தை உபதேசிப்பதுமான ஆனந்த தாண்டவமாடினுர் கைலாஸபதி. அந்த அற்புதக் காட்சியைக் கண்டும் அந்தப் பெருமையை வர்ணிப்பது என்றுல்

முடியாதது. யோகத்தால் அந்த ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டிருந்ததால் சரீரம் கனமடைந்தது'' என்றார்.

ஆதிசேஷன் தானும் அந்தக் காட்சியைக் காண வேண்டும் என்று பிரார்த்தித்தார். பூலோகத்தில் தில்லை க்ஷேத்திரத்தில் நர்த்தனத்தைக் காண்பிப்பார் என்றும் அதை தரிசித்துவிட்டு பாணினி மகரிஷி செய்த வியாகரணத்திற்கும் காத்யாயனர் இயற்றிய வார்த்திகத்திற்கும் மகாபாஷ்யத்தைச் செய்து ஜனங்களை கிருதார்த்தர்களாக்கிவிட்டு திரும்பவேண்டும் என்று அனுக்கிரகித்தார் ஸ்ரீமந் நாராயணன்.

ஆதிசேஷன் பதஞ்சலி மகரிஷியாக அவதரித்தார். சிவனின் ஆனந்தத் தாண்டவத்தைத் தரிசித்து துதி செய்து நிற்கையில் அவரும் மகாபாஷ்யத்தை விவரணம் செய்துவிட்டு தேவலோகம் செல்லும்படி கட்டளையிடப் பெற்று வியாகரண மகாபாஷ்யத்தை விரைவில் செய்துமுடித்தார். பாஷ்யத்தைக் கற்றுக்கொள்ள ஆயிரம் சிஷ்யர்கள் வந்து உபதேசிக்கும்படி வேண்டினர்.

பதஞ்சலி ஒரு திரையைப்போட்டு அதன் பக்கத்தில் தானிருந்துகொண்டு மற்றொரு பக்கத்தில் ஆயிரம் சிஷ்யர்களையும் அமரச்செய்து, அந்தத் திரையைவிலக்கி எந்த சிஷ்யனும் பார்த்தால் தன் கோபத்திற்குள்ளாவான் என்று முன்பே வற்புறுத்தி திரைக்குள்ளாக தனது உண்மை ஸ்வரூபமான ஆதிசேஷனாகி ஆயிரம் முகங்களாலும் ஆயிரம் சிஷ்யர்களுக்கு ஏககாலத்தில் மகாபாஷ்யத்தை உபதேசித்தார்.

பாஷ்யம் முடியும் சமயத்தில் இவருக்கு எவ்வளவு முகம் என்று பார்க்க திரையை விலக்குகிறார்கள் சிஷ்யர்கள். திரை விலகவே ஆதிசேஷனது ஆயிரம் முகங்களினின்றும் வெளி வந்த விஷத்தினால் சிஷ்யர்கள் எல்லோரும் பஸ்பமாய்விட்டார்கள். குருவின் வார்த்தையை மதிக்காததன் பலன் இதுதான். —ஆர். வெங்கட்டராமன்

பேசாத ஊமை பெருங்கவியானுர்

●

முன்னூறு வருடங்களுக்கு முன்னரே காசி யாத்திரையை மேற்கொண்டு, மொழியும், குலமும் சமயமும் வேருக உடைய மக்களிடையே தங்கித் தமிழர் கலாசாரத்தைப் பரப்பிய பெரியார் இவர். இவரது காலம் 17-ம் நூற்ருண்டு பிற்பகுதியாகும். இவர் ஜனனமானது திருநெல்வேலி ஜில்லாவைச் சேர்ந்த ஸ்ரீவைகுண்டம். இவர் தந்தை சைவக் குலத்தைச் சேர்ந்த சண்முகசிகாமணிக் கவிராயர்.

சண்முகசிகாமணிக் கவிராயருக்கு மகப்பேறு இல்லாததால் அவருடைய குலதெய்வமாகிய திருச்செந்தூர் முருகனிடம் தவங்கிடந்து முருகன் அருளால் அவதரித்தவர் குமரகுருபரர். குமரகுருபரர் ஐந்து வயதுவரை வாய் பேசாத ஊமையாகவே இருந்து வந்தார். நாளடைவில் குழந்தைப் பேசக்கூடுமென்று எதிர்பார்த்து பயனில்லாததை உணர்ந்த கவியராயர் மனம் வருந்தி தங்கள் குல தெய்வமாகிய செந்திலாண்டவனிடம் குழந்தையைக் கொண்டுசென்று சண்முக விலாசத்திலே குழந்தையைக் கிடத்தி பெற்ருேர்கள் தவங்கிடந்தனர்.

முருகப்பெருமான் திருவருளால் குழந்தை பேசத் தொடங்கியது. அப்பொழுது அங்கே கூடியிருந்தவர்கள் "குருபர" "குமரகுருபர" எனக்கூவி அழைத்தனர். இதிலிருந்து இவருக்கு குமரகுருபரர் என்ற பெயர் வழங்கிவந்தது.

பின்னர் இவர் கவிராயர் மகனுனதால் இவரும் கவிராயராகவே திகழ்ந்தார். இலக்கண இலக்கியங்களோடு கவி பாடும் சக்தி முருகன் அருளால் தானுகவே அமைந்துவிட்டது. ஊமை கவிஞரானது உலகத்திற்கே ஒருவிந்தையல்லவா...! தமிழ் நூல்கள் யாவற்றையும் இவர் விரைவிலேயே கற்றுணர்ந்தார். சிறந்த தமிழ் புலமையோடு பல பாடல்களை இயற்றியுள்ளார்.

பிணி நீங்கவும், கல்வி நலம்பெருகவும், பலராலும் இன்றும் இப்பாடல்கள் பாராயணம் செய்யப்பட்டுவருகிறது. பின்னர் இவர் தூய தவவேடத்துடன் துறவு வாழ்க்கையை மேற்கொண்டார். அக்காலத்தில் மதுரையை ஆண்ட திருமலை நாயக்கர், அடிகளை வரவேற்று உபசரித்தார். அடிகள் மதுரை மீனுட்சியம்மை மீது பிள்ளைத்தமிழ் பாடி நாயக்க மன்னனின் முன்னிலையில் அரங்கேற்றி வைத்தார். அரங்கேற்றத்தில் அடிகள் தம் கவிகளுக்குச் சிறந்த வியாக்கியானம் செய்துகொண்டுவந்தார். அப்பொழுது ஸ்ரீமீனுட்சியே நாயக்க வேந்தன் மடி மீது வீற்றிருந்து "தொடுக்கும் கடவுள் பழம்பாடல்" என்று தொடங்கும் கவியைக் கேட்டு அடிகள் கழுத்தில் முத்தாரம் இட்டு, மறைந்தாள்.

மன்னன் அடிகளுக்குச் சிவிகை, கொடை, கொடி, டால் முதலிய விருதுகள் வழங்கி கௌரவித்தார். பின்னர் அடிகள் மன்னனின் வேண்டுகோட்கிணங்க நீதிநெறி விளக்கம் என்னும் அறிய நூலையும் இயற்றினுர். அந்நூல் உலகநீதியை நன்கு உணர்த்துவதாக இருக்கிறது. பின்னர் மதுரைமீனுட்சி மீது மதுரைக் கலம்பகம் ஒன்று பாடி அருளினுர்.

பிறகு அடிகள் வடதிசைநோக்கிப் புறப்பட்டார். மன்னன் கொடுத்தருளிய சிவிகை முதலிய சகல விருதுகளுடன் திருச்சிராப்பள்ளி, திருவையாறு, திருவிடைமருதூர், முதலிய இடங்களிலே ஆங்காங்கே தங்கி சைவப் பிரசாரமும் செய்துவந்தார். பின்னர் தருமபுரம் வந்தடைந்தார். அங்கே தம்பிரான்களால் வரவேற்கப்பட்டார். ஆதீன முதல்வர் மாசிலாமணி தேசிகர்களிடம் காஷாயமும் ஞானுபதேசமும் பெற்ருர்.

பின் தமது குருதேசிகர் மேல் மும்மணிக்கோவையும் பாடி அருளினுர். அதன்பின் அடிகள் திருவாரூர் சென்று அங்கே நான்மணி மாலை பாடி தியாகேசரை வழிபட்டார்.

பின் வைத்தீஸ்வரன் கோவிலுக்கு வந்து முத்துக்குமார சுவாமி மீது "பிள்ளைக்கவி"ப் பாடினார். சீர்காழி சென்று சிதம்பரம் வந்தடைந்தார். அங்கே மும்மணிக் கோவையை இயற்றினார். சிவகாமியம்மை மீது "இரட்டை மணிமாலை"யும் பாடி அருளினார்.

பின்னர் அடிகள் காசியாத்திரையை மேற்கொண்டார். கச்சி, காளத்தி முதலிய ஸ்தலங்களை தரிசித்து காசி சேர்ந்தார். கங்கையிலே மூழ்கி விசுவேசரை வழிபட்டு தீந்தமிழால் " கலம்பகமும், பதிகமும் " பாடினார்.

சிலகாலம் காசியிலே தங்கி சைவ சமயத்தைப் பரப்பவும் தருமம் செய்யவும் கருதினார். வடநாட்டு மொழியாகிய ஹிந்தியைத் தெரிந்துகொண்டாலன்றி சமயப் பிரசாரம் செய்யமுடியாது என்பதை அடிகள் உணர்ந்து ஹிந்தி பாஷையில் தான் தேர்ச்சி பெறும்படி சரஸ்வதி மீது " சகலகலாவல்லிமாலை"ப் பாடித் துதித்தார்.

அவ்வாறே கலைவாணியின் அருளால் ஹிந்தி பாஷையிலும் தேர்ச்சி அடைந்து அதியற்புதப் பிரசங்கமும் செய்யத் தலைப்பட்டார். குழந்தைப் பருவத்தே ஊமையாக இருந்து பின் பேசி தாய்மொழியிலே மகா கவியாகி வயது முதிர்ந்த நிலையிலே ஹிந்தி பாஷையிலும் நன்கு தேர்ச்சி பெற்றார்.

யாத்திரையாக காசிக்கு வரும் தமிழர் தங்குவதற்கு இடமின்றி அவதியுறுவதை அறிந்த அடிகள், ஒரு பெரிய மடம் நிறுவ ஆவலுற்றார். இந்த ஆவலை நிறைவேற்ற வேண்டி இந்நாட்டை அந்நாளில் ஆண்ட முகலாய மன்னனாகிய பாதுஷாவிடம் நேரில்சென்றார். பாதுஷா இவரை நன்கு மதித்து இவர் விருப்பத்தை நிறைவேற்றும் நிமித்தம் சக்தி தேவியே அடிகளுக்கு தமது வாகனமாகிய சிங்கத்தைக் கொடுத்து உதவியதாகவும் அடிகள் உயிர்உள்ள

சிங்கத்தின் மீது ஏறி பாதுஷாவிடம் சென்றதாகவும் சரித்திரம் கூறுகிறது. அதற்கு அறிகுறியாக காசிமடத்திலே அடிகள் சிங்கத்தின் மீது ஆரோகணித்து இருப்பது போன்று கற்சிலை ஒன்று எழுப்பப்பட்டிருக்கின்றது.

பாதுஷா அடிகளின் கல்வித்திறனையும் தெய்விகச் சத்தியையும் உணர்ந்து அறம் செய்ய திருமடம் ஒன்றை அமைத்துக் கொடுத்தார். அடிகள் கங்கைக் கரையிலே கேதாரமந்திரம், கேதாரத் துறை அறச்சாலை முதலியன அமைத்தார். அடிகள் தம்முடைய மடத்திலே நாள் தோறும் தமிழ் நூல்களைப் படித்து ஹிந்தியில் மொழிப்பெயர்த்து பிரசங்கம் புரிந்து வந்தார். அவ்வாறு அடிகள் கம்பராமாயணத்தையும் பிரசங்கம் செய்யும் பொழுது பிரசித்திபெற்ற ராமபக்தராகிய துளசிதாஸர் அந்தக் கூட்டத்தில் ஒருவராய் இருந்துகேட்டுவந்திருக்கிறார். ஆகையினாலேதான் துளசிதாஸர் இயற்றிய ஹிந்தி ராமாயணத்தில் கம்பனுடைய கருத்துக்களும் கற்பனைகளும் பொலிந்து கிடக்கின்றன.

பின்னர் அடிகள் வெள்ளியம்பலத் தம்பிரான் முதலியோருக்கு வித்தியாகுருவாகவும் திகழ்ந்தார். அடிகள் தமது மாணவரான சொக்கநாத முனிவரைத் தமக்குப்பின் தாம் கண்ட தருமங்களை புரிய நியமித்து, அற்புத செயல்கள் பல புரிந்து, அறம் பல வளர்த்து வயோதிக தசையிலே விஸ்வேஸ்வரர் திருவடியினை அடைந்தார். இவரது சரித்திரத்தைக் காலஞ்சென்ற பெரும்பாவலர் மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் செய்யுள் வடிவிலே பாடியிருக்கின்றார். அடிகள் இறந்தது முதல் ஒருவர் பின் ஒருவராகத் துறவிகள் அம்மடங்களில் தருமங்கள் நடத்தி வருகின்றார்கள்.

—வெள்ளகால், எஸ். தெட்சணாமூர்த்தி

மனிதக் கோழிகள்



●

பாகிஸ்தானில்நிகழும் கோழிச் சண்டையைப் பற்றி ஒரு சுவையான தகவல் வருமாறு:-

சண்டைக்கு உபயோகமாகும் கோழிகளை வளர்ப்பவர்கள் இந்தரகக்கோழிகளின் முட்டைகளை கோழிகள் அடைகாக்க விடுவதில்லை.

முட்டைகளைக் கோழி வளர்ப்பவர்களே தங்கள் தேகத்தோடு சேர்த்து இறுகக்கட்டிக் கொண்டு அவற்றை அடைகாப்பார்கள். இம்மாதிரி, மனிதர்களால் அடைகாக்கப்பட்டு பிறக்கும் கோழிகள் இயற்கை முறையில் கோழிகளாலேயே அடைகாக்கப்பட்டுப் பிறக்கும் கோழிகளைவிடப் பல்லாயிர மடங்கு வலுவும் வீர்யமும் கொண்டவையென்று பாகிஸ்தான் மக்கள் நம்புகிறார்கள்.

இருபதாம் நூற்றாண்டில் மனிதர்கள் கோழிகளை அடைகாப்பதில் மட்டுமல்ல நிபுணத்துவம் பெற்றிருப்பது. தென் ஆப்பிரிக்காவைச் சேர்ந்த ஒரு விவசாய தம்பதிகள் தீப்பறவைகளின் முட்டைகளையும் அடைகாக்கிறார்கள். தீப்பறவைகளின் இறக்கைகள் மேல் நாட்டில் வைரம், முத்து முதலியவற்றைப்போல் விலைமதிப்புள்ளதும் பிரபு குடும்ப மாதர்களின் தலை சிங்காரிக்க ஒரு பொருளாகவும் உபயோகப்படும். இதனால் பணம் சம்பாதிப்பதற்காக தென் ஆப்பிரிக்காவில் அநேகர் தீப்பறவைகளை வளர்ப்பதுண்டு.

ஒரு தீப்பறவை பதின்மூன்று முட்டைகளை இட்டுவிட்டு அவற்றைப்பற்றி அக்கறை கொள்ளாமலே ஓடிப்போன பின்பு இந்த முட்டைகள் மேற்கூறிய தம்பதிகளுக்குக் கிடைத்தன. இந்த முட்டைகளை இவர்கள் தினந்தோறும் தங்கள் படுக்கையிலேயே வைத்துக்கொண்டு அடைகாத்தார்கள். இவற்றிலிருந்து பிறந்த பறவைகள் மூலம் இவர்கள் எவ்வளவு பணம் சம்பாதித்திருப்பார்களென்பதை நாமே யூகித்துக்கொள்ளலாம்.

அடைகாப்பதுபோல் பறவைகளைச் சேர்ந்த வேறு வேலையும் மனிதனால் செய்ய நேரிடுகிறது. சில நூற்றாண்டுகளுக்கு முன் இங்கிலாந்து தேசத்தை ஆண்டு வந்த அரசனொருவன் ஒரு மனிதனுக்கு விநோதமான அலுவலொன்றை யளித்திருந்தார். அது என்னவென்றால், விடியற்காலம் கோழி கூவுவதுபோல் இரவு ஒவ்வொரு மணி நேரமும் இந்தமனிதன் கூவவேண்டியது. அடுத்த அரசன் ஆட்சியை ஏற்ற தினம் இரவு பத்து மணிக்கு அவர் உணவருந்திக் கொண்டி

ருந்த வேளையில் இந்த மனிதன் கோழிபோல் கூவினன்.

அரண்மனைச் சிப்பந்திகள் எல்லோருமாகச் சேர்ந்து தன்னை அவமதிப்பதற்காக செய்த சூழ்ச்சியே இந்தக் 'கோழி கூவல்' என்று நினைத்து ஆத்திரமடைந்தான் அரசன். உடனே அந்த மனிதன் 'கோழி கூவல்' அலுவல் நிறுத்தப்பட்டது. ஆனால் அந்த மனிதனின் சம்பளம் நிறுத்தப்படவில்லை, ஆயுள் பூராவும் சம்பளம் பெற்றே வந்தான்.

ருஷ்யாவில் ஆட்சிபுரிந்த ஒரு ராணி ஒரு மனிதனுக்கு ஒரு விசித்திரத் தண்டனையை விதித்திருந்தாள். அவள் கோபத்திற்காளான ஒரு சிப்பந்தி அவன் ஆயுள் பூராவும் ஒரு 'கோழி'யாக இருக்கவேண்டுமென்பதே இத்தண்டனையாகும். இதை யொட்டி அவனுக்காக ஒரு பெரிய கூடையைச் செய்து அது நிறைய வைக்கோலைப் பரப்பி அதன் மீது அவனை உட்காரச் செய்து ராணி அடிக்கடி உலாவும் அறையில் இந்தக் கூடையை வைத்திருந்தார்கள். ராணி அந்த அறையில் நுழைந்தவுடன் இந்த மனிதன் கோழியைப்போல் கூவி கோழி இறக்கைகளை யடித்துக் கொள்வதுபோல் இரு கைகளையும் அடித்துக்கொள்ள வேண்டும்.

அதிகாரத்திலுள்ள மனிதர்களுக்குக் கிறுக்குப் பிடித்தால் சிப்பந்திகளுக்குத் திண்டாட்டம் தானே?

'குருட்டு' அதிருஷ்டம்

ஒரு ஸ்திரீ, பிச்சைக்காரன் ஒருவனுக்கு ஓரணாவைத் தர்மஞ் செய்துவிட்டு "ஐயோ பாவம், முடமாயிருக்கும் நீ, எவ்வளவு அவஸ்தைப்படுகிறாயோ, ஆனால் முடவனாயிருப்பது குருடனாயிருப்பதைவிட சிலாக்கியம்தானே" என்று சொன்னாள்.

அதற்குப் பிச்சைக்காரன் "நீங்கள் கூறுவது உண்மை அம்மா. நான் குருடனாயிருந்த போது எல்லோரும் செல்லாக் காசுகளையே கொடுத்தார்கள்; அதனால் தான் இப்போது முடவனாக மாறிவிட்டேன்" என்றான்.

எப்போதும் உற்சாகம் அளிப்பது
அசோகா சுகந்த பாக்குத்தூள்

GANZON BROS.

DRESS SPECIALISTS
3, THOPE STREET
TRIPLICANE MADRAS-5.

★

Clothing Contractors to Government of India Supply Dept., Railways & Public Bodies, Ready - to - Wear - Garments Manufacturers and Exporters.

★

IN the hands of the Master - Tailors and Cutters of GANZONS, Clothes acquire a subtle distinction beyond the power of imitation.

★

GANZONS have set standards of superb craftsmanship- Standards that have been the pride of the firm of Ganzons for over a quarter of a century.

கறுப்பு இந்தியரும் சிவப்பு இந்தியரும்

அமெரிக்காவில் வசிக்கும் சிவப்பு இந்தியர்கள் பண்டைய காலத்தில் ஆசியாவைச் சேர்ந்தவர்களென்று அறிஞர்கள் பொதுவாக ஒப்புக் கொள்ளும் உண்மையாகும். ஆனால் ஆசியாவில் எந்த தேசத்தைச் சேர்ந்தவர்களென்பதைப் பற்றி பலவித அபிப்பிராயங்களுள்ளன.

இருபத்தையாயிரம் வருஷங்களுக்கு முன்பு ஆசியாவிலிருந்து அமெரிக்காவிற்கு இவர்கள் குடியேறினர்களென்று கூறப்படுகிறது. இவர்கள் தரை மார்க்கமாகவும் அமெரிக்காவிற்குச் சென்றிருப்பார்களென்றும், கடல் மார்க்கமாகவும் சென்றிருக்கலாமென்றும் இருவித அபிப்பிராயங்களுண்டு.

கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டுபிடிப்பதற்கு வெகுகாலத்திற்கு முன்பு இவர்கள் அமெரிக்காவில் குடியேறினர்களாம். ஆனால் இதைப்பற்றி ஆராய்ச்சி ஒன்றுமே இதுவரை நடந்ததில்லை. ஏனென்றால் அமெரிக்கர்கள் சுதந்திரமுள்ளவர்கள். இந்தியாவோ நேற்று வரையிலும் இங்கிலாந்தின் அடிமை. ஒரு அடிமை ராஜ்யத்திற்குத் தன்னுடனிருந்த தொடர்பைப் பற்றி ஆராய்ச்சி செய்வதற்கு எந்தச் சுதந்திர ராஜ்யத்திற்கு என்ன அக்கறை?

ஹிந்துக்கள் ஆதிகாலத்தில் அமெரிக்காவில் குடியேறியிருந்தார்களென்பது உண்மையாயின் அதைப் பற்றி பெருமையடைய சுதந்திர இந்தியாவிற்கு உரிமையுண்டு. ஆனால் அப்படி குடியேறியிருந்ததைப் பற்றி இன்று ஆதார பூர்வமான அத்தாட்சிகள் கிடைப்பதில்லை. இதற்குக் காரணம் அமெரிக்காவில் முதல் முதலாக இந்தியர்கள் குடியேறியிருந்த ராஜ்யங்களுக்கு ஸ்பெயின் தேசத்தவர்கள் தொடர்ந்து சென்றனர். ஹிந்துக்களை ராணுவ பலத்தால் அடக்கியாண்டனர். அவர்களைக் கொள்ளையடித்துள்ளனர். ஹிந்துக்களின் கலாச்சாரங்களையும் பண்பாடுகளையும் அழிக்கவும் முயன்றனர். இவ்வாறெல்லாம் இவர்கள் செய்திருந்தும் இன்றைக்கும் சிவப்பு இந்தியர்களிடையே நிலவியுள்ள சில பழக்க வழக்கங்கள் ஹிந்துக்களின் ஆசாரங்களையொட்டியுள்ளது. இந்த உண்மையிலிருந்து, நாம் யூகிக்க வேண்டியது சிவப்பு இந்தியர்களுக்கு முன்னொரு காலத்தில் இந்திய ராஜ்யத்தோடு ஒரு தொடர்பு இருந்தது என்பதே தான்.

—*A. B. Patrika*

டாக்டர் நடிப்புக்கு திடீர் சிறப்பு

•

வைத்தியத் துறையில்பொது மக்களுக்கு ஏராள மான நன்மை செய்யும் அள வுக்கு பிரபலமடைவது சிரம மான காரியம். ஆனால் குறுக்கு வழி மூலம் 'டாக்டர்' என்ற உலகப் புகழ் பெற்ற வர்களுமிருக்கிறார்கள். இவர் கள் தான் ஹாலிவுட் படங்களில் டாக்டராக நடிப்பவர்கள். இவர்களைச் சாதாரணமாகவே டாக்டரென்று அழைப்ப துண்டு.

மற்றெந்த வேஷங்களையும் விட டாக்டராக நடிப்பது மூலம் சினிமா நடிகராக முன்னுக்கு வருவது எளிதென ஹாலிவுட் டில் கருதப்படுகிறது. ஒரே படத்தில் டாக்டராக நடித்ததன் மூலம் மிகப் பிரபலமடைந்த ஐந்தாறு நடிகர்கள் ஹாலிவுட் டில் இருக்கிறார்கள். சிலர் மற்ற வேஷங்களில் நடித்து பிரபலமே யடையாமல் திண்டா டிக் கொண்டிருந்த சமயத்தில் ஏதோ ஒரு படத்தில் டாக்டராக நடித்ததனால் பிரபலமடைந்த துண்டு.

பிரபல டாக்டர்களென்றால் நன்றாகப்படித்தவர்கள்; வலிவும் வனப்பும் படைத்தவர்கள்; பணக்காரர்களுக்கும் ஏழை களுக்கும் ஒன்றுபோல் உதவி செய்வதனால் சமூகத்தில் புகழப் படுவார்கள், இம்மாதிரி மனிதர் கள் இளம்பெண்களை வசீகரிக் காமலிருக்கமுடியுமா? உண் மையிலேயே இந்த நடிகர் களுக்கு அவர்கள் நடிக்கும் வேஷத்திற்குத் தகுந்த கல் வியோ, தகுந்த அனுபவமோ, சமூகத்தில் தகுந்த அந்தஸ்தோ இல்லாவிடினும் இந்த வேஷத் தைத்தாங்குவதன் மூலம் இவர் களுக்குப் புகழ் கிட்டிவிடுகிறது.

ஆராய்ச்சி வேலையிலீடுபட்ட ஒரு டாக்டரின் வேஷந்தரித்த தனால் பால்முனி என்ற ஒரு நடி கருக்கு சினிமாப் பிரபஞ்சத்தில் பெரும் புகழ் கிடைத்திருக்கிறது.

பால்முனி தன் நடிப்புத் திற மையினால் சித்தரித்த டாக்டர், பாஸ்டியர் என்பவராவார். இவர்வைத்திய உலகில் பல முக் கிய விஷயங்களைக் கண்டுபிடித் திருக்கிறார். புத்தகங்களைப் படித்து இந்த டாக்டருடைய ஜீவிய வரலாறுகளைத்தெரிந்து கொள்வதைவிடத் தெளிவாகப் பால்முனி நடித்துள்ள திரைச் சித்திரம் மூலம் இவரைப் பற்றி அறிந்துகொள்வது எளிது.

திரைக் கதைகளில் தோன் றும் டாக்டர்கள் பெரும்பாலும் நல்ல மனிதர்கள் அல்ல. வைத் தியத் துறையில் உழைத்தது

மூலம் போதிய பயன் பெருததாலோ அல்லது வேறு காரணங்களாலோ கொலை முதலிய கோர குற்றங்கள் புரிந்து, துயரத்திலாழ்ந்தவர்களாகும். திரைக் கதைகளில் வரும் டாக்டர்கள். இம்மாதிரி மனிதர்களின் கதைகள் சினிமாப் படங்களாகத் தோன்றி அநேக லக்ஷமக்களுக்கு மகிழ்ச்சியளிக்கின்றன.

இந்த வேஷங்களைத் தரிக்கும் நடிகர்களுக்குப் புகழ் சுலபமாகக் கிடைக்கிறது. இந் நாட்டுப் பழக்கங்களுக்கும் பண்பாடுகளுக்கும் இதெல்லாம் மிகவும் விந்தையாகத் தோன்றினலும் மேல்நாட்டு வாழ்க்கையில் இதெல்லாம் ஒரு முக்கிய அம்சமாக விளங்குகிறது.

———

★ வீட்டுக்குள் பாம்பு ★

வீட்டில் செல்லப் பிராணிகளாக, நாய், பூனை முதலிய வற்றை வளர்ப்பது போல் சிலர் பாம்புகளை வளர்க்கிறார்கள். லண்டன் நகரத்தில் இம்மாதிரி பாம்புகளை வளர்ப்பவர்கள் ஒரு சங்கத்தைக் கூட அமைத்திருக்கிறார்களாம்! சிலர் மலைப்பாம்புகளை வியாபாரத்திற்காக வளர்க்கிறார்கள். ஒரு மலைப் பாம்பு 90 முட்டைகள்வரை இடுகிறதாம். மூன்றடி நீளமுள்ள பாம்புக்கு அதிகமான விலை உண்டு.

ஆனல் இந்தப் பாம்புகளை வளர்ப்பது மிகவும் சிரமமான காரியம். இன்புளூயென்ஸா, ஜுரமும் சுவாசநோயும் பாம்புகளை அதி சீக்கிரத்தில் பாதிக்குமாம். இம்மாதிரி பீடித்தால் சிறு குழந்தைகளைப் படுக்கையில் கம்பளிகளால் நன்ருகப் போற்றி தேகத்தை குளிர் பாதிக்காமல் வைத்துக்கொள்வது போன்று பாம்புகளையும் பாதுகாப்பது தான் நோயுற்ற பாம்புகளை ஆரோக்கியமடையச் செய்யும் வழியாகும்.

பாம்புக்கு கண்பார்வை மிகக் குறைவு. கேட்கும் சக்தியுங் கிடையாது. பாம்புக்கு மோப்பசக்தியும், நாக்கினுடைய உணர்ச்சியும் அசாதாரணமாக இருப்பதால் மேற்கூறிய குறைகள் நிவர்த்தியாகிவிடுகின்றன.

பழமையில் மோகம்

‘ குச்சாமாமா ’

முன்னுரை:—விஞ்ஞானம் பெருகி வருகிறது. அத்துடன் அஞ்ஞானமுந்தான் வளர்ந்து வருகிறது. நாகரிகமென்றும், ‘பரிஷ்காரம்’ என்றும், முன்னேற்றம் என்றும், புதுமை பெருகிவருகிறது. பண்பு மனிதத் தன்மை என்னும் பழமை தேய்ந்து வருகிறது. எல்லோரும் இன்புற்றிருத்தல் வேண்டும் என்னும் பரந்த மனப்பான்மை தேயவும், தன்னல புத்தி வளரவும் காரணமாயுள்ள மனப்போக்கை முன்னேற்ற மென்றழைத்தல் ‘முன்னேற்றம்’ என்னுஞ் சொல்லின் பொருளுக்கே முரணாகுமன்றோ? நல்லதை ஏற்றலும் அஃதல் லாததைத் தவிர்த்தலும் அவசியஞ் செய்யத் தக்கது தான். ஆனால் ஒரு விஷயத்தை நல்லதா கெட்டதா என்று சீர்தூக்கிப் பாராமலேயே தொன்றுதொட்டு வழி வழியாய் வந்த பழக்கம் என்னும் ஒரே காரணத்தால் அது முற்போக் கிற்கு முரணான பழக்கம் எனத் தீர்மானித்திடில் நமக்குக் கிடைத்துள்ள அறிவை சீர்தூக்கிப் பார்க்கும் துறையில் உபயோகிக்கவே மறுப்பதாகுமன்றோ ? ‘பழமை’ என்பதற் காகவே வெறுப்பதும் ‘புதுமை’ என்பதற்காகவே ஏற்பதும் அறிவாளிகளுக்கேற்றதல்ல. பழமையிலுள்ள பண்புமிக்க சில பழக்கங்களையும் புதுமையிலுள்ள விரும்பத்தகாத சில விபரீதமான விளைவுகளையும் சீர்தூக்கிப் பார்க்கும் வகை யில் சில சம்பவங்களை இங்கு பார்ப்போம்.

குறிப்பு :— இச்சம்பவங்கள் நிஜமாக நடந்தவை என்றோ இவற்றுள் வரும் பாத்திரங்களும் பெயர்களும் உண்மை யானவை என்றோ வாசகர்கள் எண்ணவேண்டாமென்று கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

I

சேஷாத்திரி அய்யங்கார் தன் மகள் லக்ஷ்மிக்குக் கலி யாணஞ்செய்ய நிச்சயித்தார். உள்ளூரிலேயே சிலரும், பந்துக் களிலேயேசிலரும், ஜாதகங்களை மாற்றிக்கொண்டனர். வதூவரர் களின் ஜாதகங்களில் பொருத்த மிருந்தது. ஆயின் வரதக்ஷிணை விஷயத்தில் சேஷாத்திரி அய் யங்காருக்கும் பிள்ளை வீட்டா ருக்கும் மனப் பொருத்தமிருக்க வில்லை. ஆகவே அய்யங்கார் முனைந்து தேடி வெளியிடத்தில் ஒரு பையனை ஏற்பாடு செய்து முடித்தார். வரதக்ஷிணை, சீர் வகைகளெல்லாம் தீர்மானிக்கப் பட்டன. கலியாணத்தைத் தம்மூரிலேயே வைத்துக்

கொண்டால் ஊராரின் கலகத்தால் இடைஞ்சல் விளையலாமென அஞ்சிய அய்யங்கார் காஞ்சியில் கலியாணத்தை நடத்துவதாக ஏற்பாடு செய்தார்.

கடலில் போக்குவரத்து ஸாதனமாகக் கப்பல்களும், பாலைவனத்தில் ஒட்டகமும் பிரஸித்தமானவை. அவ்வாறே வட ஆற்காடு ஜில்லாவில் இரவு வண்டிகளென்னும் கூண்டுகட்டிய காளை வண்டிகள் பெயர் போனவை. வண்டியின் கட்டுக்கோப்பும், கூண்டுகளின் உறுதியும், இடத்தின் விஸ்தாரமும் அவற்றைக் கோட்டைகளென்றும் கப்பல்களென்றும் சொல்லத் தக்கனவாயிருக்கும்.

இவ்வகையான வண்டிகள் நான்கில் ஸகல ஸாமான்கள், ஸாமக்கிரிகள், சகிதம் மனுஷ்யாள் யாவரும், கலியாணத்திற்கு நான்கு நாள் முன்னதாகவே காஞ்சிக்கு வந்து சேர்ந்தனர். காஞ்சியில் ஸ்ரீமான் அய்யங்காருக்கு நெருங்கிய பந்துக்கள் சிலரிருந்தனர். அவர்களின் உதவியால் விஷ்ணு காஞ்சியில் ஸந்நிதித் தெருவில் எதிரெதிரான இரண்டு வீடுகளைக் கல்யாணத்திற்காக ஏற்பாடு செய்து இரண்டு வீட்டையும் அணைத்தாற்போல் தெருவின் முழு அகலத்தையும் அடைத்தாற்போல் பந்தல் போடப்பட்டது. சமையற்காரர், மேளக்காரன், புஷ்பக்காரன், கடைக்காரன், கக்ஷிக்காரன் என்று பலபேருக்கும் வேண்டிய ஏற்பாடுகள் யாவுஞ் செய்து 'அட்வான்ஸ்கள்' கொடுக்கப்பட்டன.

கலியாணத்திற்கு இரண்டு தினங்கள் முன்பு பிள்ளை வீட்டாரும் வந்து அவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஜாகையில் குடிபுகுந்தனர். அன்றையபொழுதெல்லாம் ஸ்ரீமான் அய்யங்காரும், இன்னும் அவரைச் சார்ந்தோரும் பிள்ளை வீட்டாரை, ஓடி ஓடி குசலங்கள் விசாரித்தனர்; தேவையான வசதிகளையுஞ் செய்து கொடுத்தனர்.

அன்று ஸாயங்காலம் கல்யாணப் பிள்ளை ஏதோ குறைகள் சொல்வதாக ஒரு முணமுணப்புப் பரவலாயிற்று. விஷயத்தை விசாரித்ததில் பையன் ரூபாய் 2000/- ரொக்கமாக வரதக்ஷிணை கொடுத்தாலன்றி கலியாணத்திற்குச் சம்மதிக்கமாட்டானென்பது தெரிய வந்தது. யாரெல்லாமோ, ஏதெல்லாமோ சமாதானங்கள் சொல்லி ஒரு சமரஸத்தை ஏற்படுத்த முயன்றனர். எல்லாம் வீணாயிற்று.

வித்வான் விஜயராகவாச்சாரி ஸ்வாமி காஞ்சியில் எல்லோருடைய மரியாதைக்கும் பாத்திரமானவர். நல்ல பண்டிதர்; அனுஷ்டாதாவுங்கூட. காஞ்சீ மண்டலத்திலேயே ஸ்ரீ வைஷ்ணவருள் ஒருவரும் ஸ்வாமிகளின் சொல்லுக்கு மறுத்துச் சொன்னார் என்றபேச்சே கிடையாது. ஸ்வாமிகளோ பரம

ஏழை. உஞ்சவிருத்தி செய்ய வில்லை. தமது பிதிரார்ஜிதமான நஞ்சை புஞ்சை நான்கு ஏகர் நிலத்தில் விளைந்ததைக்கொண்டு வாழ்க்கையை நடத்தி வந்தார். கடன், யாசகம் ஒன்றுமே கிடையாது. அதனுலும் அவருக்கு மதிப்பதிகம்.

வேதசாஸ்திரங்களை அவரிடங் கற்று வெளியூர்களிற் சென்று பண்டிதர்களாகவும் புரோகிதர்களாகவும் ஜீவிதத்தை நடத்தியும் திரவியத்தைத் திரட்டியும் வாழ்ந்து வந்த அவருடைய சிஷ்யர்கள் பலருண்டு. தான் பெற்ற மக்களெனவே அவர்கள் யாவரையும் வாத்ஸல்ய பாவத்தில் தான் ஸ்வாமிகள் நேசித்தார். ஆனல் ஒருவரிட மிருந்தேனும் ஒரு சல்லிக் காசையோ வேறு உதவி யையோ ஏற்றவரே யல்ல. ஸ்வாமிகளுக்கும் அவர் தேவிக்கும் சஷ்டாஷ்டகம். கோபம், தாபம், சண்டை, பூசல் யாவும் அவர் தேவிகயான கோதையம்மாளோடு சரி. ஸ்வாமிகள் ஒரு புன்சிரிப்பால் யாவற்றையும் மழுப்பிவிடுவர். குடும்ப நிர்வாகத்தின் சிக்கன திட்டத்தை யொட்டி தான் மனஸ்தாபங்கள் ஏற்படுமே யன்றி வேறு எந்த வகையிலு மிருது. காஞ்சி மண்டலத்தில் யாவரும் இவர்களை ஒரு லக்ஷிய தம்பதிகளாகவே புகழ்ந்து வந்தனர். சுவாமிகளுக்கு வயது சுமார் 65 இருக்கும். மூன்று பெண் குழந்தைகளும் மூன்று ஆண் குழந்தைகளுமிருந்தனர். பெண்களில் இருவருக்கும் பிள்ளை யொருவனுக்குங் கலியாணமாகி இருந்தது.

பெண்களுக்குக் கலியாணஞ் செய்த காலத்தில் கன்யாசுல்கம் என்று பெண்ணுக்குத்தான் பணங்கொடுத்துக் கொள்வது வழக்கமாய் இருந்தது. ஏன்! சுவாமிகளே ரூபாய் 425/- ஐக் கன்யாசுல்கமாகக் கொடுத்து தான் கோதையம்மாளை மணந்தார். ஆயினும் தன் குமாரிகளை ஒரு காலணுவும் கன்யாசுல்கம் வாங்காமலே இரண்டு பிரஹ்ம சாரிகளுக்குக் கன்னிகாதானஞ் செய்ததை ஒரு பெரிய அசுவமேதயாகஞ் செய்ததாகவே அக்காலத்தில் எல்லோரும் புகழ்ந்னர்.

பிள்ளையின் கலியாண காலத்தில் புதுமை ஓரளவு சமூகத்தில் புகுந்திருந்தது. கன்யாசுல்கக் கிரமம் நீங்கிவிட்டது. வரதக்ஷிணை க்கிரமம் இங்கொன்றும் அங்கொன்றுமாகத் தோன்றத் தொடங்கியகாலம். பிள்ளையோ "பத்து ரூபாய் பரீக்ஷையில் தேறி" இருந்தான். அப்பொழுது தான் அவனுக்குக் கலியாணம் நிச்சயமாயிற்று. ஒருக்கால் ஏதாவது வரதக்ஷிணையாகக் கொடுக்கவேண்டுமென ஸ்வாமி கேட்டிருக்கலாம். ஆனல் கேட்கவே இல்லை.

"நம் குலம் விளங்க ஒரு கன்னிகையை தானம் செய்கிருரே ஸம்பந்தி. இதற்கு என்ன தான் பிரதிபலன் செய்ய முடி

யும்'' என்று தான் தனது வறுமைக்காக வருந்தினர் ஸ்வாமிகள்.

கோதையம்மையாருக்கோ—பத்துப் பன்னிரெண்டு வருஷங்களுக்கு முன் தன் பெண்களின் கலியாண காலத்தில் கன்யா சுல்கம் வாங்காதது ஒரு குறை. மறுபடியும் இப்பொழுது பிள்ளையின் கலியாண காலத்தில் வரதக்ஷிணை வாங்காதது மற்றொரு குறை. ஸ்வாமிகளோ தேவியின் சீற்றத்தை ஒரு சாந்தமான புன்முறுவலால் மழுப்பிவிட்டார். இந்தப் பிள்ளை போலீஸ் இலாகாவில் ஸப்-இன்ஸ்பெக்டர் உத்தியோகம் பார்த்து வந்தான். இவன் தம்பியின் படிப்பிற்காக ஓரளவு உதவி புரியவும், தம்பியும் கல்லூரிப் படிப்பை ஓரளவில் நிறுத்திக்கொண்டு வைத்தியக் கல்லூரியில் சேர வகை தேடிக்கொண்டிருந்தான். அதற்கடுத்து ஒரு பெண்ணும், பிறகு ஒரு பிள்ளையும் ஸ்வாமிகளின் ஜங்கம சொத்துக்களைச் சேர்ந்தவை. இந் நிலையிலிருந்த ஆச்சார்ய ஸ்வாமிகளை சேஷாத்ரி அய்யங்கார் வரவழைத்து முரண்படுத்தும் தன் வருங்கால மருமகனைச் சமாதானப் படுத்த ஏற்பாடு செய்தார்.

ஆச்சார்ய ஸ்வாமிகள் வந்தார். கல்யாண வைபவத்தைச் சேர்ந்த இரண்டு வர்க்கத்தினரும் திரண்டு வந்த கூட்டத்திலமர்ந்தார். மற்றும் அவ்வூரிலிருந்த பல பெரியோர்களுங்கூட "தாம் சொல்லிய சமாதானங்களை ஏற்காத பிள்ளையை ஆச்சார்ய ஸ்வாமிகள் எப்படி சமாதானப்படுத்துகிறரோ பார்ப்போம்'' என்ற ஆவலால் உந்தப்பட்டு வந்திருந்தனர்.

ஆச்சார்ய ஸ்வாமிகள் முதலில் விஷயத்தையெல்லாம் இருபாலரிடமும் விசாரித்தறிந்தார். பிறகு கலியாணப் பிள்ளையைப் பார்த்துச் சில விவரங்களையுந் தெரிந்துகொண்டு, பிள்ளையின் பெற்றோரைப் பார்த்து சாந்தமான முறையில் சொன்னர்.

"கலியாண விஷயமாக சகல திட்டங்களும் உங்களுடன் ஆலோசித்துத் தீர்மானித்தவைகளே. அத்திட்டங்களை நிறைவேற்றவேண்டிய சகல ஏற்பாடுகளையுஞ் செய்துகொண்டு தன் ஊரைவிட்டு இங்கு வந்துள்ளார் சேஷாத்ரி அய்யங்கார். இப்போது திடீரென்று ஒரு புதிய திட்டம், அதுவும் இரண்டாயிரம் ரூபாய் ரொக்கமாகக் கொடுத்தாகவேண்டும் என்பதை எப்படி ஏற்க முடியும். வந்தவிடத்தில் பணத்தைச் சரிக்கட்ட என்ன ஏற்பாடு செய்ய வியலும்? அதுவும் இன்றைய பொழுதிற்குள் எப்படி இயலும்? மறுபடி நாளைய தினம் மற்றுமொரு திட்டத்தையும் வகுத்திடிலோ? இதற்கெல்லாம் ஒரு குறிப்பிட்ட நிலையில் 'இதுவரையில் தான்' என்று நிச்சயிக்கப்பட்ட திட்டத்தோடு நிற்பதுதான் முறையாகும். இதை 'உங்கள் பையனுக்கு விளங்கும்படி நீங்

கள் தான் எடுத்துச் சொல்ல வேண்டும்'' என்றார். பிள்ளையின் தந்தையோ, ''தாங்கள் சொல்வது, நியாயந்தான். நினைத்து நினைத்து ஒவ்வொரு புதிய திட்டத்தை வகுத்தால் நிர்வகிப்பது யாருக்குமே கஷ்டந்தான். என்னாலானவரையில் மகனுக்கு எடுத்துரைத்தேன். அவன் ஏற்றுக்கொள்ளவில்லை. பணம் ரொக்கமாகக் கிடைத்தே யாகவேணுமென்று பிடிவாதஞ் செய்கிறான். நீங்களே ஒருதரஞ் சொல்லிப் பாருங்கள்'' என்றார்.

ஆச்சாரியர் பையனை ''நீ என்ன சொல்கிறாயப்பா?'' என்று கேட்டார்.

பையன்: நேற்றைய தினம் முதல் இதுவரையில் நான் சொல்லவேண்டியதை நூற்றுக்கு மேல்பட்ட தரஞ்சொல்லியாயிற்று. ஒவ்வொருவரிடமும் பலதரஞ் சொல்லியாயிற்று; ஒருவர் தவறாமல் எல்லோரிடமுஞ் சொல்லியாயிற்று.

ஆச்சாரியர்: என்னிடமும் ஒருதரஞ் சொல்லப்பா. ஆனால் இது வரையில் நான் சொல்லிக் கொண்டுவந்ததையும் நீ கேட்டுக்கொண்டிருந்தாயே. அதையுஞ் சீர்தூக்கிப் பார்த்து உன் பதிலைச் சொல்லப்பா.

பையன்: நீங்களல்ல. யார் எது சொன்னாலுஞ் சரி, எத்தனை தரஞ் சொன்னாலுஞ் சரி, எனக்கு ரொக்கமாக ரூபாய் இரண்டாயிரம் கொடுத்தாக வேண்டும். அவ்வளவுதான். மேலும்... என்று நிறுத்தினான்.

ஆச்சாரியர்: மேலும்...?

பையன்: மேலும் பெண்ணும் ஒன்றும் ரம்பை யல்ல. மாநிறமானவள் தான். அதிலும் கர்நாடகம். இந்தக் கரம்பைத் திருத்திப் பண்படுத்த வருங் காலத்தில் என்ன கஷ்டங்கள் படவிருக்கிறதோ!

ஆச்சாரியர்: பண்ணைப்பற்றி கவலைப்படவேண்டாமப்பா. நம் நாட்டில் பண்ணிற்குப் பஞ்சமே இல்லை. மேல் நாட்டாரின் மனப்போக்குடன் உலகத்தையும் நம் சமூகத்தையும் பார்க்கிறாய். ரூபாய் இரண்டாயிரம் கொடுத்தால் பெண் ரம்பையாகி விடுவாளா? அவள் கர்நாடகம் நவநாகரிகமாக மாறிவிடுமா?

பையன்: அதைப் பற்றி நான் இப்போது விசாரப்படப் போவதில்லை. எனக்கு இப்போது ரூபாய் இரண்டாயிரம் ரொக்கமாகத் தரவேண்டுமென்பது தான், நான் சொல்வது.

ஆச்சாரியர்: இப்போது இரண்டாயிரந் தரவேணுமென்கிறாயாக்கும்! சரி, எதற்காக இந்தத் தொகை வேணுமப்பா? குறிப்பாகவும் திட்டமாகவும் இரண்டே ஆயிரமென்பதால் கேட்கிறேன்.

பையன்: நேற்றையதினம் பத்திரிகையில் வெளியான செய்தியில் நான் எஸ். எஸ். எல். ஸி. தேறிவிட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. எனக்குத் தொடர்ந்து பி. ஏ. வரையில் படிக்கவேணுமென்று ஆசை,

நாலு வருஷம் படித்தாக வேண்டும். சென்னையில் தான் படித்தாகவேண்டும். தரித்திரபக்ஷம் வருஷத்திற்கு ஐநூறு ரூபாயாவது இல்லாமல் படிக்க முடியாது. நாலு வருஷப் படிப்பிற்காக இரண்டாயிரம் ரூபாய் வேண்டும் அவ்வளவு தான்.

ஆச்சாரியர் : படிக்கவேண்டுமென்பது நியாயமான அபிலாஷை தான். அதற்காக உதவி வேண்டுமென்பதும் நியாயந் தான். இவ்வுதவியை அப்பாவும் கொடுக்கலாம். சேஷாத்ரியும் கொடுக்கலாம். இருவரும் ஒரே மாதிரியான சிரத்தை காண்பிக்கவேண்டியது முறையாகும். உன் அப்பாவுக்கு வசதிப்படுமோ என்னமோ! அது எப்படியானாலும் சேஷாத்ரி கொஞ்சம் சிரமப்பட்டாவது உதவலாம். ஆனால் இதில் ஒரு விஷயம்.

பையன் : என்ன...?

ஆச்சாரியர் : ஒவ்வொருவருஷமாகத்தானே நாலு வருஷங்களும் கழியவேண்டும். பிறகு ஒவ்வொரு மாஸமாகத்தானே ஒவ்வொரு வருஷமும் கழியவேண்டும். ஒரே மாஸத்திலோ ஒரே தினத்திலோ நாலு வருஷங்களும் கழியாதே! செலவும் மாதவாரியாகத்தானே செய்யவேண்டியது? ஆகவே மாதாமாதம் உன் படிப்பிற்காக ரூபாய் நாற்பது அனுப்பும்படி சேஷாத்ரியை ஒப்புக்கொள்ளச் சொல்கிறேன். அல்லது வருஷவாரியில் ரூபாய் ஐநூறு வீதம் பெற்றுக்கொள். முதல் வருஷத்திய ரூபாயை இப்பொழுதே பெற்றுக்கொள், கலியாணம் சுபமாக நடக்கட்டும்.

பையன் : அதெல்லாம் முடியாது. மாதா மாதம் இவர் கையை எதிர்பார்த்துக்கொண்டும்—வருஷவாரியில் இவர் முன் பல்லிளித்துக்கொண்டுமிருப்பது ஸாத்தியமில்லை. சமயத்திற்குப் பணம் வராது. குறிப்பிட்ட தொகையும் வந்து சேராது. படிப்பில் முனைந்திடும் போது இவ்வகை விசாரங்களும் சிரமங்களும் பட்டுக்கொண்டிருக்க முடியாது. "நிலம் விளையவில்லை; நானென்ன செய்யலாம்? பணமில்லை" என்பாரானால்? அப்போது மத்யஸ்தர் வந்தா பணங்கொடுக்கப் போகிறார்? இதெல்லாமேன்? இப்போது பணம் ரொக்கமாக வேண்டும்.

கூட்டத்திலிருந்தவர்களுக்கெல்லாம் கடுங்கோபமுண்டாயிற்று. ஆனால் ஆச்சாரியர்தமது இயல்பையொட்டி ஒரு சாந்தமான புன்முறுவலால் நிலைமையைச் சமாளித்தார்.

ஆச்சாரியர் : நீ சொல்வதும் கவனிக்கத்தக்கது தான். சேஷாத்திரிக்கு நிலம் விளையாமல் போகலாம். பணம் புரளக் கஷ்டமேற்படலாம். இப்பொழுதே மொத்தமாக நாலு வருஷப் படிப்பின் செலவிற்காகவும் ரூபாய் இரண்டாயிரத்தையும் கொடுத்துவிட்டால் ஒரு நிச்சயமேற்படும். ஆனால், நீ இப்

போதுகேட்பது இரண்டாயிரம். ஒருக்கால் இந்தப் பணம்மூன்று வருஷங்களிலேயே செலவாகி விட்டாலோ? அல்லது நான்கு வருஷத்தில் முடியவேண்டிய படிப்பு மற்றும் ஒரு வருஷமோ இரண்டு வருஷமோ நீடித்திட வேண்டிவந்தாலோ? நீ இப்போதைக்குத்தானே இந்த இரண்டாயிரங் கேட்கிறாய்...

பையன்: இடைமறித்து...... இவ்வித கேள்விகளுக்கெல்லாம் நான் கை கட்டிக்கொண்டு பதில் சொல்லிக்கொண்டிருக்கக் கடமைப் பட்டவனல்ல. நாலு வருஷத்தில் படிப்பு முடியுமென்பதும், இரண்டாயிரத்தில் முடித்துக்கொள்ளலாமென்பதும் மனுஷ்ய திட்டத்தில் ஒரு நம்பிக்கைதான். அது தவறிவிட்டால்... படிப்பை விட்டுவிட முடியுமா? அந்நேரத்திற்குத் தேவையான உதவியளித்துப் படிப்பைப் பூர்த்தி செய்துதானகவேண்டும்.

ஆச்சாரியர்: ஆகவே நான் சொல்வது, நீ படித்துக் கொண்டே வா. குந்தகமில்லாமல் படிப்பு முன்னேறிவரும் வரையில் மாதாந்தரமாகவோ, வருஷாந்தரமாகவோசேஷாத்ரி உனக்கு உதவிபுரிந்து வருவான்.

பையன்: அதுதான் முடியாது, முடியாது, முடியாது என்கிறேனே.

கூட்டத்திலிருந்தவர்களுக்கு இதைப் பொறுக்கமுடியவில்லை. ஆச்சாரியரையும் மீறியாராவது ஏதாவது பேசிவிடுவரோ என்றுந் தோன்றலாயிற்று. மறுபடியும் ஆச்சாரியர் பழைய புன்சிரிப்பினுலேயே நிலவரத்தைச் சமாளித்தார்.

ஆச்சாரியார்: வரதக்ஷிணை என்னும் பழக்கம் நம்முள் இப்போது தான் ஆரம்பமாகியிருக்கிறது. ஆண் மகவைப் பெறுவதும் பெண் மகவைப் பெறுவதும் மனிதன் யத்னத்திலில்லை. பெண்ணைகப் பெற்றுவிட்டதற்காக இவ்வகையான அபராதத்தை விதிப்பது நேர்மையாகாது.

பையன்: இடைமறித்து, ஆணுய்ப் பிறந்தவருக்குத் தகப்பனின் சொத்தில் சமபங்கு உண்டு. பெண்ணுய்ப் பிறந்தால் பிதிரார்ஜித சொத்தின் ஒரு உரிமையுங் கிடையாதே. அதனுல் வரதக்ஷிணை மூலமாக வாவது ஒரு பாகத்தை ஏன் உதவக்கூடாது?

ஆச்சாரியார்: சிரித்தார். அப்பா எனக்கு வயது 65 ஆகிறது. 25 வருஷங்களுக்கு முன் எங்கள் குடும்பத்தில் சொத்துப் பிரிவினை நடந்தது. நாங்கள் அண்ணன் தம்பிகள் ஐவர். எங்களுடன் பிறந்த சகோதரிகள் மூவர். எங்கள் குடும்பச்சொத்து எட்டு பாகமாகத்தான் பிரிக்கப் பட்டு எல்லோருக்கும் இது சமபாகமாகக் கொடுக்கப்பட்டது. இது உலகமறிந்த விஷயம். இங்குள்ளவர் எல்லோருக்குந் தெரியும். ஆனல் இதை நாங்கள் செயல் முறையில் புகுத்தியது

ஒரு புதுமை. குறிப்பிட்ட தேதியில் பிதிரார்ஜிதத்தைப் பங்கிட்டால் பிள்ளைகளுக்கு தலைக்கு என்ன வருமென்று பார்த்தோம். தலைக்குச் சுமார் 1000, அல்லது 1200 ரூபாய் அன்றைய மதிப்புப்படி வருமென்று கண்டோம். மற்றும் அன்றைய தேதியில் குடும்பத்தில் கொஞ்சம் பொதுக் கடனும் இருந்தது. நாங்கள் அண்ணன் தம்பிகள் ஆலோசித்து ஒரு முடிவிற்கு வந்தோம். எங்கள் சகோதரிகள் ஒவ்வொருவருக்கும் சுமார் 1000 ரூபாய் பெருமானமுள்ள ஆஸ்தியை முதலில் நாங்கள் யாவருமாக முயன்று ஈட்டிக் கொடுத்துவிட்டுப் பிறகு சொத்துக்களைப் பிள்ளைகள் பங்கிட்டுக் கொள்வதென்றும் குடும்பக் கடனை அப்போது பிள்ளைகளே தம்முள் பங்கிட்டுக் கொள்வதென்றும் முடிவு செய்துகொண்டோம். எப்படியோ கஷ்டப்பட்டு ஒரு மூன்று நான்கு வருஷங்களுக்குள் இதைப் பூர்த்தி செய்தோம். அண்ணன் தம்பிகள் ஐவருள் கடைசி இருவர் இளைஞர்கள். ஆகவே பாக்கி மூன்று பிள்ளைகள் தான் அதிக கஷ்டத்தைச் சுமந்து எங்கள் சகோதரிகளுக்கு மேற் சொன்னவகையில் உதவி புரிய நேர்ந்தது. இதைப் பூர்த்தி செய்த பின்னர் தான் பிள்ளைகளாகிய நாங்கள் பங்கு பிரித்துக்கொண்டோம். இவ்வுண்மையை யறிந்தவர் பலர் இங்கே இப்போது இருக்கிறார்கள். என்னால் அனுசரிக்க முடியாததைப் பிறர் அனுசரிக்க வேண்டுமென்று உபதேசிக்கும் வீணனல்ல நான்.

பையன்: இந்த ஹைதர் காலக் கதையை இப்போது கேட்க யாருக்கு ரஸிக்கும். உங்கள் மகன் பாச்சா இருக்கிறானே! வைத்தியக் கல்லூரியில் சேர திட்டமிட்டுக்கொண்டிருக்கிறானமே! இதுவரையில் அவன் படிப்பிற்காக உங்களுக்கு எவ்வளவு செலவாகி இருக்கும்! நாளை வரதக்ஷிணைப் பேச்சே எடுக்காமல் அவனுக்குக் கலியாணம் செய்வீர்களாக்கும்?

கூட்டத்திலிருந்தவர்களுக்குக் கோபமும் வியப்பும் கலந்து பொங்கலாயிற்று. அவர்களில் ஒருவராவது ஆச்சாரியரை, ஒருவர் இவ்வளவுமுனைந்து எதிர்த்து வாதித்ததை அறியமாட்டார்கள். இப்பொழுதும் ஆச்சாரியர் ஒரு புன்முறுவலாலேயே நிலைமையைச் சமாளித்தார்.

ஆச்சாரியர்: நியாயமான கேள்வி. பெரியவனானாலுஞ் சிறியவனானாலும் நியாயத்திற்குக் கட்டுப்பட்டு பதில் சொல்லத்தான் வேண்டும். அப்பா குழந்தாய்! நீ தெரிந்துகொள்வதற்காகமட்டுமல்ல. இன்னும் உன் வாயிலாகப் பலருந் தெரிந்து கொள்ளவேண்டுமென உன் கேள்விகளுக்குப் பதில் சொல்கிறேன். என் மகன் பார்த்தஸாரதி தனது 9—வது வயதில் பட்டணஞ் சென்றவன். இன்றைக்குப் 11 வருஷமாகப் பட்டணத்தில் படித்து வருகிறான். அவன் படிப்பிற்காக நான் ஒன்

றுஞ் செலவழிக்கவில்லே. இத்தனே வருஷ காலத்தில் எல்லாமுஞ் சேர்ந்து ஒரு நூறு ரூபாய் உதவி இருப்பேனே என்னவோ! அவ்வளவு தான். அதிலும் பெரும் பாகம் சென்ற இரண்டு வருஷங்களில் தான் உதவியுள்ளேன். பெரியவன் ஏதோ உத்தியோகஞ்செய்து உதவி வருவதால் இவ்வளவு இளேய பிள்ளேக்கு என்னுல் உதவமுடிந்தது. இல்லாவிடின் இதுவும் முடியாது.

பார்த்தஸாரதி ஒரு பெருமாள் கோவிலில் ஒரு காவி மண்டபத்தை வாசஸ்தலமாக்கிக்கொண்டு இத்தனே நாளும் கழித்திருக்கிறுன். பட்டாசாரியருக்குப் பரிசாரகனுகவும், மடைப்பள்ளியில் சுற்றுக் காரியஞ் செய்தும் அவர்கள் கருணேயால் வயிற்றைக் கழுவிக் கொண்டு பள்ளியிலும் படித்து வந்திருக்கிறுன். இதனிடையில் எப்படியோ ஓரிடத்தில் சிறுபிள்ளேகளுக்கு வீட்டில் பாடஞ் சொல்லிக்கொடுத்து கொஞ்சம் ஊதியமும் பெற்றுத் தன் செலவைப் பார்த்துக்கொள்கிறுன். ஸேவார்த்திகளாய் கோவிலுக்குத் தவருமல் வருவோரும் இவனுக்கு கால், அரைக்கால் என்று உதவுவார்களாம். லீவு நாட்களில் அதிகம் முனேந்து ஊழியஞ்செய்து ஊதியம் பெற்றுப் புத்தகம், துணிமணிச் செலவுகளேச் சரிக்கட்டிக் கொள்கிறுன். நான் சொல்வது முற்றும் உண்மையப்பா. ஓரக்ஷரம் கூட பொய்யில்லே. பாச்சுவின் படிப்பிற்காக நான் என்ன செலவழித்துவிட்டேன்? மற்றொரு விஷயமுஞ் சொல்லிவிடுகிறேன். என் குடும்பத்திலும் இதுவரையில் சில கலியாணங்கள் நடந்திருக்கின்றன. கன்யாசுல்கம், வரதக்ஷிணே என்ற பேச்சே கிடையாது. இதற்கும் இங்குள்ளவரில் பலருஞ் சாக்ஷி கூறுவர்.

பையன்: நீங்கள் சில லக்ஷியங்களேப் பேசலாம். நாளே உங்கள் பாச்சுவின் கலியாணத்தின் போது எப்படி நடக்கிறதோ பார்க்கலாமே.

ஆச்சாரியர்: அதில் உனக்குச் சந்தேகமே வேண்டாம். வரதக்ஷிணேப் பேச்சே இருக்காது.

பையன்: ஆமாம் ஆமாம், நீங்கள் உங்கள் லக்ஷியத்தைப் பேசிக்கொண்டிருக்கலாம். பாச்சு கேட்பானே என்னவோ!

ஆச்சாரியர்: என் மகன்...... என் உயர்ந்த லக்ஷியங்களேப் புறக்கணிக்கமாட்டான். இது எனது நம்பிக்கை.

பையன்: அப்படியாளுல் சேஷாத்ரி அய்யங்கார் பெண்ணே உங்கள் மகனுக்கே கலியாணஞ் செய்துகொள்ளுங்களேன். வரதக்ஷிணேயும் சேஷாத்ரி அய்யங்காருக்கு மிச்சமாகும். என்னேடு வாதாடுவதும் வேண்டாமே.

ஆச்சாரியர் திகைத்துப்போனுர். ஒரு நிமிஷம் கண்ணேக் கெட்டியாக மூடிக்கொண்டு

ஏதோ யோசித்தார். கூட்டத்தில் ஒருவராவது மூச்சுவிடவில்லை. எல்லோருமே பிரமிப்பினால் பேச்சற்று நின்றனர். அந்த ஒரு நிமிஷமும் ஒரு யுகம் போலவிருந்தது. ஆச்சாரியர் கண்ணை விழித்தார். குழுமி இருந்த அனைவரையும் ஒரு முறை பார்த்தார். சேஷாத்ரி அய்யங்காரின் முகத்தையும் பார்த்தார். நிசப்தம் நிலவி நின்றது. ஒருவர் முகத்திலாவது ஈயாடவில்லை. கலியாணப் பிள்ளையின் தந்தையின் முகத்தைப் பார்த்தார். பேயறைந்த தோற்றந்தான் முகத்திலிருந்தது. கலியாணப் பிள்ளையையுந் தலையோடு கால் பார்த்தார். கலியாணப் பிள்ளையாக்கும் சடங்கு காலையில் நடைபெற்றதன் அறிகுறிகள்—(காலில் நலங்கும்—மங்கள ஸ்நானமும் கழிந்திருந்தது) காணப்பட்டன. ஒருதரம் கனைத்தார். பிறகு தாழ்ந்த ஆனால் அழுத்தமான உச்சரிப்பில், "ஸ்ரீராமச்சந்திரனின் ஸங்கல்பம் அவ்வாறிருப்பின் இங்குள்ள பெரியோர்களின் அனுக்கிரஹத்தையும் முன்னிட்டு அப்படியே யாகட்டும்" என்று சொன்னார்.

ஏற்கெனவே இருந்த பிரமிப்பு எல்லோரிடமும் அதிகமாயிற்று. கூட்டம் முழுவதுமே சித்திர மோவென அசைவற்று நின்றது. நான் வருகிறேன்.

"சேஷாத்திரி! மேற்கொண்டு தெரிவிக்கவேண்டிய விசேஷங்களிருப்பின் சொல்லியனுப்பு" என்று சொல்லிவிட்டு மிடுக்குடன் எழுந்து வந்துவிட்டார்.

பலாத்காரமாகப் புகுந்திட முயலும் புதுமை; விடமாட்டேன், போகமாட்டேன் என்று ஒட்டிக்கொண்டிருக்கும் பழமை; இவ்விரண்டும் ஒன்றோடொன்று போட்டியிட்டு மல்யுத்தம் புரியுங் காலத்திய ஸம்பவம் இது. இந்த யுத்தத்தில் வென்றது எது?

(தொடரும்)

அமெரிக்கத் திரையும் இந்தியப் படங்கள் குறையும்

•

இந்திய சினிமாப் படங்களுக்கு அமெரிக்காவில் ஆதரவேயில்லை. இவற்றை எவரும் சீண்டவும் மாட்டார்கள். எத்தனையோ தடவை அமெரிக்காவில் பொதுமக்களுக்கிடையே இந்தியப் படங்களுக்குச் செல்வாக்கு ஏற்பட முயற்சித்தும் இதுவரை ஒரு பயனுமில்லை. வடநாட்டுப் பிரபல சினிமா நக்ஷத்திரமும், பட முதலாளியுமான ராஜ்கபூர் சமீபத்தில் இந்திய சினிமாப் படங்களுக்கு நேர்ந்துள்ள இக்கதியைப் பற்றி, இந்தியர்களுக்குள்ள ஆத்திரத்தை வெளியிட்டார்.

சில வருஷங்களுக்கு முன்பு அமெரிக்காவில் விநியோகஞ் செய்வதற்கென்றே 'ராஜ்நர்த்தகி' என்ற ஆங்கில படத்தைப் பம்பாயில் தயாரித்தார்கள். அமெரிக்காவில் 'விநியோகம்' என்ற பேச்சு இந்தியாவில் தானிருந்தது. அந்தப் படம் அமெரிக்காவிற்குச் சென்றதைப் பற்றியோ, அங்கு விநியோகமானதைப் பற்றியோ, அமெரிக்க மக்கள் அந்தப் படத்தைப் பார்த்து, இந்தியப் படங்களைப் பற்றி என்ன அபிப்பிராயங்கள் கொண்டார்களென்பதைப் பற்றியோ ஒரு தகவலுங் கிடையாது. இந்தப் படம் அமெரிக்காவில் விநியோகமே யாகவில்லையென்றுகூடக் கூறலாம்.

இந்தியப் படங்களுக்கு அமெரிக்காவில் செல்வாக்கில்லாவிட்டாலும் ருஷ்யா, இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய அயல்நாடுகளில் ஓரளவு இவற்றிற்குப் புகழ் கிட்டியுள்ளது. ருஷ்யாவில் இந்தியப் படங்களைத் திரையிட்ட இடங்களிலெல்லாம் இவற்றிற்கு அமோக வரவேற்பு கிடைத்ததாம். தொடர்ந்து இந்தியப் படங்கள் ருஷ்யாவிலும் ருஷ்யப் படங்கள் இந்தியாவிலும் திரையிட வேண்டுமென்ற அநேக ருஷ்ய பிரபலஸ்தர்கள் விரும்புகிறார்களாம்.

அமெரிக்கர்கள் இந்தியப் படங்கள் மீது இவ்வாறு வெறுப்புக் கொண்டது பற்றித் தீவிரமான ஆராய்ச்சி நடந்து வருகிறது. சமீபத்தில் இந்தியாவிற்கு விஜயஞ் செய்த ஒரு அமெரிக்கப் பட முதலாளியிடம் இதைக் குறித்துப் பத்திரிகை நிருபர்கள் சம்பாஷித்தார்கள். ''எங்கள் படங்களை உங்கள் நாட்டில் ஏன் வரவேற்பதில்லை'' என்று கேட்டதற்கு அவர்

"உங்கள் நாட்டிலிருந்து அமெரிக்காவிற்கு வரவேற்புக்குரிய படங்கள் வருவதில்லை" என்று பதில் கூறினாராம். ஜப்பானியப்படங்கள், இத்தாலியப் படங்கள், பிரெஞ்சுப் படங்கள் முதலியவற்றிற்கு அமெரிக்காவில் நல்ல கிராக்கி இருக்கிறது. இந்தியப் படங்களுக்கு மட்டுந்தான் கிராக்கியே கிடையாது.

இந்தியாவின் மீதோ இந்தியாவில் தயாராகும் படங்களின் மீதோ அமெரிக்கர்களுக்கு வெறுப்பே கிடையாது. அமெரிக்கத் தியேட்டர்காரர்களுக்கு வசூலில் மட்டுந்தான் குறி; எந்தப் படத்தைத் திரையிட்டால் ஏராளமாகப் பணம் வசூலாகுமோ அந்தப் படத்தை அவர்கள் எப்போதும் வரவேற்பார்கள். வசூலைப் பற்றிச் சந்தேகமான படங்களுக்கு அருகில் கூட இவர்கள் செல்லமாட்டார்கள்.

இந்தியப் படங்களை அமெரிக்கர்கள் வரவேற்காமலிருப்பதனால் அமெரிக்கப் படங்களை இந்நாட்டிலிருந்து பகிஷ்கரிக்க வேண்டுமென்று ஒரு கிளர்ச்சி இந்தியாவில் சமீபத்தில் தொடங்கியுள்ளது.

அமெரிக்கப் பட முதலாளிகள் தங்கள் படங்களை உலகமெங்கும் விநியோகஞ் செய்கிறார்கள். வேறு ராஜ்யங்களிலிருந்து அமெரிக்கப் பட முதலாளிகளுக்குக் கிடைக்கும் வருமானத்தில் மிகச் சிறிய பங்கு ஆகும், இந்தியாவிலிருந்து அமெரிக்கப் படங்களுக்குக் கிடைக்கும் வருமானம். அதனால் நம் நாட்டிலிருந்து அமெரிக்கப் படங்களைப் பகிஷ்கரிப்பதை அமெரிக்கர்கள் ஒரு பெரும் துரதிருஷ்டமாகக் கருதமாட்டார்கள்.

அமெரிக்காவில் பெரும்பாலோர் சினிமாப் பிரியர்கள். அமெரிக்காவிலுள்ள தியேட்டர்களின் எண்ணிக்கை உலகத்திலேயே மிகவும் அதிகமானதாகும். அதனால் அமெரிக்காவில் தங்கள் படங்களை விநியோகஞ் செய்வதற்கு ஒரு வாய்ப்புக் கிடைப்பதை அநேகராஜ்யங்களிலுள்ள பட முதலாளிகள் ஒரு பெரும் பாக்கியமாகவே கருதுகிறார்கள்.

அமெரிக்கர்கள் விரும்பக் கூடிய படங்கள் எந்த ரகத்தைச் சேர்ந்ததென்பதை ஆராய்ந்துகொண்டு அந்த ரகப் படங்களை தயாரிக்க முயற்சிப்பதே நலமாகும். அந்தத் துறையிலும் இந்தியப் பட முதலாளிகள் ஆராய்ச்சி அவ்வளவாகச் செய்யவில்லை. நம் நாட்டுப் பட முதலாளிகள் அமெரிக்கர்களின் உதவியில்லாமலேயே தயாரித்ததாகும். 'ராஜ் நர்த்தகி' என்ற படம். அமெரிக்கர்கள் இங்கு வந்து தயாரித்த படமான 'நதி' (River) என்ற படத்திற்கும் அமெரிக்காவில் செல்வாக்கில்லை.

அமெரிக்கர்களும் இந்தியர்களும் கூட்டுறவுடன் தயாரிக்

கும் படங்கள் தான் அமெரிக்காவில் புகழடையலாம். இந்த முறையில் சமீபத்தில் தயாரித்த ஒரு படமாகும், 'காடு'(Jungle). இதற்கு என்ன வரவேற்பு கிடைக்குமென்பது காலப்போக்கில் தான் தெரியும். 'பவானி ஜங்ஷன்' என்ற படத்தை அமெரிக்க இந்திய கூட்டுறவு முறையில் தயாரிப்பதற்கு அமெரிக்கப் பட முதலாளிகள் முயன்றார்கள். ஆனால் இந்தியப் பட முதலாளிகளும் இந்திய நடிகர்களும் இதற்கு இணங்கவில்லை. அதனால் இப்படத்தை பாக்கிஸ்தானில் தயாரிக்கிறார்கள்.

அமெரிக்க நடிகர்கள் அமெரிக்கப் பட நிபுணர்கள் முதலியோர்ரின் உதவியோடும், கண்காணிப்பிலும் இந்தியப் பட முதலாளிகளும் நடிகர்களும் சேர்ந்து இந்தியப் படங்களைத் தயாரிப்பது, இந்தியப் படங்களுக்கு உலகத்திலேயே ஒரு உன்னத ஸ்தானமடைவதற்குள்ள வழியைத் தெரிந்துகொள்ள மார்க்கமாகும். இம்மாதிரிப் படங்களைத் தயாரிப்பதற்கு சந்தர்ப்பங்களைச் சிருஷ்டித்துக் கொள்ளாமல் அமெரிக்காவில் இந்தியப் படங்களுக்கு வரவேற்பில்லை யென்று குறை கூறுவதில் என்ன பயன்?

★ இரு குடங்கள் ★

ஆண்டவன் மனிதனை உலகத்திற்கு அனுப்பியபோது இரண்டு குடங்களைக் கொடுத்தார். ஒன்றில் ஸத்தியம் நிரம்பியிருந்தது. மற்றொன்றில் சுகம் நிரம்பியிருந்தது. இரண்டு குடங்களையும் கொடுக்கும் சமயத்தில் கடவுள், "நீ உலகிற்குச் சென்று கொண்டிருக்கிறாய். ஸத்தியத்தை உன் உயிரைக் கொடுத்தாவது காப்பாற்றவேண்டும். சுகத்தை எப்பொழுதும் செலவழித்துக் கொண்டே யிருக்கவேண்டும். எடுத்துக் கொள். வலது கையிலுள்ள குடத்தில் ஸத்தியம் உள்ளது. இடது கையில் உள்ள குடத்தில் சுகம் இருக்கிறது. மறந்து விடாதே" என்றார்.

களைத்துப்போன மனிதனுக்கு வழியில் தூக்கம் வந்தது. சைத்தான் இந்த சமயத்தைத் தான் எதிர்நோக்கிக் கொண்டிருந்தது. அது இடது கையிலுள்ள குடத்தை வலது கையிலும் வலது கையிலுள்ள குடத்தை இடது கையிலும் மாற்றி வைத்துவிட்டது. முடிவு இதுதான். உலகத்திற்கு வந்த மனிதன் உயிரைக் கொடுத்தாவது சுகத்தை காப்பாற்றத் தொடங்கினான். ஸத்தியத்தை தயவின்றி வீசி எறியத் தொடங்கினான்.

—கலீல் ஜிப்ரான்

தொல்லை தரும் தேனீ

நைரோபி என்ற இடத்தில் ஒரு ஸ்திரீ தேனீக்கூட்டிலிருந்து தேனை எடுத்தபோது ஆயிரக் கணக்கான தேனீக்கள் அவளைச் சூழ்ந்து பாய்ந்தன. அவள் மூர்ச்சையடைந்து விழுந்தாள். பின்பு ஆஸ்பத்திரியில் சோதித்ததில் அவள் மீது ஆயிரம் இடங்களில் தேனீக் கடிகள் பட்டிருப்பதாகத் தெரிந்தது. அவள் மயக்கத்திலிருந்து திரும்பி எழுந்திராமலே இறந்து விட்டாள்.

தேனீக்கள் கூடுகட்டிக் கொண்டிருக்கும்போது மனிதர்களைக் கடிப்பதில்லை. ஆனல் அளவற்ற குறும்புகள் புரிகின்றன.

ஜெர்மனியில் கிழவர் ஒருவர் ஒரு தினம் காலை ஒரு பொதுப் பூங்காவிலுள்ள பெஞ்சிமீது படுத்து உறங்கிக்கொண்டிருந்தார். திடீரென தேனீக்களின் ரீங்காரம் அவரை எழுப்பியது. அவர் தாடியில் தேனீக்கள் கூடு கட்ட ஆரம்பித்திருந்தது. வியப்பும், திகிலுமடைந்தாலும் இவர் குதித்துக் கூத்தாடாமல் மிகவும் அமைதியாக தீயணைக்கும் படையினரை அழைக்க ஏற்பாடு செய்தார். தீயணைக்கும் படையினர் வந்து கிழவரின் தாடியில் குடியேறிய தேனீக் கும்பலை அகற்றினர்.

எதிர்பாராத இடங்களிலெல்லாம் தேனீ கூடுகட்டி விடும்.

இங்கிலாந்தில் ஒரு தபால் பெட்டியில் தேனீ கூடுகட்டி விட்டதாம். ஒரு நாள் தபால்காரன் கடிதங்களை பெட்டியிலிருந்து எடுக்கப் போகும்போது பெட்டியில் ஏராளமான தேனீக்களிருந்தன.

லண்டன் நகரத்தில் ஒரு மரத்தின் கிளையில் கட்டியிருந்த தேனீக் கூடு டிராம் வண்டிகள் செல்லும் பாதையில் விழுந்து விட்டது. ஒரு தேனீ வளர்க்கும் நிபுணர் வந்து தேனீக்களை அகற்றி கூட்டிலடைக்கும் வரை சகலவிதமான போக்கு வரத்தும் தடைப்பட்டது.

மற்ருெரு இடத்தில் ஒரு மாதாகோயிலில் தேனீக்கள் கூடு கட்டியிருந்தன. பாதிரி கூறும் வேத வாக்கியங்களும், பாடல்களும் பிரார்த்தனைக்கு வந்தவர்களுக்கு கேட்க முடியாத அளவிற்குத் தேனீக்கள் ரீங்காரஞ் செய்துகொண்டிருந்தன.

ஒரு இடத்தில் மணிக் கூண்டிலிருந்த கடிகாரம் ஐம்பது வருஷங்களாகச் சரியாக மணி காட்டிக்கொண்டிருந்தது. காலப் போக்கில் கடிகாரமே நின்று விட்டது. சோதித்துப் பார்த்ததில் மணிக் கூண்டில் தேனீக்கள் கூடு கட்டியிருப்பதாகவும் அதனல் கடிகாரம் ஓடுவது நின்றுவிட்டதாகவும் தெரிந்தது. தேனீக்களைக் கொளுத்தித்தான் கடிகாரத்திலிருந்து வெளியேற்றவேண்டி வந்தது.

CONSULT

K. M. S. Press
1/C-17, Dinroze Estate
Mount Road, Madras - 2

FOR ALL HIGH CLASS
JOB & BOOK WORK
IN ENGLISH & TAMIL

மண வாழ்க்கை

●

"கணகண" வென்று காலிங்பெல் கொடுத்த ஓசையில் கண் விழித்தாள் ஊர்மிளா.

படுக்கையைவிட்டெழுந்து கதவைத் திறந்ததும் அவள் தோழி ஸரஸா உள்ளே வந்துகொண்டே "அட ராமா! இப்பத்தான் எழுந்திருக்கிறாயா?" என்றுகேட்டாள்.

"ஆமாம் ஒன்பதுக்குத் தானே சங்கக் கூட்டம் ஆரம்பம்..."

"அது சரி, இவ்வளவு நாழியா தூங்குவது? தினமும் இவ்வளவு நேரத்திற்குத் தான் எழுந்திருப்பாயா......என்ன?"

"உனக்கென்னடியம்மா... கேலி செய்யாமல்."

"எனக்கொன்றுமில்லை தான். ஆனால் உனக்கு ஏதோ கவலை, பாவம்; இரவெல்லாம் தூக்கமில்லை. அவ்வளவு தானே...?"

"விடிந்தும், விடியாததுமாக தர்க்கத்துக்கு வந்துவிட்டாயாக்கும்; இரு பல் தேய்த்துவிட்டு வருகிறேன்" என்று கீழே சென்றாள் ஊர்மிளா.

அவளுடைய மேஜையருகில் ஸரஸாவுக்கு மேஜை மீது பிரித்துக்கிடந்த கடிதமொன்று தென்பட்டது. கடிதத்தில் அவள் தகப்பனுருடைய கையெழுத்து தெரிகிறது. தன் மகள் கவலைப் படக்கூடியதாக என்ன எழுதியிருப்பார் என்று யோசித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

இரண்டு கைகளிலும் இரண்டு காபி டம்ளர்களுடன் தன் அறைக்கு வந்தாள் ஊர்மிளா. "அப்பா கடிதமெழுதி இருக்கிறார் போலிருக்கிறதே" என்றாள் ஸரஸா.

"ஆமாம் இந்தா," என்று ஸரஸாவின் கையில் கொடுத்தாள் ஊர்மிளா.

"அகத்தில் இப்பொழுது தானே சாப்பிட்டுவிட்டு வருகிறேன்."

"சரிதான், சாப்பிடு," என்றாள் ஊர்மிளா.

காபியை உறிஞ்சிக் கொண்டே "என்ன எழுதி இருக்கிறார் உன் தகப்பனார்" என்று கேட்டாள் ஸரஸா.

சாவதானமாக கையிலிருந்த காபியை சாப்பிட்டு

விட்டு "எனக்கு வரன் பார்த்து கலியாணம் நிச்சயம் செய்திருக்கிறாராம். லீவு விட்டதும் புறப்பட்டு வரும்படி எனக்கும், இதே சங்கதியை அத்தைக்கும் எழுதி அவளையும் புறப்பட்டு வரச் சொல்லி எழுதி இருக்கிறார்.

"அச்சா! அப்படிச் சொல்லு! மணவாழ்க்கையின் இன்ப நினைவுகளால் இராத் தூக்கமில்லை உனக்கு! உசிதமான ஏற்பாடு. இவ்வருஷம் பி.டி.யில் நீ தேறிவிடுவாய் என்பதென்னவோ அவருக்கு நிச்சயமாகத் தெரியும். தக்க வரனைப் பார்த்துக் கொடுத்துவிட்டால் பிறகு மாப்பிள்ளை இஷ்டப்பட்டால் உத்யோகம் பார்ப்பது. இஷ்டமில்லையானல்—ஹாய்யாகுடித்தனம் பண்ணுகிறது என்கிற ஏற்பாட்டில் எல்லாம் நிச்சயித்து உனக்குஎழுதி இருக்கிறார். கல்யாணச் சாப்பாடு இருக்கிறது."

"ஸரஸா, நிறுத்து, அதோடு, போதும்" என்று வெறுப்புடன் இடைமறித்தாள், ஊர்மிளா.

"ஏன் ஊர்மிளா" என்று திகைத்துப்போய் கேட்டாள் ஸரஸா. கையில் குழப்பிய எண்ணெயைத் தலையில் தடவியபடி "என் சம்மதம், இஷ்டம் எதுவுமே எதிர்பாராமல் கலியாணம் செய்து விடுவது என்ற உத்தேசமிருந்தால்—ஏழு வயதிலேயே கன்னிகாதானம் செய்து புண்ணியம் சம்பாதித்திருக்கலாம். படிப்புக்குச் செலவான பணமும் மிச்சப்பட்டிருக்கும்..."

"அது இருக்கட்டும். வரன் உனக்குப் பிடிக்கவில்லையா?" என்று ஸரஸா கேட்டதுதான் தாமதம்—நேற்றிலிருந்து அவள் மனசில் குமுறிக்கொண்டிருந்த ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது—"மறுபடியும் பாரேன், 'உனக்கு கல்யாணம், புறப்பட்டு வா'' என்கிறதைத் தவிர இந்தக் கடிதத்தில் வேறு ஏதாவது தகவல் இருக்கிறதா பார்" என்று கடிதத்தை எடுத்து ஸரஸாவின் மடியில் போட்டுவிட்டு தலையை வாரிப் பின்னிக் கொண்டாள்.

படித்து முடித்த கடிதத்தைப் பேசாமல் மேஜைமீது வைத்தாள் ஸரஸா. "இப்பொழுது என்ன சொல்லுகிறாய்?" என்று ஊர்மிளா கேட்டாள்.

ஸரஸா மிகவும் அமைதியான குரலில் "சுருக்கமாக இருக்கிறது கடிதம். நேரில்

எல்லாம் பேசிக்கொள்ளலாம் என்ற யோசனையில் எழுதி இருக்கிறார் என்று தோன்றுகிறது. நல்ல வரனைத்தான் பார்த்திருப்பார்கள்....''

"உன் உத்தேசமாக்கும்!''

"ஏன் உனக்கு இவ்வளவு ஆத்திரம் வருகிறது ஊர்மிளா? பெற்றோர்கள் நமக்கு நல்லதைத்தான் செய்வார்கள். புறப்பட்டுப் போனால் எல்லாம் தெரிகிறது. இதற்காக ஏனிப்படி வேதனைப்படுகிறாய் என்பது எனக்கு அர்த்தமாகவில்லை.''

"ஏன் ஆகும்? உனக்கு ஒன்றுமே தெரியாமல், உன் இஷ்டத்தை அறியாமல் 'இத்தனும் தேதி உனக்குக் கலியாணம். புறப்பட்டு வந்து சேர்' என்று உன் தகப்பனார் உனக்குக் கடிதம் எழுதினால்தான் உனக்கு இதன்பொருள் அர்த்தமாகும். அதுவரையில் ஆகாது, என்று படபடப்புடன் கூறிவிட்டு சரி, புறப்படு, நாழியாகிறது'' என்று ஸ்லிப்பரை மாட்டிக் கொண்டு புறப்பட்டாள் ஊர்மிளா.

ஸரஸாவும் எழுந்தாள்.

இருவருமாக கலாசாலையில் நடக்கவிருந்த வருஷாந்திர விழா மண்டபத்திற்குச் சென்றார்கள்.

2

மண்டபத்தில் குழுமி இருந்த மாணவமாணவிகள் தலைவர் வரவுக்காக காத்துக்கொண்டிருந்தார்கள்.

மாணவர்பக்கத்திலிருந்து இரு குரல்கள் எழுந்தன. "மணி ஒன்பதுக்கு ஆரம்பம்னு ஐம்பமாக அறிக்கை. பத்தாகப்போகிறது! ஜனங்களைக் காக்கப்போடுவதில் நம்மவர்கள் ராஜா, வருஷமுமாச்சு. விழாவுமாச்சு. நான் போகிறேண்டா ஐம்பு, நீ வேண்டுமானால் இருந்துவிட்டு வா,'' என்று சலித்துக்கொண்டு எழுந்தான் ஜயகுமார்.

"உச், இருடா, வீட்டில் போய் என்ன செய்யப் போகிறாய்?''

"நான் வீட்டுக்கே போகப் போவதில்லை...''

"பின்?''

"இப்படி நீள கால்போகிற இடத்திற்கு...''

"ஐயையோ, இதென்னது, வெடிகுண்டுமாதிரி இருக்கிறதே பேச்சு.''

"ஆமாம்.''

VISIT

OUR

RETAIL SHOW ROOM

FOR ALL YOUR

DRESS REQUIREMENTS

★

ALL ITEMS MANUFACTURED

FROM

SELECTED B & C MILLS FABRICS

★

OMER BROS

106-107, Moore Market,

MADRAS - 3

பெரிய குடும்பங்களுக்கும் சிக்கன சுலப உதவி

இளநரை தடுத்து கூந்தல் செழிக்க

காஷ்மீர்-குஸும்

ஊறின உங்கள் எண்ணெயை உபயோகிக்க

நஞ்சன்கூடு-பல்பொடி

மேலும்

54, அரிய குடும்ப மருந்துகள் விவரப் புத்தகத்திற்கு எழுதுக

யுனைடெட் கன்ஸர்ன் 54, பந்தர் தெரு, சென்னை - 1.

"திடீரென்று விரக்தி ஏற்படக்காரணம்?" என்று கிண்டலாகக் கேட்டான் ஜம்பு.

"முன்னறி தெய்வமான என் பெற்றோர்கள் என் அறிவு முன்னேற்றத்திற்கு அணைபோடப் போகிறார்களாம்......"

"அப்படியென்றால்?"

"நல்ல இடத்திலிருந்து, ரம்பை மாதிரி, கிளி மாதிரி, மகாரூபவதியாக, குணவதியாக, குலவதியாக இன்னும் என்னென்ன மகிமைகளெல்லாமோ உள்ள ஒரு பெண் அகப்பட்டிருக்கிறாளாம்..."

"சபாஷ்! புது மாப்பிள்ளை என்று சொல்லு!"

"ஆமாம். மாப்பிள்ளைத் தோழனாகவா. வேஷ்டி வாங்கிக் கொள்ளலாம்..." என்று எரிச்சலுடன் கூறினான் ஜயகுமார்.

ஸ்திரீகளின் பக்கமிருந்த ஸரஸா ஊர்மிளாவை நிமிண்டினாள். அவள் திரும்பியதும், "மனோராஜ்யம் பிறகு ஆகட்டும். இந்த வரிசை முதலில் ஒரு வேடிக்கை. கவனியாதது போல கவனி. கைப்பிடி மூங்கிலருகில் நகர்ந்தோமானால் நன்றாகக் கேட்கும்." என்று ஆண்களுக்கும், பெண்களுக்கும் நடுவில் தடுத்திருக்கும் மூங்கில் ஓரமாக நகர்ந்து உட்கார்ந்தார்கள்.

"ஏண்டா குமார், விவாகத்தில் உனக்கு வெறுப்பு. பெண் பிடிக்கவில்லையா?"

"விடிய விடிய ராமாயணம் கேட்டுவிட்டு சீதைக்கு ராமர் சித்தப்பா என்ற கதையாக பெண், மயில் குயில், ரம்பை, என்கிறதெல்லாம் அவர்கள் விமரிசனம் தான் என்கிறேன். மறுபடி கேட்கிறாயே, எனக்கு அவள் ஏற்றவள் என்பதை அவர்களே தீர்மானித்துக் கொண்டு, 'எல்லாம் திருப்தியாக இருக்கிறது. நீ வந்ததும் லக்னப்பத்திரிகை வாங்க வேண்டியதுதான்,' என்று அப்பா அவர்கள் எழுதி இருக்கிறார்கள். எனது வருங்கால வாழ்க்கையில்—நான் அடையப் போகும் மனைவியை நான் பார்த்து சம்மதிக்கவேண்டும் என்ற யோசனையே யில்லாமல் அவர்கள் நிச்சயித்துள்ள கலியாணத்தைப் பண்ணிக் கொள்வதைவிட ஸந்நியாசம் வாங்கிக்கொள்ளலாம், ஹாய்யாக என்று என் தீர்மானம்......"

"அது இருக்கட்டும். பெண் எந்த ஊர் என்ன என்ற சங்கதி..."

"ஏய் உனக்குச் சொல்லி விளங்க வைக்கக்கூடிய சுவாரசியம் இப்போது என் மனசிலில்லே. என்னைக் கேட்காமல் அவர்கள் செய்திருக்கும் இந்த ஏற்பாட்டால் நேரும் அனர்த்தத்தைக் கண்டு இனி 'பெற்றோர்' என்று இருப்பவர்கள் ஜாக்ரதையடையும் வகையில் இந்தப் பழிதீர்க்க வேண்டும் என்பது என் முடிவு," என்று கூறிஎழுந்த மாண வனைக் கண்டாள் ஊர்மிளா.

செல்வந்தருடைய மகன் என்பதை ஜயகுமாரின் தோற்றம் பறையடித்துக் கொண்டிருந்தது. நல்ல ஆக்ருதி. யௌவனப் பூரிப்புள்ள கட்டுமஸ்தான உடல். நல்ல சிவப்பு. களைபொருந்திய முகம். 'ராஜவடிவு' என்பார்களே அதுமாதிரியான இந்த வாலிபனுக்கும் நம் போன்ற பெற்றோர்களா வாய்த்தார்கள்? ஆமாம். அவர் சொன்னது அவ்வளவும் உண்மை. மணமக்கள் சம்மதம் பெருத விவாகம் என்பது எவ்வளவு அநாகரிகம்? அதனால்தான் அவர் மனசு அவ்வளவு கொந்தளிக்கிறது. அவர் ஆண் மகன். ஸந்நியாசியாகி ஊர் ஊராகத் திரியலாம். நான், என் கதி? அட கடவுளே, இதற்கா பெண் பிறந்தேன்?.

"என்ன ஊர்மிளா, கல்லாகச் சமைந்துவிட்டாய்" என்று ஊர்மிளாவைத் தட்டினள் ஸரஸா. அவள் திரும்பியதும் "இவ்வளவு தூரம் பட படத்த அந்த வாலிபன் யாரென்று தெரியுமா உனக்கு ஊர்மிளா?"

"யாரா இருந்தால் என்ன? என் போன்ற இக்கட்டில் அகப்பட்டுக் கொண்டு திண்டாடும் மனிதன், அந்த மட்டில் தெரிகிறது. பாவம், பரிதாபப் படவேண்டிய விஷயம்."

ஊர்மிளா சொன்னதைக் கேட்ட ஸரஸா கல கலவென்று சிரித்தாள். அவள் தன்னை பிரமையுடன் பார்ப்பதைக் கண்டு, "அவர் என் மாமா பிள்ளை, 'தனக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது?' என்பதே கணக்குத் தெரியாத அளவுக்கு அவ்வளவு ஆஸ்தி இருக்கிறது அவர்களுக்கு. பெரிய பிள்ளைக்கு விவாகமாகி குழந்தை இருக்கிறது. இவர் சின்னப்பிள்ளை. என் மாமாவும், அம்மாமியும் தங்கமான சுபாவம். பிள்ளை

திரட்டு

சிறந்த மாதாந்தர கட்டுரைப் பொக்கிஷம்

1/C-17, டின்ரோஸ் எஸ்டேட்,
மவுண்ட் ரோடு, சென்னை

★ பல ஆங்கிலப் பத்திரிகைகளின் சுவையான சார மிக்க விஷயங்கள்

★ 50-க்கு மேலான அரசியல், சமூக, விஞ்ஞான கட்டுரைகள், உண்மைக் கதைகள் !

★ பலதரப்பட்ட விஷயங்கள் !

★ பொது மக்களுக்கும் மாணவர்களுக்கும் இன்றியமையாதது.

★ சிறந்த முறையில் நிறைந்த பக்கங்களைக் கொண்டது.

தனிப்பிரதி விலை எட்டணாதான்.
வருட சந்தா ரூ. 6

மானேஜர், **திரட்டு**
1/C-17, டின்ரோஸ் எஸ்டேட்,
மவுண்ட் ரோடு, சென்னை-2.

அன்புடையீர்,

திரட்டுக்கு நான் சந்தாதாரராகச் சேர விரும்புகிறேன். இத்துடன் ஒரு வருட/அரை வருட சந்தா ரூ............அனுப்பியுள்ளேன். பத்திரிகையை அடியிற்கண்ட விலாஸத்திற்கு அனுப்பி வையுங்கள்.

வணக்கம்.

விலாஸம் :—

....

....

....

களும் அதேமாதிரிதான். அவருக்கு வாழ்க்கைபடக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். பார்த்தாயல்லவா அவரை?'' என்று கேட்டாள் ஸரஸா.

ஊர்மிளா மனசு எங்கோ போய் அலைந்துகொண்டிருந்தது. தன் நினைவை தன்னிடமிராமலிருந்ததால் ஸரஸா கூறிய தொன்றையுமே அவள் காதில் ஏறவில்லை.

3

வண்டி புறப்படுவதற்கு அரைமணி நேரமிருந்தது. அந்த அரைமணி நேரமும் தவியாகத் தவித்து போனார்கள் புது மணம் புரிந்த தம்பதிகள்.

அரைமணி நேரமும் ஆமைபோல ஊர்ந்து நகர்ந்ததும் வண்டி 'விஸில்' கொடுத்துவிட்டுக் கிளம்பியது, "போய்வருகிறேன் அப்பா, போய் வருகிறேன், அண்ணா, போயிட்டு வரேண்டா கண்ணா'' என்று தன் பிறந்தகத்தார்களிடம் விடைபெற்றுக்கொண்டாள் ஊர்மிளா. ஜயகுமாரும் மலர்முகத்துடன் அனைவரிடமும் விடைபெற்றுக் கொண்டான். வண்டி பிளாட்பாரத்தைக் கடந்ததும் "அப்பாடா,'' என்று இடத்தில் உட்கார்ந்தான் ஜயகுமார்.

"கோட்டைக் கழற்றுங்கள், இருக்கம் பிழிகிறது'' என்று பொத்தான்களைக் கழற்றினாள் ஊர்மிளா.

அவள் கழற்றிக் கொடுத்த கோட்டை வாங்கி பெட்டிமீது வைத்துவிட்டு நிமிர்ந்த ஊர்மிளாவின் கைகளைப் பற்றி எடுத்தான் ஜயகுமார். பிறகு அவள் முகத்தையும், தன் ஷர்ட் பாக்கெட்டிலிருந்த பர்ஸைத் திறந்து அதிலிருந்த புகைப் படத்தையும் எடுத்து ஒத்திட்டுப் பார்த்தான்.

ஊர்மிளாவின் மனமும் மெய்யும் நாணத்தாலும், இன்ப உணர்வாலும் வெடவெடத்தன. தலையைக் குனிந்துகொண்டு உட்கார்ந்திருந்தாள்.

"என்ன ஊர்மிளா, புது மணப் பெண்ணாக, லட்சணமாக, தலையைக் குனிந்துகொண்டு உட்கார்ந்திருக்கிறாய்!''

சிறுநகையுடன் மெல்ல முகத்தை உயர்த்தினாள் ஊர்மிளா.

அவளையே பார்த்துக் கொண்டு களிபொங்க "வாஸ்தவமாகச் சொல்லு

கிறேன் ஊர்மிளா, ஊருக்கு வந்து அம்மாவைப் பார்த்து விட்டு ஓடிவிடவேண்டும் என்ற வைராக்கியத்தோடு இருந்த என்னை—இந்த உன் முகம்—மயங்கச் செய்து என் சித்த உறுதியைத் தளர்த்திவிட்டது. நீயல்லாது வேறு எந்த சக்தியும் என்னைத் தடுத்திருக்க முடியாது. த்ஸொ, த்ஸொ, ஹாய்யாக ஊர் ஊராகத் திரிய திட்டம்போட்டவனை உன் பார்வையை வீசிப் பிடித்துவிட்டாய்!......"

"நீங்கள் மாத்திரம் என்னவாம்? நீங்களும் தான் என் சித்த உறுதியை மாயமாக்கிவிட்டு அங்கே உட்கார்ந்து ஆட்சிபுரியவில்லையாக்கும்! என்னைக் கேட்காமல் வரன் பார்த்து நிச்சயித்து எழுதினபோது எனக்கு வந்தகோபம்......" என்று மேலே பேச இயலாமல் திணறி நிறுத்தினாள் ஊர்மிளா.

ஜயகுமார் கொட்டையாக விழித்து "சரியாப்போச்சு, உம், முழுக்கச் சொல்லு"

"நிஜம்தான், அப்பொழுது என் பெற்றோர்களை நான் வைத வசவு, அடடா, பாபம்"

"இப்பொழுது?"

"தங்களைத் தேடி என்னை ஒப்படைத்ததற்குப் பொன்னாலொரு கோயில் சமைத்துக் கும்பிட வேண்டும் என்று தோன்றுகிறது" என்றாள் ஊர்மிளா.

"பொன்னாலொரு கோயில்கட்டி உன் பெற்றோர்களை வைப்பதோடு—ஸரஸாவுக்கு என்றென்றும் நம் மனக்கோயிலில் இடம் கொடுத்து அவளை நினைவு கூர்ந்து நன்றி செலுத்த வேண்டும் ஊர்மிளா..."

"ஸரஸாவா...எந்த ஸரஸா......?"

"உன் தோழி, என் அத்தை பெண். அவளில்லாவிடில் இன்று நம் தாம்பத்யமேது ஊர்மிளா?"

ஊர்மிளாவின் கண்களில் நீர் துளித்தது. அவள் மனம் இன்பத் துடிப்பில் சிக்குண்டு உதறிக்கொண்டிருந்ததால் அவளால் பேச இயலவில்லை.

"அவள் உன்னைப்பற்றி என் பெற்றோர்களுக்கு எழுதி இதை முடித்து வைத்து நம்மை வாழ்வித்த கன்னிகை அவள்?" என்று உரைத்தவாறு ஊர்மிளாவின் உதறும் கைகளைப் பற்றிக்கொண்டான் ஜயகுமார்.

—கு. ப. சேது அம்மாள்.

A. K. SHERIFF

5/7, KALMANDAPAM ROAD

Rayapuram, Madras-13.

MANUFACTURER OF

READY MADE DRESSES

FIRST - CLASS CLOTHES

MADE OF SUPERIOR B. & C.

MATERIALS

Prices Moderate

C. C. JACOB

Tailors, Dress Manufacturers & Contractors
(Specialists in B & C Quality Textile Dresses)

10, Thambu Chetty St., Madras - 1.

★

For Readymade garments fabricated
out of India's best clothing materials
—B. & C. Mills cloths

Contact us for your requirements.

விசித்திரமான விவாகச் சடங்குகள்

விவாகம் நடத்துவதற்கான பிரத்தியேக சம்பிரதாயங்களும், சடங்குகளும் எங்நாட்டிலும் வழக்கிலிருக்கின்றன. ஆனால், இவை ஒவ்வொன்றும் வித்தியாசமானவை. பல மதத்தவர் வாழும் பாரதநாட்டில் வெவ்வேறு பகுதிகளில் ஒன்றுக்கொன்று சிறிதும் ஒற்றுமையிராத வெவ்வேறு பழக்கங்கள் இருந்து வருகின்றன. மலைஜாதியினரும், பழங்குடி மக்களும் அநுசரிக்கும் திருமண முறைகள் விந்தையானவை, சுவாரஸ்யமூட்டுபவை. இன்றைய விஞ்ஞான மறுமலர்ச்சி யுகத்தில் அவற்றை எவ்விதத்திலும் நாகரிகமானவை யென்று கருதமுடியாது. குலு, நேபாளி, நீலகிரி மலைகளில் வாழும் பழங்குடிகள் ஆகியோரிடையே இப்போதும் பலபதிகளை வரிக்கும் பழக்கம் இருந்து வருகிறது.

இம்முறைப்படி குடும்பத்தின் மூத்த சகோதரன் ஒருத்தியை முதலில் மணந்துகொள்கிறான். பின்பு அவனுடைய மற்ற சகோதரர்கள் வரிசைக்கிரமாக அவளை மனைவியாகக் கொள்கின்றனர். அப்பெண்ணின் மூலமாக உண்டாகும் குழந்தைகளையும் அவ்வாறே பங்கு போட்டுக் கொள்கின்றனர்.

நம் நாட்டின் சில பகுதிகளில், ஒரு விசித்திரமான மணமுறை உள்ளது. இதில் ஆச்சரியமென்ன வெனில் படித்தோரிடையேயும் இது வழக்கத்திலிருந்து வருகிறது. பிள்ளை விவாகம் செய்துகொள்ளப் புறப்படும் போது, அவன் தாய் கிணற்றில் காலை விட்டுக் கொண்டு உட்கார்ந்து விடுகிறாள். அவள் மகன் மணஞ் செய்துகொண்டு ஒரு பெண்ணை அழைத்து வரப் போகிறான்; எத்தனையோ வருஷங்களாக அவள் நாட்டாண்மை செலுத்திவந்த வீட்டில் இனி அவளை ஒருவரும் மதிக்கமாட்டார்கள் என்ற குறையை யாவருக்கும் பறை சாற்றுவதே இதன் கருத்து. ஆனால் பிள்ளை வந்து தாயிடம், 'அவ்வாறு ஒருக்காலும் நடவாது' என்று வாக்குறுதி அளிப்பான்; அவ்வீட்டில் எப்போதும் போல் அவளது ராஜ்யாதிகாரம் தான் நடக்கும், மருமகள் அவளுக்கு ஊழியம் செய்து கொண்டிருப்பாள் என்று உறுதி கூறுவான். அதன் பேரில் அவள் பிணக்குத் தீர்ந்து, விவாகத்துக்கான காரியங்களை ஆரம்பிப்பாள்.

ராய்பூர் ஜில்லாவிலுள்ள மலை ஜாதியினரின் விவாக முறை வேடிக்கையானது! இங்கே பெண்களுக்கு உயர்ந்த மதிப்பு. பிள்ளையின் தந்தை பெண்ணைப் பெற்றவரிடம் சென்று, "உங்கள் வீட்டில் மணமிக்க, மலரொன்று உளதே. அதன்மணம்

எங்கள் கிராமமெங்கும் வீசி யாவரையும் மயக்குகிறது. அதைப் பறித்து நாங்கள் எங்கள் கிராமத்துக்கு எடுத்துச் செல்ல விரும்புகிறோம்'' என்று கூறுவார். பெண்ணின் தந்தை இந்தச் சம்பந்தத்துக்கு உடன்படுவதானால், 'பிறருக்கு மணம் அளிப்பதற்கென்றுதானே மலர் உள்ளது. நீங்கள் இப் புஷ்பத்தை எடுத்துச் செல்வதில் எனக்கு ஆட்சேபணையில்லை,'' என்று கூறுவார். இதன்பின் பெண்ணின் பெறுமானம் வரதக்ஷிணை முதலியவை பற்றிப் பேச்சு நடக்கும். இச்சடங்கு மூன்று நாட்கள் நடைபெறுகிறது ; இதற்கிடையே மூன்று விருந்துகளும் நடக்கும். இவர்கள் வெகு எளிதாக விவாக சம்பந்தம் செய்துகொள்வதைப் போலவே வெகு சுலபமாக அச் சம்பந்தத்தை முறிக்கவும் உரிமையுடையவர்களாக இருக்கின்றனர்.

இதே ராஜ்யத்தில் வாழும் நம்பூரி என்னும் ஜாதியினரிடையே பெண்களுக்கு விவாகம் என்பதே கிடையாதாம். பலர் குமரிகளாகவே ஆயுளைக் கழித்துவிடுகின்றனர். பல நூற்றாண்டுகளாக இவ்வழக்கம் இங்கு இருந்து வருகிறது. ஆனால் இங்குள்ள பெண்கள் தாங்களாகவே யாராவதொரு புருஷனுடன் வாழ முற்பட்டு விடுகின்றனர்.

தென்னிந்தியாவிலுள்ள தமிழ் பேசும் பிராம்மணர்களின் சம்பிரதாயப்படி, மணமகன் காசி யாத்திரை கிளம்புவான். பெண்ணைப் பெற்றவர் அவன் எதிரில் வந்து அவனைத் தடுத்துப் பெண்ணைக் கொடுப்பதாகவும், ஏற்றுக்கொள்ளும்படியும் வேண்டிக்கொள்வார். அதன் பிறகு கல்யாணம் நடைபெறும்.

வைரங்கள் இவ்வளவுதானா ?

சினிமா நக்ஷத்திரங்கள் தங்களைப் பற்றி விளம்பரப்படுத்திக் கொள்வதற்காகத் தங்கள் வாழ்க்கை வரலாறுகள் எவற்றையும் பிரசாரஞ் செய்து கொள்வதற்குத் தயங்க மாட்டார்கள்.

ஒரு ஹாலிவுட் நக்ஷத்திரம் தன்னுடைய வைர ஆபரணங்களனைத்தையும் தன் நாய் விழுங்கி விட்டதென்று பிரசாரஞ் செய்ய யோசித்தாள்.

இப்படிப் பிரசாரஞ் செய்தால் ஒரே நாயின் வயிற்றை நிரப்பும் அளவிற்குத்தான் வைரங்கள் அவளிடம் உண்டு என்ற எதிர்ப்பிரசாரம் கிளம்பும் என்று அவளுடைய சிநேகிதியான மற்றொரு நக்ஷத்திரம் அபிப்பிராயப்பட்டு விட்டாள்.

பீஹாரிலுள்ள பழங்குடிகளின் வழக்கப்படி மணமகன் முதல் ஐந்து வருஷகாலம் பெண்ணின் வீட்டில் வாழவேண்டுமாம். அஸ்ஸாமில் காரோ ஜாதியினரின் கட்டுப்பாடு இன்னும் கடுமையாயிருக்கிறது! அங்கே புருஷன் ஆயுள்முழுவதும் மனைவியின் வீட்டில் தான் வசிக்க வேண்டுமாம்! எப்படியிருக்கிறது ?

சில காட்டு ஜாதியினரிடையே ஒரு திருவிழா நடத்தப்படுகிறது. அதில் பெண்களும், வாலிபர்களும் கூடி இரவில் நடனமாடுவராம். அச்சமயத்தில் ஒரு பையன் விரும்பினால் எந்த ஒரு பெண்ணையும் இழுத்துக் கொண்டு காட்டில் ஓடி ஒளிந்து கொள்வான். விஷயமறிந்த பின் பெற்றோர் இருசாரரும் கூடிப் பேசி மணம்செய்து முடிப்பர்.

பஞ்சாபில் ஓரிடத்திலுள்ளோர் மாப்பிள்ளையைத் துன்புறுத்துவதைக் கூடக் கல்யாணத்தில் ஒரு சம்பிரதாயமாகக் கொண்டுள்ளனராம். கூடியுள்ள பெண்கள் அவனைப் பன்முறை திட்டுவதும், அடிப்பதும் கூட உண்டாம்.

மலையாள ராஜ்யத்தில் நாயர்களுக்கிடையே மணமாகுமுன் 'தாலிக்கட்டு' என்ற சம்பிரதாயம் உண்டு.

ஆனால் இந்தச் சடங்கின் போது தாலி கட்டுபவன் பெண்ணின் கணவனாகக் கருதப்படுவதில்லை. பெண் வயதடைந்த பிறகு அவள் விருப்பம், பெற்றோர்களது சம்மதம் இவற்றையொட்டி 'தாலிக்கட்டு'ச் சடங்கு நடத்தினவனையோ அல்லது வேறு எவனையோ மணந்து கொள்ளலாம்.

மூலம் :—'ராஷ்ட்ரதூத்'
தமிழாக்கம்:— S. சகுந்தலா

மிக நிபுணன்!

"இந்தக் காலத்தில் ஏதாவது ஒரு துறையில் பிரத்தியேகப் பயிற்சி பெற்றால் தான் பிழைக்கலாம்' பிறரால் செய்ய முடியாத எதையாவது நீ செய்வதற்குக் கற்றுக் கொண்டிருக்கிறாயா ?" என்று ஒரு தந்தை தன் மைந்தனைக் கேட்டார்.

"ஆம், கற்றுக்கொண்டிருக்கிறேன். என் கையெழுத்தை என்னாலேயே வாசிக்கமுடியும்" என்றான் மைந்தன்.

அசோகா சுகந்த பாக்குத்தூள்

NANJUNDAN & CO

PROP. C. NANJUNDAN (BOOCHI)

256, RAJA STREET COIMBATORE

Post Box 189 Grams: "BOOCHI" Phone { Res: 603 / Office At 657

Agents For:

COMPLETE RANGE OF TEXTOOL TEXTILE SPINNING MACHINERY

Blow Room Machinery, Carding Engines, Speed Frames, Ring Spinning Frames, Reeling Machines & Bundling Presses.

Manufactured by

TEXTOOL COMPANY LIMITED

COIMBATORE

FOR

Madras, Andhra, Mysore, Travancore and Cochin States

AND

SOLE DISTRIBUTORS

FOR

MESSRS SKINS & LEATHERS LTD.

Manufacturers of

Calf Skins for Roller Covering & Aprons for High Draft Spinning.

198254

Edited, printed and published by E. BALASUBRAMANIAM at the K. M. S. PRESS, 1-C 17, Dinroze Estate, Mount Road, Madras. Associate Editor: N. S. MANI.

...00 008

BINNY & Co. (MADRAS) LTD.

THE BANGALORE WOOLLEN COTTON AND SILK MILLS COMPANY LIMITED

BANGALORE

REGISTERED No. 84359

AGENTS SECRETARIES & TREASURERS

USE **BINNY'S COTSWOL**

For year - round comfort
Available in smart and attractive colours
An excellent material to keep you comfortable in any weather.

AVAILABLE WITH ALL GOOD CLOTH DEALERS.

Manufactured by :—

The Bangalore Woollen Cotton & Silk Mills Co., Ltd., Bangalore City.

Distributors :— **H. A. R. MOHAMED & SONS,**
6 - A, Godown Street, MADRAS - 1.

WOMEN OF TASTE ALWAYS INSIST ON

BINNY'S

Pure Spun Silk & Georgette Sarees

In attractive GOLD BORDERS and shades

Manufactured by :

The Bangalore Woollen Cotton and Silk Mills Co., Ltd., Bangalore City.

Distributors :

H. A. R. Mohamed & Sons

No. 6–A, GODOWN STREET,

Madras-1.

Colourful

BINNY'S FABRICS

The most suitable material for the tropics. These lovely colourful fabrics in beautiful designs such as seersucker, plain and printed Linen, Lustalin Shirtings, Hanava Suitings, etc., are available at our Show Rooms.

VENKATESH VASTRALAYA

Phone: 4688

Retail Show Room:
2, THAMBU CHETTY STREET, MADRAS-1.